வாராந்த சஞ்சிகை
ஓகஸ்ட் 06 - ஓகஸ்ட் 12 /2014

# சுடர் ஒளி

பக்கம் 24
விலை 30/-



## அம்பாந்தோட்டைச் சண்டித்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு செக்கனும் நரகாசுரனும்

பிரமன்

இன்னும் கொஞ்ச நேரத்தில் இருட்டு பூமியை விழுங்கி விட இருந்தது. சரிந்து கொண்டிருந்த சூரியனை நிமிர்த்தி விடுவது போன்ற அவசரத்தோடு வேர்த்து விறுவிறுக்க அப்பா சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்.வந்தவர் சைக்கிளை 'ஸ்ராண்டில்' விடாமல் அப்படியே போட்டு விட்டு விழுந்தடித்து உள்ளே ஓடினார். மேசை லாச்சியை இழுத்து அரக்கப் பரக்க எதையோ தேடினார். அவர் தேடியது கிடைக்கவில்லை என்பதை பரபரப்பான அவரது முகம் சொல்லியது.சாமித்தட்டு, படுக்கையறை மேல்தட்டு,அலுமாரி என்று எல்லா இடமும் தேடிச் சலித்தவர் கடைசியாக கை வைத்தது என்னுடைய கொம்பாஸில். எனக்குப் பகீர் என்றது. அப்பாவின் பொக்கற்றுக்குள் இருந்து 'நைஸாக' எடுத்து வைத்திருந்த 10 ரூபாய்த் தாள் கொம்பாஸுக்குள் தான் இருந்தது. அதை அவர் பார்த்து விட்டால் குற்றவாளிக் கூண்டில் நான் ஏற்றப்பட்டு பூவரசம் கம்பால் நாலு அடி காலில் விழும் வரை விசாரணை தொடரும். எனக்கு பயத்தில் சிறுநீர் முட்டியது.

அடி விழப்போகும் தருணத்துக்காக என்னைத் தயார் படுத்துவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. என்றாலும் ஒரு நப்பாசையில் "அப்பா காசைக்காணக்கூடாது'' என்று வைரவரிடம் மனதார மன்றாடிக் கொண்டிருந்தேன். அன்றைக்கு வைரவர் நல்ல புளுகத்தில் இருந்திருக்க வேண்டும். கொம்பாஸைத் திறந்த அப்பாவின் முகம் மலர்ந்தது. அதற்குள் இருந்த சோக் துண்டை ( வெண்கட்டி ) எடுத்துக் கொண்டு வந்த வேகத்திலேயே சைக்கிளில் சந்திப் பக்கமாகப் பறந்தார்.

என்னால் நடந்ததை நம்ப முடியவில்லை. கொம்பாஸைத் திறந்த உடனேயே ' முழுவியளமாக' முன்னால் நீட்டிக் கொண்டிருக்கும் 10 ரூபாயை அப்பா எப்படிக் காணாமல் விட்டார்? அவருக்கு சின்ன சோக் துண்டு தெரிஞ்சிருக்கேக்க 10 ரூபாயும் தெரிஞ்சிருக்கத் தானே வேணும்.ஏதோ நல்ல காலம்.ஆனாலும் அப்பாவின் அவசரமான பறப்பு ஏதோ ஒரு அசாதாரண சம்பவம் நடந்திருப்பதை சொல்லாமல் சொல்லியது.சந்திக்குப் போய் பார்ப்போமா என்று மனம் தூண்டில் போட்டது. அங்கே போனாலும் "எதுக்கு இஞ்ச வந்தனீ?" என்று ஆக்கள் என்றும் பாராமல் அப்பா சாத்தக் கூடும். ஆனாலும் விடுப்புப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் பயத்தை தோற்கடிக்க கையில் அகப்பட்ட 'ரீ- சேர்ட்டை' போட்டபடியே நானும் சந்திப் பக்கமாக ஓடினேன். அங்கே சந்தியில் பெரிதாக அமைக்கப்பட்டிருந்த 'உறுமல் 'என்று பெரிய எழுத்தில் தலைப்பிடப்பட்ட கறுப்புச் நிற சுவரில் அப்பா எதையோ வெண்கட்டியால் எழுதிக் கொண்டிருந்தார். அவர் எழுவதை வாசிக்க ஏராளமானோர் முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள். இந்தக் காலம் போல அப்போது செல்போனோ ,ரீவியோ , மின்சாரமோ கிடையாது. யாழ்ப்பாணத்தில் எல்லாப் பாதைகளும் பூட்டப்பட்டு பொருளாதாரத் தடையால் வாடி வதங்கிக் கொண்டிருந்தோம். பெற்றோலை கண்ணால் காண்பதே அரிதான காரியம். தொடர்பாடல் என்பது தனியே காலையில் வருகின்ற பத்திரிகைகளையும், கடிதங்களையுமே நம்பியிருந்தது. எனவே ஏதாவது அசாதாரணமான நிகழ்வுகள் நடந்து விட்டால் அதை உடனடியாகவே ஒவ்வொரு கிராமத்திலும் பிரதான சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் 'உறுமல்' என்ற கறுப்பு சுவரில் எழுதுவது வழக்கம். நான் சின்னப்பிள்ளையென்பதால் பின்னால் நின்று பார்த்த போது அப்பா என்ன எழுதுகிறார் என்று தெரியவில்லை. ஒரு மாதிரி கூட்டத்துக்குள் புகுந்து வளைந்து நெளிந்து முன்னால் நான் போவதற்கும் அப்பா எழுதி முடிப்பதற்கும் சரியாக இருந்தது. அவர் எழுதிய செய்தியின் தலைப்பைப் பார்த்ததுமே ஏன் அப்பாவுக்கு 10 ரூபாய் தாள் தெரியாமல் சோக்கட்டி மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தது என்ற உண்மை புரிந்தது.அப்பாவின் புளுகம் என்னையும் தொற்றிக் கொள்ள மீண்டும் ஒரு முறை செய்தித் தலைப்பை வாசித்தேன்.

"அராலியில் கண்ணி வெடித் தாக்குதல். கொப்பேக்கடுவ உட்பட 10 இராணுவத்தினர் பலி"

நான் செய்தியை வாசித்துமுடிப்பதற்கிடையில் சந்தியில் சீன வெடிகளின் சத்தம் காதைப் பிளக்கத் தொடங்கியது. அன்றிரவு முழுதும் எங்களூரில் இரண்டாவது தீபாவளி கொண்டாடப்பட்டது.



லெப்ரினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நவீன நரகாசுரன். போர் முனையிலே எந்த வித ஈவிரக்கமும் பாராத இராணுவத் தளபதி . தமிழினத்தைச் சேர்ந்த குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் எல்லோருமே கொப்பேக்கடுவவின் பார்வையில் ஆயுதம் ஏந்திய புலிகளாகவே தெரிந்தார்கள். எனவே அவர்களை வெட்டியோ சுட்டோ கற்பழித்தோ கொல்வதற்கு தனது படைகளுக்கு கொப்பேக்கடுவ பூரண சுதந்திரம் அளித்திருந்தார். எப்படியும் யாழ்ப்பாணம் முழுதையும் இலங்கை அரசின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்ற கனவோடிருந்த தளபதிகளில் அவரும் ஒருவர். யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதற்காக எந்த விதமான கீழ்த்தர வேலையில் இறங்கவும் அவர் சித்தமாயிருந்தார். கொப்பேக்கடுவ, விஜயவிமலரத்ன ஆகியோரின் வழிநடத்தலில் யாழ்ப்பாணம் மீதான ஆக்கிரமிப்புப் போர் " ஒப்பிரேசன் லிபிறேசன்" என்ற பெயரிடலோடு தொடங்கியது. ஏறக்குறைய இந்த நடவடிக்கை முள்ளிவாய்க்கால் கொடூரங்களுக்கான ஒத்திகையாக இருந்தது. முள்ளிவாய்க்காலைப் போலவே இந்த நடவடிக்கையிலும் வடமராட்சியில் மனிதப் படுகொலைகள் தாராளமாக அரங்கேறின. எறிகணைகள் எல்லா இடமும் வீழ்ந்து வெடித்தன. வடமராட்சியின் வீதிகள் எல்லாம் மயானமாக மாறின. இப்படி அன்றைக்கே ஒரு முள்ளிவாய்க்காலை உற்பத்தி செய்து கொண்டு முன்னேறிய கொப்பேக்கடுவவின் படைகளை மில்லரின் கரும்புலித் தாக்குதல் பார்த்துப் பார்த்து திரும்பி ஓட வைத்தது. அன்றைக்கு ஓடிய படைகள் சில வருடங்களுக்கு யாழ்ப்பாண படையெடுப்பைப் பற்றி கனவு கூட காணவில்லை.

என்றாலும் கொப்பேக்கடுவ தான் வாங்கிய அடிக்கு பதிலடி கொடுத்தே தீருவது என்ற வெறியோடு அலைந்தார். இத்தனைக்கும் சிங்கள மக்கள் மத்தியில் அவர் மாவீரனாக கொண்டாடப்பட்டு வந்தார். அப்போதைய இராணுவத் தளபதியை விட கொப்பேக்கடுவவுக்கே பேரினவாதிகளிடையே அதிக மதிப்பு இருந்தது. எனவே அந்த மதிப்பை குறைய விடாது வைத்திருக்க கொப்பேக்கடுவவுக்கு யாழ்ப்பாணத்தை கைப்பற்றுதல் என்பது கட்டாயமாகிப் போனது.

இந்த முறை திட்டத்தை மாற்றியமைத்தார். 'ஒப்பிரேசன் லிபரேசனில்' களமுனை திறக்கப்பட்டது பலாலி வழியாக வடமராட்சியை நோக்கி. அதுவும் ஒரு முனையூடாகவே படையினர் நகர்ந்திருந்தனர். எனவே இந்த முறை மண்டைதீவு,பலாலி ,ஆனையிறவு,வடமராட்சிகிழக்கு, அராலித் துறை ஆகிய ஐந்து முனைகளிலும் களங்களைத் திறக்க கொப்பேக்கடுவ முடிவெடுத்தார். இவ்வாறு சுற்றி வர போர்க்களங்களைத் திறப்பதன் மூலம் புலிகளைத் திகைக்க வைத்து துரித கதியில் யாழ்ப்பாணத்தை வீழ்த்தி விடலாம் என்று கணக்குப் போட்டார். படைகள் களமுனைகளில் குவிக்கப்பட்டன. கவச வாகனங்கள் டாங்கிகள் ஆயுதங்கள் எல்லாம் பெருந்தொகையாகக் கொண்டு வரப்பட்டன. தாக்குதலுக்கான ஏற்பாடுகள் எல்லாம் தயார். ஓகஸ்ட் 09 ஆம் திகதி யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதற்கான தன்னுடைய பாய்ச்சலை நிகழ்த்த கொப்பேக்கடுவ நாள் குறித்திருந்தார்.

தாக்குதலுக்கான ஏற்பாடுகளை எல்லாம் சரி பார்ப்பதற்காக தன்னுடைய சக தளபதிகள் சகிதம் ஐந்து களமுனைகளுக்கும் திடீரென வந்திறங்கினார் கொப்பேக்கடுவ. எல்லாமே அவருக்கு திருப்தியாக இருந்தன. கடைசியாக அவர் அராலித் துறை முன்னரங்க நிலைகளை பார்வையிடுவதற்காக லாண்ட் ரோவர் வாகனத்தில் விஜய விமலரத்ன ,ஜெயமகா உள்ளிட்ட தளபதிகளோடு யாழ்ப்பாணத்தை பிடித்து விட்டதைப் போன்ற மமதையோடு கும்மாளமிட்டபடி சென்று கொண்டிருந்தார். முன்னரங்க நிலைகள் இன்னும் சற்றுத் தூரம் தான் .



ஆனால் திடீரென எழுந்த பேரோசை தூக்கி வீசியது லாண்ட்ரோவரை. யாழ்ப்பாணத்தை பிடிக்க கனவு கண்ட நவீன நரகாசுரன் கொப்பேக்கடுவவும் 10 தளபதிகளும் கூண்டோடு உடல் சிதறிப் போனார்கள். இது நிகழ்ந்தது 08.08.1992 . மேஜர் கார்வண்ணன் தலைமையிலான விடுதலைப்புலிகளின் சிறப்பு வேவு அணியினர் வெற்றிகரமாக இந்தக் கண்ணிவெடித் தாக்குதலை நிறைவேற்றியிருந்தார்கள்.

பெரும் உயிரிழப்புகளோடு எதிர்கொள்ளவேண்டிய ஒரு படை நடவடிக்கையை ஒரு செக்கனிலேயே முடித்திருந்தார்கள் புலிகள். கொப்பேக்கடுவவின் சாவோடு இன்னும் சில வருடங்களுக்கு யாழ்ப்பாணத்தைப் பிடிக்கும் கனவை பேரினப் படைகள் ஒத்திப் போட வேண்டியிருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காஸா இன்னொரு முள்ளிவாய்க்கால்

■ றெக்ஸி கலைச்செல்வன்



மீண்டும் பலஸ்தீனர்களின் பிரச்சினை உலக ஊடகங்களில் முதலிடம் பிடித்துள்ளது. அந்த மக்களின் வாழ்விடங்களின் மீது நடத்தப்படும் கொலைவெறித்தாக்குதல்களை நாகரிகமாக வளர்ந்த எந்த மனிதனாலும் நியாயப்படுத்த முடியாது. அந்த மக்களின் அவலத்தைப் பார்க்கும் போது 2009இல் முள்ளிவாய்க்கால் துயரை தமிழர்களுக்கு நினைவுபடுத்தலாம். மக்கள் ஒருவிதமான முற்றுகைக்குள் இருக்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கான தீர்வுதான் என்ன. பல்லாண்டுகாலமாக இழுபடும் இந்தப் பிரச்சினைக்கான தீர்வை இலகுவில் கூறிவிடவோ எட்டிவிடவோ முடியாது. மனிதனுக்குள் மனித நேயம் இல்லாமல் நான் பெரிது, நீ பெரிது, எனது மதம்தான் பெரியது எனது இனம்தான் சிறந்தது , என்ற மனநிலை மாறி மனிதனை மனிதன் ஒன்றே என்ற காரணத்துக்காக மதிக்கவும் நேசிக்கவும் தொடங்கும் வரை இப்படியான அவலங்கள் தொடரத்தான் செய்யும்.

ஹமாஸ்ும் இஸ்லாமிய ஜிகாதி இயக்கமும் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துவதாக இஸ்ரேல் கூறுகிறது. இது ஒரு அபத்தமான குற்றச்சாட்டு. காஸா ஒரு துண்டு நிலம். 51 கி.மீ நீளமும் சுமார் 11 கி.மீ அகலமும் உள்ள இந்தத் துண்டு நிலத்தில் 18 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இதற்குள் நின்று மக்களுக்கு மத்தியில்தான் போராளிகளும் இருந்து போரிட்டாக வேண்டும்.

இந்தத் துண்டு நிலத்தின் ஒரு பக்கம் கடல். கீழ்ப்பக்கம் எகிப்து. வலப்பக்கம் இஸ்ரேல். கடலோரத்தில் இஸ்ரேலுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் சுமார் 86 வீதமான பிரதேசத்தை பாதுகாப்புப் பகுதி (Buffer Zone) என இஸ்ரேல் அறிவித்து தன்னுடைய கண்காணிப்பில் வைத்துள்ளது. தங்களுடைய உலகத் தொடர்புகள் பலவற்றையும் பலஸ்தீனர்கள் இஸ்ரேலின் ஊடாகத்தான் நிறைவேற்றிக் கொள்ளமுடியும். இதற்கான தரைவழிப் பாதைகள் 6 ஐயும் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது இஸ்ரேல். நிலப்பகுதியிலும் சுமார் 15 சதவீதத்தைப் பாதுகாப்புப் பகுதியாக அறிவித்து அதையும் தன் கண்காணிப்பில் வைத்துள்ளது. கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு விளை பொருள்கள் உற்பத்தி ஆகிக் கொண்டிருந்த நிலம் இது.

ஆக பலஸ்தீனியர்கள் இன்று ஒரு முற்றுகை இடப்பட்ட மக்கள். காஸா ஒரு மிகப் பெரிய அகதிகள் முகாம். நிரந்தரமாக அவசரநிலை அறிவிக்கப்பட்ட பகுதி..

இந்தப் பின்னணியில்தான் இன்றைய போர் நடந்து வருகிறது. காஸாவும், மேற்குக் கரையும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் என்பதையும், தான் ஒரு ஆக்கிமிப்பாளன் என்பதையும் இஸ்ரேல் ஏற்பதில்லை. இறையாண்மை உள்ள பகுதிகளை கைவசப்படுத்தி இருந்தால்தான் அதன் பெயர் சர்வதேசச் சட்டப்படி ஆக்கிமிப்பாம். காஸாவும் மேற்குக்கரையும் எகிப்து மற்றும் ஜோர்டானின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளாம். எனவே அவை இறையாண்மை உடைய நாடுகள் இல்லையாம். எனவே அவற்றில் வன்முறையாக நுழைந்து குடியமர்த்துவதை "ஆக்கிரமிப்பு' எனச் சொல்லக் கூடாதாம். சட்டம் பேசுகிறது இஸ்ரேல் ஒத்தூதுகிறது அமெரிக்கா.

பலஸ்தீனிய அமைப்புகளிடம் ஒற்றுமை இல்லை என்பது ஊரறிந்த உண்மை. 2006 இல் தொடங்கி காஸா ஹமாசின் கட்டுப்பாட்டிலும், மேற்குக்கரை ஃபடா அமைப்பின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வந்தன. ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாதிப் போராளிகள் கைது செய்யப்படுவதில் ஃபடா அமைப்பு இஸ்ரேலுடன் இணைந்து செயற்பட்டது என்கிற குற்றச்சாட்டும் உண்டு. எனினும் நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பின் இந்தவருடம் ஏப்ரல் 23 அன்று ஹமாசும் ஃபடாவும் இணைந்து காஸாவில் "ஒற்றுமை அரசு" அமைக்க முடிவெடுத்ததை இஸ்ரேல் எரிச்சலுடன் பார்த்தது. இத்தனைக்கும் அந்த ஒப்பந்தத்தில் 1967இல் இருந்த நிலையில் இஸ்ரேல் எனும் நாட்டை அங்கீகரிப்பது, வன்முறைகளை நிறுத்திக் கொள்வது முதலான அம்சங்களும் இருந்தன. ஹமாஸ் இதுவரை இஸ்ரேல் எனும் நாட்டை அங்கீகரித்ததில்லை.

இஸ்ரேல் இன்று இத்தனை ஆத்திரத்துடன் தாக்குதல் நடத்துவதன் பின்னணியில் ஹமாஸ், ஃபடா இரண்டையும் முற்றிலும் எதிர் எதிராக நிறுத்தி இப்போது உருவாகியுள்ள இந்த "ஒற்றுமையை"க் குலைப்பதும் ஒரு நோக்கமாக உள்ளது. எகிப்து உருவாக்கிய போர் நிறுத்தத் திட்டத்தை ஹமாஸ் நிராகரித்ததை இன்று ஃபடா அமைப்பின் தலைவர் அப்பாஸ் கண்டித்துள்ளார். இன்றைய எகிப்து அரசு ஹமாஸ்க்கு எதிரானது என்பது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் இஸ்ரேலின் போர் நிறுத்த ஒப்புதலை நம்பவே இயலாது. அப்படித்தான் 2008 இல் போர் நிறுத் ததுக்கு முதலில் ஒப்புக் கொண்ட இஸ்ரேல், கைதாகியுள்ள ஒரு இஸ்ரேலியர் விடுதலை செய்யப்பட வேண்டும் என ஒரு காரணத்தைச் சொல்லிப் போரைத் தொடர்ந்தது. அந்தப் போரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

மத்திய கிழக்கில் அமைதி ஏற்படுவதற்கு ஒரே வழி "இரு நாட்டுத் தீர்வு" (Two Nation Solution) எனப் படும் ஐ.நா.தீர்மானத்தை உரிய திருத்தங்களுடன் நிறைவேற்றுவதுதான். 1967 நவம்பர் 22இல் இயற்றப்பட்ட ஐ.நா தீர்மானம்(எண்- 242) மற்றும்1974 நவம்பர் 22இல் உள்ளடக்கப்பட்ட பலஸ்தீனியர்களின் உரிமைக்கான இணைப்பு ஆகியவற்றின் ஊடாக உருப் பெற்ற இந்தத் தீர்வு இன்று வரை நடைமுறைப் படுத்தப்படவில்லை. இஸ்ரேலும் அமெரிக்காவும் அதைத் தடுத்து நிறுத்தி வருகின்றன. பலஸ்தீனர்கள் 1967 தீர்மானத்தில் அதிருப்தி கொண்டிருந்த போதிலும் பின்னர் அதை ஏற்றுக்கொண்டனர். பலஸ்தீனம், இஸ்ரேல் எனும் இரு நாடுகளை உரிய எல்லை மற்றும் இறையாண்மையுடன் உருவாக்குவது என்பதுதான் அந்தத் தீர்மானம். 1967க்கு முந்திய நிலையின் அடிப்படையில் இந்த எல்லைகள் தீர்மானிக்கப்படும் என்பது முக்கிய அம்சம். அதாவது 1967 போரில் இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து அது வெளியேறுவதையும், அகதிகளாக வெளியேறிய பலஸ்தீனர் நாடு திரும்புவதையும் அது உள்ளடக்குகிறது.

அப்படி பலஸ்தீனமும் இஸ்ரேலும் இறையாண்மையுள்ள இரு தனித் தனி நாடுகளாக உருவாகாத வரை இப்படித்தான் பலஸ்தீனிய இனம் அழிக்கப்படுவதும் உலகம் அதை வேடிக்கை பார்ப்பதும் தொடரும்.

இன்றைய போர் குறித்து ஜெருசலேம் பல்கலைக்கழகப் பேராசிரியர் டேவிட் ல்மான் பின்வருமாறு கூறுகிறார்., "இன வெறுப்பு மற்றும் படுகொலைகளை விடக் கொடியது, அதைக் காணும் மற்றவர்களின் மௌனம்தான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலம் பிடுங்கும் அரசு

அஞ்சலி



**"30 வருட கால போர் முடிவுற்று நாட்டில் சமாதானம் ஏற்பட்டு விட்டது. பயங்கர வாதத்தை ஒழித்து விட்டோம்" என அரசு சர்வதேசத்துக்கு தெரிவித்து வருகின்ற இன்றைய காலப்பகுதியில் நில ஆக்கிரமிப்பு என்னும் பிசாசு இன்னமும் தமிழர் தாயகப் பகுதியில் தலைவிரித்தாடியே வருகிறது. இதற்கு அரச திணைக்களங்களும் அங்கு பணியாற்றும் உயர் அதிகாரிகளும் தாளம் போட்டு வருகின்றனர்.**

தமிழர்களுடைய உரிமைப் போராட்டம் 30 வருடங்களுக்கும் மேலாக நீட்சியாக நடைபெற்று வருகின்றது. போராட்டத்தின் வடிவங்கள் மாறுகின்றபோது போராட்டம் ஏதோ ஒரு வடிவத்தில் தொடரவே செய்கிறது. இதனால் தமிழர் என்றால் போராட்டக்காரர்கள் என்றே அடையாளப்படுத்தப்படுகிறார்கள். தமிழர்கள் போராடினால் தான் இலக்கை அடையலாம் என்ற கருத்துருவாக்கம் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவர் மனங்களிலும் பதியப் பட்ட ஒன்று. மூன்று தசாப்தங்களாக தமிழர்களின் போராட்டம் நீள்கின்ற போதிலும் இன்னமும் அவர்களுடைய பிரச்சினைகள் தீர்வதாகத் தெரியவில்லை.

தமிழர்களின் பிரச்சினையும் போராட்டமும் இன்னமும் தொடர்வதற்குக் காரணம் இலங்கையில் ஆட்சிக் (கட்டிலை) மாறி மாறி அலங்கரிக்கும் அதிகார வர்க்கத்தினரும் அவர்கள் கொண்டு வரும் சட்டங்களும் தான். ஒரு விடயத்தை சட்ட ரீதியாக அணுகிவிட்டால் அது குறித்து எத்தகைய விமர்சனங்களோ அல்லது மேலதிக செயற்பாடுகளையோ மேற்கொள்ள முடியாது என்று சட்டத்தில் கூறப் பட்டுள்ளது. மாறாக சட்டத்தை மீறிவிட்டால் அதற்கான தண்டனைகளும் வழங்கப்படும். எனினும் இந்தச் சட்டங்கள் பொதுமக்களுக்கு மட்டும் தானா? இவை இராணுவத்துக்கும், பொலிஸாருக்கும் பொருந்தாதா? என்ற கேள்வி ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் எழுவது போன்று சம்பவங்கள் நடந்து வருகின்றன.

சட்டம் என்பது குறித்த நாட்டில் உள்ள பிரஜைகள் அனைவருக்கும் உரியதே. இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் விலக்களிப்பு உண்டு என எந்தவொரு சட்டக் கோவையிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான நிலையில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனிச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுவது போன்றே தோன்றுகிறது.


"30 வருட கால போர் முடிவுற்று நாட்டில் சமாதானம் ஏற்பட்டு விட்டது. பயங்கர வாதத்தை ஒழித்து விட்டோம்" என அரசு சர்வதேசத்துக்கு தெரிவித்து வருகின்ற இன்றைய காலப்பகுதியில் நிலஆக்கிரமிப்பு என்னும் பிசாசு இன்னமும் தமிழர் தாயகப் பகுதியில் தலைவிரித்தாடியே வருகிறது. இதற்கு அரச திணைக்களங்களும் அங்கு பணியாற்றும் உயர் அதிகாரிகளும் தாளம் போட்டு வருகின்றனர்.

பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த நிலங்களில் ஒரு குழி நிலத்தைக் கூட யாரும் அடாத்தாக எடுத்தால் வானத்துக்கும் பூமிக்கும் குதிப்பவர்கள் நம்மவர்கள். அப்படிப்பட்ட மக்கள் ஏக்கர் கணக்கில் தம்முடைய பூர்வீக நிலங்களை விட்டுக் கொடுப்பார்களா?

போர்க்காலத்தில் படைக்குவிப்பு, இராணுவ முகாம்கள் அமைப்பு, உயர் பாதுகாப்பு வலயம் என்று இருந்ததைப்போல் இப்போதும் இருக்கமுடியாது. "போர் முடிவுற்று பயங்கரவாதம் ஒழிக்கப் பட்டு சமாதானமாகவும் சுதந்திரமாகவும் நாட்டு மக்கள் வாழ்கின்றனர்" என அரசினால் அறிவிக்கப்பட்ட நிலையில் 5 வருடங்களைக் கடந்தும் போர்க்காலக் கட்டமைப்புடன் தான் முப்படைகளும் தமிழர் தாயகப்பகுதியில் நிலை கொண்டுள்ளன. இப்போதும் படைத்தரப்பு "அரச காணியில் முகாம் அமைக்கின்றோம்" என்று கூறிக்கொண்டு தனியார் காணிகளையே விழுங்கி வருகின்றன.

வடக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மட்டும் 6300 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப் பரப்பை உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் படைத்தரப்பு தன்வசம் வைத்துள்ளது. இதில் அரச காணிகளை விட தனியார் காணிகளே அதிகம். மக்கள் பரம்பரை பரம்பரை யாக வாழ்ந்து வந்த இடங்கள், பாடசாலைகள், பிரசித்திபெற்ற கோயில்கள், தேவாலயங்கள், தோட்டக் காணிகள், வயல்கள் என வளம் கொழிக்கும் பூமிகள் எல்லாம் சீருடை போர்த்தப்பட்டு இராணுவத்தின் பிடிக்குள் வைக்கப்பட்டுள்ளன. "விமானநிலையத்தை விஸ்தரிக்கவுள்ளதால் மக்கள் இருப்பது கடினம்" என்பன போன்ற போலியான அபிவிருத்திக் கதைகளைக் கூறிக்கொண்டு தங்களுடைய சுகபோக வாழ்க்கைக்கே பயன்படுத்தி வருகின்றனர். மக்கள் நிலங்கள் அனைத்தையும் தங்கள் வசப்படுத்திக் கொண்ட படையினர் அவற்றில் விருந்தினர் விடுதிகள், விளையாட்டு மைதானங்கள், தோட்டங்கள், பாற்சாலைகள் என்பவற்றை அமைத்து தங்களுக்கு வருமானம் தேடி வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் விவசாயம் பெருவாரியாக மேற்கொள்ளப் பட்டு வந்த இடம் வலி.வடக்கு. விவசாயத்துக்கு உகந்த 'செம்பாட்டு' மண்ணைக் கொண்ட பூமியில் இராணுவமே இன்று விவசாயம் செய்து வருகின்றது. நிலத்துக்கு உரித்தான மக்கள் பட்டினியில் வாடும்போது அவர்களது நிலங்களை அடாத்தாகப் பிடித்து பயிர் செய்து எங்கிருந்தோ வந்தவர்கள் சம்பாதிக்கின்றனர்.





30 ஏக்கரை பறிகொடுத்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை நிலச் சொந்தக் காரர்கள் ஏற்றுக் கொள்வார்களா? வலி.வடக்கு மக்கள் 25 ஆண்டு காலமாக தங்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேறி உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும், நலன்புரி முகாம்களிலும் இருந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர். முகாம்களில் வாழும் மக்கள் மலசலகூடம், தண்ணீர் , மின்சாரம், என்பன போன்ற அடிப்படை வசதிகளே இல்லாத நிலையிலேயே வாழ்கின்றனர். 10 குடும்பத்துக்கு ஒரு மலசல கூடம், 15 குடும்பத்துக்கு ஒரு தண்ணீர்க் குழாய் என்று அவர்களின் அடிப்படைத் தேவைகள் சிக்கலான நிலையிலேயே இன்றும் உள்ளன.

இதற்கும் மேலாக மாணவர்களது கல்வி பாதிக்கப்படுகின்றது. இதற்குக் காரணம் பெற்றோர் தான். எனினும் அவர்களையும் பிழை என்று கூற முடியாது. தங்களது பரம்பரைத் தொழில்களை விட்டு நாளாந்த கூலிகளாக மாறியே அவர்கள் சீவியத்தை போக்கி வருகின்றனர். இந்த நிலையில் எவ்வாறு பிள்ளைகளை கவனிப்பது? இவ்வாறு முகாம்களில் வாழும் மக்கள் கூட்டுக் குடும்பங்களாகவும், நெருக்கமான வீடுகளைக் கொண்டும் வாழ்வதனால் கலாசார பிறழ்வுகள் சிறுவயது திருமணம் போன்றன நிகழவும் அதிகளவு சந்தர்ப்பங்கள் உருவாகின்றன. இதை விட முகாம்களில் இருந்து பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகள் ஏனைய மாணவர்களினால் ஒதுக்கப்படுகின்றனர். முகாமில் இருந்து வருபவர்கள் என்றால் ஏதோ சாக்கடையில் இருந்து வருபவர்கள் போலவே நடத்தப்படு கின்றனர். சொத்துகள், சுகங்களுடன் வாழ்ந்தவர்கள் இன்று எதுவும் இன்றி வாழ்கின்றபோது தங்களுடைய நிலங்களை யாரோ, எவருக்கோ விட்டுக் கொடுப்பார்களா? தமிழர் தாயகம் எங்கும் பார்க்கும் இடமெல்லாம் இராணுவ முகாம்களை அமைத்திருக்கும் அரசு படைத்தரப்பின் தேவைக்காக மக்களின் வயிற்றில் அடித்து அவர்களின் நிலங்களை நிரந்தமாக பிடுங்க நினைக்கிறது.

இன்றைக்குப் போக விடுவார்கள்" "நாளைக்குப் போகவிடுவார்கள் " என்று பலர் தாங்கள் சொந்த வீட்டுக்கு, சொந்த நிலத்துக்கு மீளச் செல்லும் நாளை எதிர்பார்த்து காத்திருந்தனர். ஆனால் அப்படிக் காத்திருந்தவர்களுக்கு அவர்களது நிலங்களை அரசுக்கு தாரை வார்க்கும் நோக்குடன் நில அளவைத்திணைக்களத்தினர் அளவீடு செய்யும் பணியை முனைப்புடன் செய்து வருகின்றனர்.



அளவீடு செய்ய வேண்டிய இடங்களை ஒவ்வொரு பிரதேச செயலரும் அறிவிக்க அடுத்த நாளே ஓடி வந்து விடுகிறார்கள் நில அளவைத் திணைக்களத்தினர். ஆனால் அவர்கள் இவ்வாறு அபகரிப்புக்காக அளவீடு செய்யப் போகும் தகவல் எப்படியோ மக்களுக்கு கசிந்து விடுகின்றது.

மறுநாள் உத்தியோகத்தர்கள் அளவீடு செய்யும் இடத்துக்கு வர முன்னரே மக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் , பிரதேச சபை யினரும் என திரண்டு வந்து தங்கள் நிலத்தை இழக்காதிருக்க போராடுகிறார்கள். இந்தப் போராட்டத்தால் அப்போதைக்கு அளவீட்டுப் பணிகள் தடைப்பட்டாலும் மக்கள் ஏமாறும் சமயம் பார்த்து குறித்த அளவீடுசெய்து முடிக்கப்படுகிறது.

அண்மையில் வலி.வடக்கில் கடற்படைக்கு என சுவீகரிக்கப்பட்ட காணியின் அளவீடு 3 தடவைகள்போராட்டத்தால் கைவிடப்பட்டிருந்தது. எனினும் நான்காவது தடவை மக்களது கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு இராணுவத்தினர் பயன்படுத்தும் பாதை யூடாக அளவீட்டுக் காரர்கள் அழைத்துச் செல்லப்பட்டு 35 குடும்பங்களுடைய 183 ஏக்கர் நிலப்பகுதி அளவீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் தங்களுடைய காணி தங்களுக்கே தேவை என மக்கள் விடாப்பிடியாக நிற்கின்றனர். இது தொடர்பில் மனித உரிமை ஆணைக் குழு, பொலிஸ் நிலையம் என்பவற்றிலும் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். இவ்வாறு அச்சுவேலி, நெடுங்கேணி, மிருசுவில் ஆசைப்பிள்ளையேற்றம் போன்ற பகுதிகளிலும் காணி அளவிடும் முயற்சிகள் மக்களின் போராட்டங்களால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. மிருசுவில் ஆசைப்பிள்ளையேற்றம் பகுதியில் அண்மை யில் 52 ஆவது படைப்பிரிவின் தலைமையகம் புதிதாக அமைக்கப்பட்டிருந்தது. இது தனிநபர் ஒருவருக்குச் சொந்தமான காணியாகும். ஆனால் அதனை உரிய பணம் கொடுத்துப் பெற் றுக் கொண்ட பின்னரேபடைத் தலை மையகத்தை அமைத்ததாக அரசு கதை விட்டிருந்தது. ஆனால் தனக்கு ஒருசதம் கூட தராமல் காணியை இராணுவம் விழுங்கி விட்டதாக நிலத்தின் உரிமையாளர் வேதனையோடு இந்த போராட்டத்தின் போது தெரிவித்திருந்தார்.

"என்ர காணி எனக்கு வேணும். இதை நம்பித் தான் என்ர 5 பொம்பிளப் பிள்ளைகளும் இருக்கு.எனக்கு காசு பொருள் ஒண்டும் தர வேண்டாம். காணியை தாங்கோ. நான் இப்பிடி நடக்கும் எண்டு நினைக்கேல்ல. எல்லா இடத்திலயும் இருக்கிறது போல இருந்திட்டு போய்விடுவாங்கள் எண்டு தான் நினைச்சன். இப்ப பார்த்தால் ஒரு மாளிகையை கட்டி வைச்சிருங்கிறாங்கள். ஐயோ எனக்கு என்ர காணி வேண்டும். எங்கட காணியை 2012 இல வந்து திருத்தினம். அப்ப 'காணியை திருத்த வேண்டாம் இது மேலிடத்து உத்தரவு' எண்டு ஆமிக் காரர் சொன்னாங்கள். அதுக்கு பிறகு சின்ன சென்றி பொயின்ட் ஒண்டு முன்பக்கத்தில் போட்டாங்கள்.

பிறகு பொலிஸ் ஸ்ரேசனில என்னை கூப்பிட்டு காணி தொடர்பாக விளங்கினவை. பெருமாள் கோயிலடியில் வைச்சு காணியை பெற்றுத்தருவதாக கூறி தனிச்சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதம் ஒண்டில என்னட்ட 'சைன்' வாங்கினவை. நான் யாருக்கும் காணியை விற்கவில்லை." என்று அந்தக் காணிக்கு உரித்தான பெண் கதறி அழுகிறார். நிலத்தை ஆக்கிரமிக்கும் படையினரின் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்ற, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொலிஸாரும் துணை போகின்றனர்.

நில அபகரிப்பை எதிர்த்து நீதிமன்றத்தில் நில உரிமையாளர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஒரு வழக்கு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்ட பின்னர் அந்த நிலத்தில் எவருமே எந்தவொரு செயற்பாட்டையும் செய்ய முடியாது. ஆனால் நீதிமன்ற அனுமதியோ அறிவித்தலோ இன்றி நில அளவைத் திணைக்களத்தினர் படையினரின் ஏவலின் பேரில் நிலங்களை அளக்க முற்படுகிறார்கள். இது நீதிமன்று அவமதிப்பு இல்லையா? இதனைத் தட்டிக் கேட்க யாரும் இல்லையா? சட்டமும், நீதியும் படையினரின் முன்னால் பேசா மடந்தைகளா?

பரம்பரை பரம்பரையாக ஆண்டு வந்த மண்ணை நம்பித் தான் ஒவ்வொருவரினதும் வாழ்க்கை நகர்ந்து செல்கின்றது. "இந்த காணி எனக்கு .அந்த காணி உனக்கு. மற்றையது மூத்தவளுக்கு" என்ற அடையாளப்படுத்தல்களுடன் கனவுகள் விதைக்கப்பட்டிருந்தன. குறித்த காணிகளை நம்பி எத்தனையோ திருமணங்கள் காத்திருக்கின்றன. காணிகள் படையினர் வசம் இருப்பதால் எத்தனையோ பெண்கள் இன்னும் திருமணம் முடிக்காது உள்ளனர்.

சட்டமும், நீதியும் இனியாவது பக்கம் சாராமல் மக்களின் குறை தீர்க்கும் வகையில் செயற்பட வேண்டும். அவ்வாறில்லாத பட்சத்தில் அபகரிக்கப்பட்ட காணிகள் மீளக் கிடைப்பது என்பது கானல் நீராக மாறிவிடும்.

# பாலியல் பிசாசுகளிடமிருந்து பிள்ளைகளைக் காப்போம்

வைஷ் சண்

எமது சமூகத்தில் ஆங்காங்கே ஒன்றிரண் டாக இருந்த பாலியல் வன்முறைகள் தற் போது சடுதியாக அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. இதற்கான காரணம் பாலியல் பற்றிய அறிவு இல்லாமல் குழந்தைகள் வளர்க்கப்படுகின்றமையாகும். பெற்றோர் களினால் பாலியல் பற்றிய அறிவுபுகுத்தப் பட்டு ஒவ்வொரு குழந்தையும் வளர்க்கப்பட வேண்டும். குழந்தைகளுக்கான பாலியல் தொடர்பான அறிவியல் ரீதியான விளக்கங் கள் வீட்டிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். உங்கள் குழந்தை உங்களிடம் பாலியல் தொடர்பாக கேட்கும்போது மறைக்கா மல் அந்தக் குழந்தைக்கு புரியும்படியாக பதிலளியுங்கள்.

வீட்டில் ஆண்குழந்தைகளும் பெண்குழந்தைகளும் இருக்கும்போது ஒருவரை ஒருவர் மதிக்கக் கற்றுக் கொடுங்கள். ஆண்குழந்தைகளுக்கு எப்படி பெண் குழந்தைகளை அணுகுவது என்றும் பெண் குழந்தைகளுக்கு எப்படி ஆண் குழந்தைகளை அணுகுவது என்றும் சொல்லிக் கொடுங் கள். அவர்களைச் சரிசமமாக நடத் துங்கள். சகஜமாக ஒருவரோடு ஒருவரை பழக அனு மதியுங்கள். உங்கள் குழந்தைகளுடன் நீங்கள் நெருங்கிய நண்பரைப் போலப் பேசிப் பழகுங்கள். அவர்களுக்கு பாலி யல் தொடர்பான விடயங்களை அறிவுறுத்துங்கள்.

பாலியல் தொடர்பான பிரச்சினைகள் பற் றியோ அல்லது அது தொடர்பான விடயத்தைப் பற்றியோ பேசுவது தொடர்பான தயக்கத்தை உங்கள் குழந்தையிடமிருந்து களைந்தெறியுங்கள். ஏனைய விடயங்களைப் போல இது தொடர்பாகவும் தயக்கமின்றிப் பேசக்கூடிய சூழ்நிலையை உங்கள் குழந்தைக்கு ஏற்படுத்துங்கள்.

சில விடயங்களை உங்களால் கூற முடியாது இருக்கும். அவ்வாறான விடயங்களை புத்த கங்கள், சஞ்சிகைகள் மூலமாக உங்கள் குழந்தைகளுக்கு புகுத்துங்கள். ஆபாசமாக உரையாடுவதையோ அல்லது உடுப்ப தையோ வீடுகளில் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

எல்லோருமே ஆண்குழந்தைகளாக இருக்கும் குடும்பத்தில் பெண்பிள்ளைக ளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை அவ்வாறான விட யங்களை உங்கள் குழந்தைகளுக்கு எடுத் துச் சொல்லுங்கள்.

எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தை தான். அது நல்லவராவதும் தீயவராவதும் பெற்றோர் வளர்ப்பினிலே. குழந்தைகளுக்கு கல்வியை மட்டும் கொடுப்பதுடன் பெற்றோரின் கடமை முடிவதில்லை. சமூகத்தில் நல்ல மனிதனாக இருப்பதற்கு அறிவுரை கூறி வளர்ப்பதன் மூலம் ஒவ்வொரு பெற்றோரும் சிறந்த சமூகவியலாளராக முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சும்மா கிடந்த சங்கை...

தொடர்ச்சியாக இலங்கை அரசைக் குறைகூறி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு கடிதங்களை அனுப்பிக்கொண்டிருப்பது இலங்கையரசுக்கு புகைச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. முன்னர் மன்மோகன் சிங் பிரதமராக இருந்த போதும் ஜெயலலிதா இதோபோன்று கடிதங்களை அனுப்பவே செய்தார். ஆனால் அப்போது அதுபற்றி இலங்கை அலட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில் மன்மோகன்சிங்கின் கையாலாகாத் தனம்பற்றி இலங்கைக்கு நன்கு தெரியும்.

மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதுவதும் ஒன்றுதான். புறக்குடத்தில் தண்ணீர் ஊற்றுவதும் ஒன்றுதான். இரண்டுமே ஒன்றுக்கும் உதவாத காரியங்கள். மேலும் காங்கிரஸ் அரசின் கூட்டணியில் அ.தி.மு.க. இருக்கவில்லை. ஆனால் அந்தக் கூட்டணியில் அ.தி.மு.க.வின் பரம வைரியான தி.மு.க. இருந்தது. இதுவும் மன்மோகன் சிங் ஜெயலலிதா வின் கடிதத்தை கணக்கே எடுக்கமாட்டார் என்று கருதுவதற்கு ஒருகாரணம்.

ஆனால் இப்போது நிலைமை அப்படியல்ல. ஏற்கனவே மோடியும் ஜெயலலிதாவும் நெருங்கிய நண்பர்கள். அத்தோடு மன்மோகன் சிங்கைப் போலல்லாமல் எதையும் உடனடியாகவே தீர்த்துவைக்க துரித நடவடிக்கை எடுப்பவர் நரேந்திரமோடி. ஆகவே முன்னரைப் போல தமிழக முதலமைச்சரால் அனுப்பப்படும் கடிதங்கள் கிடப்புக்குள் போடப்படாமல் அதுகுறித்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இந்தியா இறங்கக்கூடும். அப்படி இறங்கினால் அது இலங்கைக்கே பாதகமாகிவிடும்.

நரேந்திரமோடி இலங்கை விடயத்தை மறந்திருந்தாலும் அதனை அடிக்கடி கடிதம் எழுதி ஜெயலலிதா ஞாபகப்படுத்தி விடுகின்றார் என்றே இலங்கைக்கு கோபம். அந்தக் கோபத்தை காட்ட வழிதெரியாமல்தான் கடந்தவாரம் இலங்கை இராணுவத்தின் உத்தியோக பூர்வ

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:
021 567 7609
sudarolijaffna@gmail.com

இணையத்தளத்தில் தமிழக முதலமைச்சரையும் இந்தியப் பிரதமரையும் அவமரியாதை செய்யும் வகையில் கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

இந்தியப் பிரதமர் மீது காதல் கொண்டே ஜெயலலிதா தொடர்ச்சியாகக் கடிதங்களை எழுதிவருவதாக குறிப்பிடப்பட்டிருந்ததோடு, ஜெயலலிதாவின் காதல் நினைவுகளில் நரேந்திரமோடி இருப்பதான கார்ட்டூனும் வரையப்பட்டிருந்தது.

இந்தக் கட்டுரையை இந்தியாவோ தமிழகமோ சாதாரணமாக எடுத்துக்கொள்ளவில்லை. உத்தியோகபூர்வமாக இந்தியா தன்னுடைய கண்டனத்தை தெரிவிக்க பயந்துபோன இலங்கை உடனடியாகவே அந்தக் கட்டுரையை இராணுவ இணையத்தளத்தில் இருந்து அப்புறப்படுத்திவிட்டது.

ஆனாலும் கொந்தளிப்பு குறையவில்லை. இந்திய மத்திய அரசும், கட்சிபேதமின்றி தமிழக அரசியல் தலைவர்களும் தொடர்ந்தும் இதுகுறித்து இலங்கையைச் சாடிவருகின்றன.

அத்தோடு இலங்கைத் துணைத் தூதரகத்தை தமிழகத்தில் இருந்து அகற்றவேண்டும் என்று கோரி போராட்டங்களும் வெடித்துள்ளன. சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்துவிட்ட இலங்கை என்னசெய்வதென்று தெரியாமல் முழிக்கிறது. எல்லாச் சங்குகளும் நாங்கள் நினைப்பதுபோல் ஊதுவதில்லை. சிலவேளைகளில் அது எங்கள் சாவின் ஒலியையும் எழுப்பிவிடுகின்றன. இலங்கை அதனை இனியாவது புரிந்துகொண்டால் சரி.

# காத்திருக்கும் கழுகுகள்

> போருக்குப் பின்னர் அரசுக்கு பிரதான தலைவலியாக இருப்பது பல்கலைக்கழக மாணவர்களும், ஊடகவியலாளர்களும் தான். எனவே இந்த இரு தரப்பினரையும் அடக்கி அவர்களின் குரல்களை நசுக்க அரசு துடியாய்த் துடித்து வருகிறது. அதற்காக பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவன் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் ஓமந்தையில் ஊடகவியலாளர்களுக்கு கஞ்சாக் கடத்தல்காரர்கள் என்ற முகமூடி அணிவிக்க முயன்ற சம்பவமும் அரசின் இத்தகைய நடவடிக்கைகளின் ஒருபகுதிதான்.

சுதாகரன் (சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் இனந் தெரியாதோரால் தாக்கப்பட்ட மாணவன்)

நான் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்துக்கு வந்து சில மாதம் தான் ஆகிறது. எனது சொந்த இடம் முகமாலை வடக்கு. அண்டைக்கு ஞாயிற்றுக் கிழமை 2 மணிக்கு இருக்கும். பரீட்சைக்காலம் என்றபடியால் இரவிரவாகப் படித்துவிட்டு கொஞ்சம் தூங்கி விட்டேன். பிறகு எழும்பி விடுதிக்குப் பக்கத்தில் இருக்கும் மலசலகூடப் பக்கம் போக வெளிக்கிட்டன். நேரம் அதிகாலை 2.30 மணியிருக்கும். கதவை திறந்து வெளியே வர தலையில் பெரிய அடி விழுந்தது. கண்ணெல்லாம் இருட்டுற மாதிரியிருந்தது. நான் மயங்கிவிட்டேன். பிறகு எழும்பிப் பார்க்க விடுதிக்குப் பக்கத்தில் உள்ள பற்றையொண்டுக்க கிடந்தன். கை பின்னால் கட்டப்பட்டிருந்தது. நான் போட்டிருந்த பனியன் வாய்க்குள் அடையப்பட்டிருந்தது. முதுகெல்லாம் பிளேட்டால் வெட்டப்பட்டிருந்தது. நான் எழும்பி வலியோட கெந்திக் கெந்தி ரூம் பக்கம் வந்தன் என் நண்பன் கண்டிட்டு ஓடி வந்து என்னைத் தாங்கிட்டான். பிறகு வைத்தியசாலைக்கு கொண்டு போய்ச்சினம். பொலிஸ் வந்து விசாரணை செய்தவை சம்பவம் நடந்த இடதிலையும் ஆராய்ஞ்சவை. என்ரை கைத் தொலைபேசியும் பொலிஸில் தான் இருக்கு.

கடந்த 11 ஆம் திகதியும் இப்படியொரு பிரச்சினை நடந்தது. விடுதி மலசல கூடத்தில் நோட்டீஸ் எல்லாம் ஒட்டப்பட்டிருந்தது. தமிழ் ஆள்கள் எல்லோரையும் வெளியேறாவிட்டால் சுட்டுக் கொல்வோம் என்று எழுதப்பட்டிருந்தது. எங்கள் 10 பேரின் பெயர் அதில் இருந்தது. எல்லாம் எங்கட பிரிவில் சமூக விஞ்ஞானம் படிக்கிற ஆக்கள். நாங்கள் நோட்டீஸ் எல்லாவற்றையும் எங்கள் கம்பஸ் நிர்வாகத்திடம் கொடுத்து முறையிட்டோம். பிறகு சூறாவளி அடிச்சதால கம்பஸ் மூடப்பட்டது. அந்தச் சம்பவம் முடிந்து நடவடிக்கை எடுப்பதாக எண்டு சொல்லிச்சினம். இந்த நிலைமையிலதான் இந்தச் சம்பவமும் நடந்திருக்கு. எங்களுக்கு 10 நாள் கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாக நோட்டீஸ் இருக்கு. இது கடைசிச் சந்தர்ப்பம் எண்டும் எழுதி யிருக்கிறாங்கள். எனக்கு அடிச்சவையின் முகத்தை நான் காணேலை. முகம் மூடிக் கட்டியிருந்தது. ஆனால் அவையின் தோற்றத்தை வைத்து பார்க்கும்போது 30-35 வயதுக்கு இடைப்பட்ட ஆக்களாத்தான் இருக்க முடியும். உறுதியா சொல்லமுடியாது. ஆனால் அடிச்ச ஆக்களை விட்டிட்டு எங்களிலதான் பொலிஸ் சந்தேகப்படுகுது. நாங்கள் கம்பஸ் மாறுறதுக்காக இப்பிடி நாடகம் ஆடுறதாக அவங்கள் சொல்லுறாங்கள்.

போருக்குப் பின்னர் அரசுக்கு பிரதான தலைவலியாக இருப்பது பல்கலைக்கழக மாணவர்களும், ஊடகவியலாளர்களும்தான். எனவே இந்த இரு தரப்பினரையும் அடக்கி அவர்களின் குரல்களை நசுக்க அரசு துடியாய்த் துடித்து வருகிறது. அதற்காக பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.

சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவன் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் ஓமந்தையில் ஊடகவியலாளர்களுக்கு கஞ்சாக் கடத்தல்காரர்கள் என்ற முகமூடி அணிவிக்க முயன்ற சம்பவமும் அரசின் இத்தகைய நடவடிக்கைகளின் ஒரு பகுதி தான் .

பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இனவாதத் தீயை பற்ற வைத்து பதற்றமான சூழலை உருவாக்க சிலர் விரும்புகிறார்கள். இதன் முதல் அத்திவாரமாகவே சப்பிரகமுவ பல்கலையில் தமிழ் மாணவர்களுக்கு எதிராக ஒட்டப்பட்ட சுவரொட்டிகளையும், தமிழ் மாணவன் மீதான தாக்குதலையும் கொள்ள முடிகிறது. அதிகாரத்தின் அராஜகச் செயற்பாடுகளுக்கு எதிராக முதலில் களமிறங்குவது பல்கலைக் கழக மாணவர்கள் தான். அதனால் இந்த மாணவர்களின் புரட்சிக்குரலை இல்லாதாக்க அரசு படாதபாடு படுகிறது. ஆனாலும் இளங்கன்று பயமறியாது. அவர்கள் அதிகாரத்தின் உருட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் பயப்படாது உண்மைக்காக துணிந்து குரல் கொடுத்து வருகிறார்கள். அது யாழ். பல்கலைக்கழகமாக இருந்தாலும் ஒன்றுதான் கொழும்புப் பல்கலைக்கழகமாக இருந்தாலும் ஒன்று தான். நாங்கள் நாளைய தலைவர்கள் என்ற உரிமையோடு மக்களுக்காக பல்கலைக் கழக மாணவர்கள் கொடுக்கும் குரல் சர்வதேச ரீதியில் அதிக கவனிப்பைப் பெறுகிறது. யாழ்.பல்கலைக்கழக மாணவர் மீது கை வைத்தால் அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்களும் நாடெங்கும் கிளர்ந்தெழுவார்கள். அதே போன்றே எந்தவொரு பல்கலைக்கழக மாணவர் மீதும் அரசு தன் வன்முறையைப் பிரயோகித்தால் அது நாடாளவிய ரீதியில் பெரும் மாணவர் போராட்டத்துக்கு வித்திட்டு விடும். எனவே மாணவர்களின் குரலை பலவீனமாக்க முதலில் அவர்களின் ஒற்றுமையை குலைக்க வேண்டும். இதற்காகவே தன்னுடைய சொற்படி ஆடுகின்ற சில மாணவர்களை கைக்குள் போட்டுக் கொண்டு தமிழ் - சிங்களம் என்ற பேதத்தை பல்கலை மாணவர்கள் மத்தியில் விதைக்க அதிகாரம் முனைகிறது. இவ்வாறு இன முரண்பாட்டால் பல்கலைக்கழக மாணவர்கள் தமக்குள் தாமே மோதிக் கொள்வதால் அரசின் அராஜகங்களை கண்டு கொள்ள நேரம் இருக்காது. இதுவே ஆளும் தரப்பின் திட்டம். இத்தகைய சதி வலைகளுக்குள் பல்கலைக்கழக மாணவர் சமூகம் வீழ்ந்து விடாமல் இருக்க வேண்டும் .விழித்திருத்தலே ஆபத்துக்களை தடுப்பதற்கான சுலப வழி. இனவாத உசுப்பேற்றல்களுக்குள் மூழ்கி விடாமல் எதையும் பகுத்தறிந்து பல்கலைக்கழக மாணவர்கள் தம்முடைய ஐக்கியத்தை உறுதிப்படுத்துவதன் மூலமே நாட்டின் எதிர்காலத்தை இருளில் இருந்து விடுவிக்க முடியும். மாணவர்களின் ஒற்றுமையைக் குலைத்து, முரண்பட வைத்த பின் அரசியல் நடத்த கழுகுகள் காத்திருக்கின்றன. அவற்றின் காத்திருப்பை கானல் நீராக்குவது மாணவர்களின் கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சாவுக்குள் புதையுமா உண்மை?

அனுஷ்கன்

தமிழ் ஊடகவியலாளர்களை தேசத் துரோகிகள் என்றும் கஞ்சாக்காரர்கள் என்றும் நிலை நிறுத்த இலங்கையின் தகவல் ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல படாதபாடுபட்டு வருவதை அமைச்சரவை செய்திகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் நடந்து கொண்ட விதம் தெளிவாகவே நிரூபித்து விட்டது.

"ஊடகவியலாளர்களுக்கு அடி விழுவதை தடுக்க முடியாது. வேண்டுமானால் அவர்களை இளநீருடன் சென்று பார்க்கவே முடியும்" என்று சொன்ன அரசின் ஊடக அமைச்சரல்லவா அவர்.




ஊடகவியலாளர்கள் மீது தற்போது என்றுமில்லாத அளவுக்கு அதிகமான அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. துப்பாக்கிகளுக்கும், இனந்தெரியாதவர்களுக்கும், அரசின் துணை ஆயுதக் குழுக்களும், புலனாய்வுப் பிரிவினருக்கும் அஞ்சியபடியே தான் தம் பணியை மேற்கொள்ள ஊடகவியலாளர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றனர். தினம் தினம் நீட்டப்பட்ட துப்பாக்கி முனைகளுக்கு நடுவிலே தான் அவர்கள் ஊடகப் பணியாற்ற வேண்டியுள்ளது.சில சமயங்களில் உயிரைக் காக்க வேண்டும் என்பதற்காக சில விட்டுக் கொடுப்புகளுக்கும் அவர்கள் இறங்கி வரவேண்டியுள்ளது. அந்தளவுக்கு சுய தணிக்கையும் கண்ணுக்கு தெரியாத கட்டுப்பாடுகளும் ஊடகவியலாளர்களின் தலையில் சுமத்தப்பட்டுள்ளன.

அண்மையில் ஓமந்தையில் ஊடகவியலாளர்கள் ஏழு பேர் மீது மேற்கொள்ளப்பட்ட கஞ்சா கடத்தல் நாடகமும் , குறித்த ஊடகவியலாளர்கள் படைத்தரப்பால் நடத்தப்பட்ட விதமும் இலங்கைக்கும் ஜனநாயகத்துக்கும் வெகு தூரம் என்பதை நிரூபித்துள்ளன. வாகனத்துக்குள் தாமே கஞ்சாவை வைத்து விட்டு அதை ஊடகவியலாளர்களே கடத்தினார்கள் என்று படைத்தரப்பு கதை கட்டியிருந்தது. இதன் மூலம் அந்த ஊடகவியலாளர்களை சிறைக்குள் தள்ளுவதே அவர்களின் எண்ணம். இவ்வாறு பொய் குற்றச்சாட்டுகளை சோடித்து கைது செய்ய முயன்றதன் மூலம் இலங்கை அரசு எதிர்காலத்தில் தமிழ் ஊடகவியாலாளர்களை எப்படிக் கையாளப் போகிறது என்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

" ஊடகவியலாளர்கள் பயணித்த வாகனத்தின் சாரதியே கஞ்சா கடத்தினார் என்ற கோணத்தில் விசாரித்து வருகிறோம்" என்று பொலிஸ் பேச்சாளர் சொல்லியிருந்தார். ஆனால் அவர் சொன்ன சூடு ஆறுவதற்கிடையில் தகவல் ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல அதற்கு எதிர் மாறான கருத்தை வெளியிட்டுள்ளார். "யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர்கள் கஞ்சாக்காரர்களா? அல்லது ஊடகவியலாளர்களா? என்ற சந்தேகம் இன்னமும் இருக்கவே செய்கிறது" என்று அவர் தன்னுடைய நாக்கு கூசும் அளவுக்கு பச்சைப் பொய் ஒன்றை சர்வ சாதாரணமாக ச் சொல்லியிருந்தார். அதாவது அவரின் பார்வையில் அந்த வாகனத்தில் பயணித்த எல்லோருமே மிகப் பயங்கரமான கஞ்சா கடத்தல்காரர்கள். எவருமே ஊடகவியலாளர்கள் இல்லை. நீதி மன்ற விசாரணைகள் தொடங்க முன்னரேயே தகவல் ஊடக அமைச்சர் ஊடகவியலாளர்கள் மீது கஞ்சாக்காரர்கள் என்ற முத்திரையைக் குத்திவிட்டார்.

தமிழ் ஊடகவியலாள்ர்களை தேசத் துரோகிகள் என்றும் கஞ்சாக்காரர்கள் என்றும் நிலை நிறுத்த இலங்கையின் தகவல் ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல படாத பாடு பட்டு வருவதை அமைச்சரவை செய்திகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் நடந்து கொண்ட விதம் தெளிவாகவே நிரூபித்து விட்டது. "ஊடகவியலாளர்களுக்கு அடி விழுவதை தடுக்க முடியாது. வேண்டுமானால் அவர்களை இளநீருடன் சென்று பார்க்கவே முடியும்" என்று சொன்ன அரசின் ஊடக அமைச்சரல்லவா அவர். எனவே அவரும் அப்படித்தானே நடந்து கொள்ள வேண்டி வரும்.

எற்கனவே கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அராஜகங்களுக்கான காரணகர்த்தாக்கள் யாரென்று இது வரை அரசு கண்டுபிடிக்கவேயில்லை.ஊடகத்துறை மூலம் உண்மைகளை அம்பலப்படுத்தியதற்காக பல ஊடகவியலாளர்கள் நடு வீதிகளில் மிருகத் தனமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். பலர் கடத்தப்பட்டு காணாமல் போய்விட்டார் கள். அவர்களின் குடும்பங்கள் இன்னும் தேடியலைந்த படியே உள்ளன. ஊடக அலுவலகங்களுக்குள் புகுந்து கண் மண் தெரியாமல் துப்பாக்கிகள் சல்லடை போட்டிருக்கின்றன. பத்திரிகை அலுவலகங்கள் மீது பல முறை கிரனைட்டுக்கள் வீசப்பட்டிருக்கின்றன. இன்னும் பல ஊடகவியலாளர்கள் தலை தப்பியதே தம்பிரான் புண்ணியம் என்று உயிரைக் கைகளில் பிடித்த படி வெளிநாடுகளுக்கு பறந்துவிட்டார்கள். "ஊடகவியலாளர்களை நானே தாக்கினேன். தவறு விட்டால் இனியும் தாக்குவேன்" என்று அமைச்சர் ஒருவரே பகிரங்க வாக்கு மூலம் அளிக்கும் அளவுக்கு இலங்கையில் ஊடக சுதந்திரம் கொடி கட்டிக் பறக்கிறது.

இந்தச் சீத்துவத்தில் தான், தாங்கள் உத்தமர்கள் போலவும் ஊடகவியலாளர்கள்தான் சமூக விரோதிகள் போலவும் அரசு காட்ட முனைவது சிரிப்பைத் தான் ஏற்படுத்துகிறது.

தம் மீது கஞ்சா கடத்தினார்கள் என்ற பொய்க் குற்றச்சாட்டு சுமத்தப்படுவதைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது." ஊடகக் குரலை நசுக்காதே" "உண்மையின் பரிசு கஞ்சாப் பொதிகளா?" "ஊடகவியலாளர்களின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு அனுமதி" என்ற கோஷங்களோடு போராட்டம் இடம்பெற்று சில மணி நேரம் கழிய முன்னரே அமைச்சர் ஹெகலிய கஞ்சாக்காரர் முத்திரையை வடக்கு ஊடகவியலாளர்களின் முதுகில் குத்திவிட்டார். இது நாள் வரையும் அரசுக்கு எதிராகச் செயற்படும் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள், [illegible]த்தப்பட்டார்கள், மிரட்டப்பட்டார்கள். ஆனால் இவ்வா[illegible] நேரடியாக ஊடகவியலாளர்களை குறி வைத்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளால் அரசு மீது சர்வதேசம் தன் கோபப் பார்வையை திருப்பியிருந்தது. எனவே இதிலிருந்து தப்பிக்க புதிய வழி ஒன்று அரசுக்கு தேவைப்பட்டது. அந்த வழி தான் கஞ்சாக்காரர்கள் என்று பட்டம் சுமத்தி நீதியை வளைத்து ஊடகவியலாளர்களை ஒரேயடியாகச் சிறைக்குள் தள்ளுவது. இதனால் சர்வதேச அழுத்தமும் ஏற்படாது , ஊடகவிலாளர்களின் குரல் வளையையும் நசுக்க முடியும். அதாவது சேலையும் கிழியாமல் முள்ளும் குத்தாமல் நினைத்ததை முடிக்கும் திட்டமே இது.

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவணங்கள் ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வுகளை நடத்துவதும் அரசுக்கு கசக்கவே செய்கிறது.

முதுகில் புண் இல்லையென்றால் பற்றைக்குள் நுழைய ஏன் பயப்பட வேண்டும்? வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வுகளை நடத்துவதற்கும் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படுவதற்கும் என்ன சம்பந்தம்? ஒரு வேளை உள்நாட்டில் தாம் நடத்தியதாக க் கூறும் மனிதாபிமானப் போரின் கொடூரக் குரல் வெளிநாடுகளின் காதுகளுக்கு எட்டி விடும் என்ற பயமா?

இத்தகைய ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வுகள் தடுக்கப்படுவதையும் அவை நடைபெறும் இடங்களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதையும் அரசு நியாயப்படுத்தவும் முனைகிறது.இது தொ டர்பில் அறிக்கையொன்றை விடுத்திருக்கிறது வெளிவிவகார அமைச்சு. இதில் "ஆர்ப்பாட்டக்காரர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் ஆர்ப்பாட்டம் தொடர்பில் எந்த தூதரகங்களும் கேள்வி எழுப்ப முடியாது. அது அவர்களின் உரிமை " என்ற புதிய பல்லவி ஒன்றை வெளிவிவகார அமைச்சு பாடியிருக்கிறது.

இப்படியொரு ஆர்ப்பாட்டம் அரசுக்கு எதிராக யாழ்ப்பாணத்திலோ, கிளிநொச்சியிலோ அல்லது முல்லைத்தீவிலோ இடம்பெற்றிருந்தால் நிலைமை என்னவாக இருந்திருக்கும் . வெளிவிவகார அமைச்சு கூறுகின்ற ஆர்ப்பாட்டக்காரர்களின் உரிமை என்ற விடயம் குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டிருக்கும் . "ஆர்ப்பாட்டம் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம்" என்று தடை கோரி நீதி மன்றில் முதல் நாளே வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதை நடத்த விடாமல் முழு வீச்சில் காரியங்கள் நிகழும். ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடத்தில் புலனாய்வாளர்கள் குவிக்கப்படுவார்கள். இத்தகைய ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்பவர்களின் வீடுகள் மீது கற்கள், கழிவு ஒயில் கொண்டு தாக்குதல் நடத்தப்படும். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வோர் அனைவரும் புகைப்படம் எடுக்கப்பட்டு கண்காணிக்கப்படுவார்கள். இங்கெல்லாம் நடைமுறையில் இல்லாத ஆர்ப்பாட்டக்காரர்களுக்கான உரிமை திடீரென ஊடகவியலாள்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போது மாத்திரம் எங்கிருந்து குதித்தது என்பது தான் யாருக்குமே தெரியாது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத் துறைக்கு இப்போது கஞ்சாவால் பொய் புகையூட்டி கறை படுத்த முனையும் அதிகாரத்தின் குரல் நீண்ட நாளைக்கு நிலைக்கப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஷாத்



# சின்னச் சின்ன விடயங்கள்

**கொழும்பில் ஒரு சூதாட்ட நிலையம் ஒன்று பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு சிலர் கைது செய்யப்பட்டனர். உனடியாகவே பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்லவின் கட்டளையின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டதுடன்,சுற்றி வளைப்பில் ஈடுபட்ட அத்தனை பொலிஸாரும் இடமாற்றம் செய்யப்பட்டனர். அதன் பின்பு இன்னொரு பொலிஸ் குழுவினால் அந்தச் சூதாட்ட விடுதி சுற்றி வளைக்கப்பட்டதால் ஏற்கனவே நடந்த விடயங்கள் அம்பலத்துக்கு வந்தன. பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் இழுத்து மூடப்பட்டது.லக்ஷமன் ஹுலுகல்ல மனநோய் சம்பந்தமாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதாக ஒரு உத்தியோகப்பற்றற்ற செய்தி வெளிவந்தது. எப்படியிருப்பினும் இது கூட அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் சின்ன விடயம் தான்.**

---

அண்மையில் காரைநகரில் 11 வயது மாணவி கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் ஒரு கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் டி.எஸ்.ஜெயரட்ண"தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சின்ன சின்ன விடயங்களையெல்லாம் பெரிதுபடுத்தி சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றனர்" என்று குற்றம் சுமத்தினார்.

அது மட்டுமல்லாது புலிகளின் சீருடை போல் ஆடை அணிந்த ஒருவரே சிறுமியைக் காட்டுக்குள் கடத்திச் செல்ல முற்பட்டதாகவும், கடற்படைச் சிப்பாய் அந்தச் சிறுமியைக் காப்பாற்றியதாகவும் அவர் தெரிவித்தார்.

கடற்படையினரின் வாக்கு மூலத்திலோ, சிறுமியின் முறைப்பாட்டிலோ வராத புலிச் சீருடை பிரதமரின் பதிலில் மட்டும் எங்கிருந்தோ வந்து புகுந்து விட்டது.

எப்படியிருப்பினும் ஏழு கடற்படையினர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் இடம் பெற்றதாகக் கூறப்படும் இடத்திலிருந்து ஒரு சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது. இந்தச்சம்பவம் தொடர்பாக வழக்கு விசாரணையில்உள்ளது. எனினும் விசாரணைகள் இடம்பெற்று நீதிபதி தீர்ப்பை வழங்க முன்பே பிரதமர் தனது தீர்ப்பை வழங்கி விட்டார். அவரது தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்பட முடியாதெனிலும் அது அவரின் சிறப்புரிமை.

பருவ வயதை எட்டாத ஒரு சிறுமி -பாலியல் பற்றி எதையும் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத ஒரு சிறு பெண் - வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டது அவரளவில் ஒரு சிறு விடயம். உலகெங்கும் இப்படி எத்தனையோ சம்பவங்கள் நடப்பதாகவும் அவர் இந்த வன்புணர்வை நியாயப்படுத்தவும் செய்துள்ளார்.

சிறுமியின் உடல் உள ரீதியான பாதிப்பு, எதிர்காலத்தில் அவள் சமூகத்தில் ,ஏன் பாடசாலையில் கூட எதிர் நோக்கக் கூடிய அவலங்கள் எல்லாமே அவருக்குச் சின்ன விடயங்கள் தான்.

இந்தக் கொடுமையை வெளிப்படுத்தினால் அது சர்வதேச அளவில் நாட்டுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துகிறார்கள் என்று குற்றம் வேறு சுமத்துகிறார்.

பேருவளை, அளுத்கம பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் ஏவி விடப்பட்டு உயிர்கள் பறிக்கப்பட்டு, கோடிக்கணக்கா சொத்துக்கள் அழிக்கப்பட்ட போதும் ஜனாதிபதி அவை மிகச் சிறிய விடயங்கள் என்று கூறியிருந்தார். "நாட்டில் இடம்பெறும் சின்னச் சின்ன சம்பவங்களை சிலர் இனவாத முனைப்புடன் பெரிதுபடுத்தி இலங்கையை முஸ்லிம் நாடுகளுடன் முரண்பட வைக்க முயல்கின்றன" என்றும் ஜனாதிபதி குற்றம் சாட்டியிருந்தார்.

சில முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களை அழைத்து முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றி அமைச்சர் ரவூப் ஹக்கீம் விளக்கமளித்தமை குற்றமாம். முஸ்லிம் காங்கிரஸ் இன வாத அமைப்பு.அது சின்ன சின்ன விடயங்களைப் பெரிது படுத்துகிறது என்பதே ஜனாதிபதியின் ஆதங்கம்.

ஆனால் வன்முறைகள் நடந்த பின்பு அங்கு பயணம் செய்த ஜனாதிபதி அங்கு வைத்து"போயா தினத்தில் ஒரு தேரர் தாக்கப்பட்டதை ஒரு சாதாரண விடயமாக எடுக்க முடியாது" என்று தெரிவித்தார்.

ஒரு தேரர் தாக்கப்பட்டது பெரிய விடயம் .ஆனால் பல முஸ்லிம்கள் கொல்லப்பட்டதும், கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டதும் ஜனாதிபதிக்கு சின்னச் சின்ன விடயங்கள்.

சிறுமியின் மீதான பாலியல் துஷ்பிரயாகம், முஸ்லிம்கள் மீதான பேரழிவு இவையெல்லர்ம் இன்றைய ஆட்சியாளரர்களைப் பொறுத்த வரை சின்னச் சின்ன விடயங்கள். இவற்றை வெளியே கொண்டு வந்தால் மட்டும் அது பெரும் குற்றம் .தேச விரோதக் குற்றம்.

அநீதிகளையே நீதியாக மாற்றியெழுதும் அற்பத்தனமான அதிகாரத் துஷ்பிரயோகம் கொடிகட்டிப் பறக்கிறது இலங்கையில். இவை மட்டும் தானா சின்னச் சின்ன விடயங்கள்?இன்னும் இன்னும் ஏராளமாக உண்டு. பெருமளவு போதைவஸ்து கொண்டு வரப்பட்ட ஒரு கொள்கலனை விடுவிக்கும் படி பிரதமரின் இணைச் செயலாளர் ஒருவரின் கையெழுத்துடன்,பிரதமரின் கடிதத்தலைப்பில் ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. பிரதமர் அதற்கு தார்மீகப் பொறுப்பேற்று பதவியை ராஜினாமா செய்யவுமில்லை.அந்தத் செயலகத்துக்கு என்ன நடந்தது என்ற விபரம் வெளியே வரவுமில்லை.

போதைவஸ்து கடத்தல் என்பது மரண தண்டனைக்குரிய குற்றம். ஆனால் அதில் முக்கிய அரசியல் வாதிகள் சம்பந்தப் படும் போது சின்னச் சின்னச் விடயமாக மாறி விடுகிறது.

கொழும்பில் ஒரு சூதாட்ட நிலையம் ஒன்று பொலிஸாரால் சுற்றி வளைக்கப் பட்டு சிலர் கைது செய்யப்பட்டனர். உனடியாகவே பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலு கல்லவின் கட்டளையின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப் பட்டதுடன், சுற்றி வளைப்பில் ஈடுபட்ட அத்தனை பொலிஸாரும் இடமாற்றம் செய்யப்பட்டனர். அதன் பின்பு இன்னொரு பொலிஸ் குழுவினால் அந்தச் சூதாட்ட விடுதி சுற்றி வளைக்கப்பட்டதால் ஏற்க னவே நடந்த விடயங்கள் அம்பலத்துக்கு வந்தன. பாதுகாப்பு ஊடக மத்திய நிலை யம் இழுத்து மூடப்பட்டது. லக்ஷமன் ஹுலு கல்ல மனநோய் சம்பந்தமாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதாக ஒரு உத்தியோகப் பற்றற்ற செய்தி வெளிவந்தது. எப்படியிருப்பினும் இது கூட அர சாங்கத்தைப் பொறுத்த வரையில் சின்ன விடயம் தான்.

இந்த நாட்டில் சக்தி மிக்க அரசியல் வாதிகளால் பாரதூரமான, மரணதண்டனை ஆயுள் தண்டனைக்கு உட்படுத்தப் பட வேண்டிய குற்றங்கள் கூட சின்னச் சின்ன விடயங்களாக்கப்படுகின்றன. இப்படியான நிலையில் நாட்டில் சட்டமும், ஒழுங்கும், நீதியும் எப்படி நிலை பெற முடியும்?

அதிகாரத்தின் அகராதிகளில் அர்த்தங்கள் வலிந்து மாற்றப்படலாம். அனால் அவை என்றோ ஒரு நாள் அம்பலப்படுவதையும் மனித குல விரோத நடவடிக்கைகள் மக்களால் வெறுக்கப்படுவதையும் எவராலும் தடுத்து விட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டைச் சண்டித்தனம்

அக்கினி புத்திரன்



**அண்மையில் ஹட்டனில் இடம்பெற்ற இளைஞர் விளையாட்டு விழாவின் போது இந்த அம்பாந்தோட்டைச் சண்டித்தனம் அந்தப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வட பகுதியிலிருந்து இந்த விழா நிகழ்வுகளில் கலந்து கொண்ட இளைஞர்களை முறைகேடாகவும் அவமானப்படுத்தும் விதத்திலும் அம்பாந்தோட்டை இளைஞர்கள் நடத்தியதுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டனர். அத்துடன் வலிந்து வன்முறையைத் தூண்டும் விதத்திலும் நடந்து கொண்டனர்.**

"வடக்கு-கிழக்கு பகுதி தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடமல்ல" இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக் ஷ முன்பு ஒரு முறை வெளியிட்ட கருத்தே இது. இலங்கையின் வரலாற்றை மறைத்து தமிழ் மக்களின் பாரம்பரிய உரிமையை மறுத்து அவர் வெளியிட்ட ஆணவமான கருத்து. இது வெறும் வார்த்தைகளுடன் நின்று விடவில்லை. அவரின் கட்டுப்பாட்டிலுள்ள ஆயுதப்படையினர் தொடர்ச்சியாகத் தமிழ். முஸ்லிம் மக்களின் பாரம்பரிய நிலங்களில் முகாம்கள் அமைப்பது என்ற பேரில் அபகரித்து வருகின்றனர். மறிச்சுக் கட்டி. சிலாவத்தை போன்ற இடங்களில் கடற்படையினர் தங்களின் குடும்பங்களையும் குடியேற்றி வருகின்றனர். வலி . வடக்குப் பகுதிகளில் இராணுவக் குடியிருப்புக்களை மேற்கொள்ளும் முகமாக அங்கிருந்த வீடுகள் படையினரால் அழிக்கப்பட்டுள்ளன. தற்சமயம் கூட படைத்தரப்பின் முகாம்களை விரிவாக்கும் நோக்குடன் அச்சுவேலி. மிருசுவில். நகுலேஸ்வரம். சேந்தான் குளம். திருவடிநிலை ஆகிய பகுதிகளில் தமிழ் மக்களின் சொந்தக் காணிகளை அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை மட்டுமன்றி வடக்கு கிழக்கில் பரந்த அளவில் பல்வேறு இடங்களில் புத்த விகாரைகளை அமைக்கவெனவும். தொல்பொருட் திணைக்களம். வனபரிபாலன இலாகா போன்றவற்றுக்குச் சொந்தமெனக் கூறியும் தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்படுவது தொடர்கிறது.

இது ஆயுதப் படைகள் மூலம் கட்டவிழ்த்து விடப்படும் அம்பாந்தோட்டைச் சண்டித்தனம். தற்சமயம் இந்தச் சண்டித்தனம் ஆயுதப் படைகளுக்கு வெளியேயும் விரிவு படுத்தப்பட்டு அரசியல் வாதிகளால் மட்டுமன்றி பேரினவாத இளைஞர்களாலும் அரங்கேற்றப்படுகின்றன.

அண்மையில் ஹட்டனில் இடம்பெற்ற இளைஞர் விளையாட்டு விழாவின் போது இந்த அம்பாந்தோட்டைச் சண்டித்தனம் அந்தப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வட பகுதியிலிருந்து இந்த விழா நிகழ்வுகளில் கலந்து கொண்ட இளைஞர்களை முறைகேடாகவும் அவமானப்படுத்தும் விதத்திலும் அம்பாந்தோட்டை இளைஞர்கள் நடத்தியதுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டனர். அத்துடன் வலிந்து வன்முறையைத் தூண்டும் விதத்திலும் நடந்து கொண்டனர்.

இத்தகைய சம்பவங்களைத் தனி ஒரு நிகழ்வாகவோ அல்லது தற்செயலாக இளைஞர்களுக்கிடையே ஏற்பட்ட ஒரு முறுகல் நிலை என்றோ கொள்ள முடியாது. அம்பாந்தோட்டை போன்ற பேரின மக்கள் வாழும் பகுதிகளில் கட்டி வளர்க்கப்படும் இன மேலாதிக்கச் சிந்தனைப் போக்கும். தாங்கள் எதைச் செய்தாலும் எவரும் தட்டிக் கேட்க முடியாது என்ற மனப் பாங்குமே இப்படியான சம்பவங்களுக்கு மூல காரணமாக அமைகின்றன.

இலங்கையின் உச்ச அதிகாரங்களையும் கைப்பற்றி வைத்திருப்பவர்கள் அம்பாந்தோட்டை மண்ணைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் தமிழர் உட்பட பிற சக்திகள் மேல் தமது மேலாதிக்கத்தைச் சண்டித்தன வழியில் பிரயோகிப்பவர்கள் என்பதாலும் இப்படியான மனப் போக்கு அங்கு வளர்வதிலும் ஆச்சரியம் இருக்க முடியாது.

அதே வேளையில் அம்பாந்தோட்டையின் சண்டித்தன சாதனைகள் ஏற்கனவே வெகு விமரிசையாக அரசியல் வாதிகள் சிலராலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. தங்காலை பிரதேச சபைத் தலைவரும் அவரின் நண்பர்கள் சிலரும் அங்குள்ள சுற்றுலா விடுதியொன்றில் வைத்த பிரிட்டிஷ் பிரஜை ஒருவரை கொலை செய்ததுடன். அவரின் காதலியான ரஷ்யப் பெண்ணையும் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தினார். இதன் காரணமாக கைது செய்யப்பட்டு பின்பு நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்ட பிரதேச சபைத் தலைவரும் நண்பர்களும் சாட்சிகளுக்கு உயிரச்சுறுத்தல் விடுப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டது. அதையடுத்து மேற்படி வழக்கு கொழும்புக்கு மாற்றப்பட்டது. பிரதேச சபைத்தலைவர் நீதிமன்றத் தவணைகளில் சமூகமளிக்காததால் விளக்க மறியலிலும் வைக்கப்பட்டார். இறுதியில் குற்றம் நிரூபிக்கப்பட் நிலையில் அவருக்கு 20 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் எதிர்காலத்தில் அவர் விடுவிக்கப்படலாம் அல்லது ஜனாதிபதியின் கருணையால் வெளியேயும் வரலாம்.

எப்பிடியிருப்பினும் எமது நாட்டுக்கு விருந்தினர்களாக வந்தவர்களைச் கொலை செய்யுமளவுக்கும் வன்புணர்வுக்கு உட்படுத்தும் வகையிலும். சாட்சியங்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்குமளவுக்கும் அம்பாந்தோட்டைக்காரர்களின் சண்டித்தனம் வலிமையானது. மத்தள விமான நிலையத்தையும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையும் பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியினரையும் இந்தச் சண்டித்தனம் விட்டு வைக்கவில்லை.

அம்பாந்தோட்டை நகர மேயர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி.பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தி ஐ.தே.க. உறுப்பினர்களை விரட்டினர்.

தமது உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்திய றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள் மீது பிரதி அமைச்சர் தலைமையிலான குழுவினர் நடத்திய தாக்குதலில் எட்டு மாணவர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு அம்பாந்தோட்டை ஒரு சண்டித்தன மையமாகப் புகழ் பெற்று விளங்குகிறது. இது மட்டுமன்றி அம்பாந்தோட்டையைச் சேர்ந்தவர்கள் எங்கு சென்றாலும் சண்டித்தனமே செய்வார்கள் என்பது ஹட்டன் சம்பவம் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் தமிழ் இளைஞர்கள் விமானக் குண்டு வீச்சுகளுக்கும் எறிகணைக் தாக்குதலுக்கும் துப்பாக்கி வேட்டுகளுக்கும் மத்தியில் வளர்ந்தவர்கள். அவர்கள் இத்தகைய சலசலப்புக்களுக்கு அஞ்சப் போவதில்லை. தெருச் சண்டித்தனங்களினதும் காடைத்தனங்களினதும் அளவை அவர்கள் நன்றாகவே புரிந்து வைத்துள்ளனர்.

கீழ்த்தரமான முறையில் அரச அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் காடைத்தனங்களின் ஆயுள் வெகு விரைவில் முடிவுக்கு வந்து விடும் என்பது தான் வரலாறு.

எந்த அதிகாரங்களை இந்தச் சண்டித்தனம் உருவாக்குகிறதோ அந்தச் சண்டித்தனங்களின் பெறுபேறுகளே அந்த அதிகாரத்தை அழித்து விடும் என்பதே உலகம் முழுவதும் சந்திக்கும் அனுபவமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீர்டி சாயி பாபா. எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீர்டி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றை யெல்லாம் தொகுத்து எழுதிய தொடர்

# சாயியே சரணம்

## பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் - 24

*நல்லோரைக் காத்துக் கொடியோரை அழிப்பதே தெய்வ அவதாரத்தின் நோக்கம்.*

ஞானிகளின் இறையருட் கட்டளைப் பணியோ முற்றிலும் மாறுபாடானது. அவர்கட்கு நல்லோரும் கொடியோரும் ஒன்றே, தீயது செய்பவர்க்காக வருந்தி அவர்களை நெறிப்படுத்துகிறார்கள். அவர்கள் பவ சாகரத்தைக் (இவ்வுலக வாழ்வெனும் பெருங்கடலைக்) குடிக்கும் அகஸ்தியர் அல்லது அறியாமை இருளை ஒழிக்கும் ஆதவன் ஆவார்கள். ஞானிக ளிடம் கடவுள் வசிக்கிறார். உண்மையில் , அவரிடமிருந்து அவர்கள் வேறானவர்கள் அல்லர். பக்தர்களின் நன்மைக்காக அவ தரிக்கும் இத்தகையவர்களுள் ஒருவரே நமது சாயி ஆவார். ஞானத்தின் உச்சக் கட்டத்திலிருந்தும் தெய்வீக ஒளி சூழப்பட்டும் அவர் எல்லா ஜந்துகளையும் சமமாக நேசித்தார். அவர் பற்றற்றவர். பகைவர்களும், நண்பர்களும் அரசனும் , ஆண்டி யும் அவருக்கு ஒன்றே. அவருடைய அசாதாரணத் திறமையைச் செவிமடுங்கள். அடியவர்களுக்காகத் தமது தகமைக் களஞ்சியத்தை செலவிட்டார். அவர்களுக்கு உதவி செய்வதில் எப்போதும் விழிப்பாக இருந்தார். ஆனால் அவராக அடியவர்களை வரவேற்க எண்ணினாலொழிய ஒருவரும் அவரை அணுக இயலாது. அவர்களது முறை வரவில்லையானால் பாபா அவர்களை நினைப்பதில்லை. அவருடைய லீலைகளும் அவர்களின் காதை எட்டவியலாது. பிறகு அவர்கள் எங்ஙனம் அவரைப் பார்க்க எண்ணமுடியும்? சிலர் சாயி பாபாவைப் பார்க்க விரும்பினர். ஆயினும் அவரின் மஹா சமாதி வரை அவரின் தரிசனத்தைப்பெற அவர்களுக்கு வாய்ப்பேதும் கிடைக்கவில்லை. பாபாவின் தரிசனத்தைப் பெற விரும்பிய பலரின் விருப்பமானது இங்ஙனம் நிறைவேறாமல் போயிற்று. அவர் மீது நம்பிக்கை கொண்ட இத்தகையோர் அவரது லீலைகளை செவிமடுப்பாராயின் பாலுக்கான (தரிசனத்திற்கான) அவர்களது ஏக்கமானது வெண்ணெயினால் (லீலைகளினால்) பெருமளவு திருப்திப்படுத்தப்படும். வெறும் அதிர்ஷ்டத்தினாலேயே அங்கு சென்று பாபாவின் தரிசனத்தைப் பெற்ற சிலர், நீண்ட நாள்கள் அங்கு தங்க இயலுமா? இயலாது. அங்கு ஒருவரும் தாமாகவே செல்ல முடியாது. தாம் நினைத்தபடி அங்கு நீண்ட நாள்கள் இருக்கமுடியாது. பின்னர் அவர்களுக்கு அனுமதி கொடுத்த நாள்கள் வரைக்குமே அவர்கள் அங்கு தங்க வேண்டும். பாபா அவர்கள் அவ்விடத்தைவிட்டுப் போகும்படி கேட்டதும் அவர்கள் அவ்விடத்தை விட்டுப் போய்விடவேண்டும். எனவே அனைத்தும் பாபாவின் சங்கல்பத்தையோ சார்ந்திருந்தன.

### காகா மஹாஜனி

ஒருமுறை காகா மஹாஜனி சீர்டிக்கு பம்பாயிலிருந்து சென்றார். அவர் அங்கு ஒரு வாரம் தங்கி கோகுலாஷ்டமி பண்டிகையைக் கண்டு மகிழ விரும்பினார்.பாபாவின் தரிசனத்தைப் பெற்றவுடனேயே ,பாபா அவரை "எப்போது வீட்டிற்குத் திரும்பப் போகிறாய்?" எனக்கேட்டார். அவர் இத்தகைய வினாவினால் ஆச்சரியமே அடைந்தாரெனினும் பதில் அளிக்க வேண்டும் என்பதற் காக, பாபா தம்மை அங்ஙனம் செய்ய எப்போது ஆணையிடுகிறாரோ அப்போதே தான் வீட்டிற்கு போகப்போவதாக கூறினார். பாபா "நாளைக்குப் போ" எனக் கூறினார். பாபாவின் மொழிகளே சட்டமானதால் , அவைகளை நிறைவேற்றப்பட வேண்டும். எனவே உடனே காகாமஹாஜனி சீர்டியை விட்டுப் புறப்பட்டார். பம்பாயில் தனது அலுவலகத்திற்குச் சென்ற பின்னர் தனது எஜமானர் தன்னுடைய வரவுக்காக கவலையுடன் காத்திருப்பதை அறிந்தார். அவரது முகாமையாளர் திடீரென நோய் வாய்ப்பட்டு இருந்தார். எனவே காகாவின் வரவு அவருக்கு தேவைப்பட்டது. சீர்டியில் காகாவுக்கு ஓர் கடிதம் அனுப்பியிருந்தார். பம்பாய்க்கு அது திருப்பி அனுப்பப்பட்டது.

ஒருமுறை பாவ் ஸாஹேப் துமால் ஒரு விசாரணைக்காக நிபாட்டிற்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் சீர்டிக்குச் சென்று பாபாவின் தரிசனத்தைப் பெற்று உடனே நிபாட்டிற்குச் செல்ல விரும்பினார். ஆனால் பாபா அவரை அங்ஙனம் செய்ய அனுமதிக்கவில்லை. ஒரு வாரமோ , அதற்கு மேலோ அவரை சீர்டியில் தங்க வைத்தார். இதே நேரத்தில் நிபாட்டில் உள்ள நியாயதிபதி அடிவயிற்றில் ஏற்பட்ட வலியினால் மிகவும் துன்புற்றார். எனவே விசாரணை ஒத்திப் போடப்பட்டது. துமால் அங்கு சென்ற பின்னரும் விசாரணை தொடர்ந்தது. முடிவில் துமால் வெற்றி பெற்றார். அவரது கட் சிக்காரர் குற்றமற்றவராகத் தீர்ப்பளிக்கப்பட்டார்.

---

நிமோணின் வதன்தாரும் ஹானரரி மேஜிஸ் டிரேட்டுமான நானாஸாஹேப் நிமோண்கர், தமது மனைவியுடன் சீர்டியில் தங்கியிருந்தார். நிமோண்கரும் அவரது மனைவியும் மசூதியில் பாபாவுடன் பெரும்பாலான நேரத்தைக் கழித்துஅவருக்குச் சேவைசெய்து வந்தனர். பெலாபூரில் அவர்களது மகன் நோய்வாய்ப்பட்டான். பாபாவின் சம்மதத்துடன் பெலாபூர் சென்று மகனையும், மற்ற உறவினர்களையும் கண்டு அங்கு சில நாள்கள் தங்கி வரலாம் என்று அன்னை தீர்மானித்தாள். ஆனால் நானா ஸாஹேப் அடுத்த நாளே திரும்பி வரும்படி அவளைக் கூறினார். அன்னைக்குஒன்றும்புரியவில்லை. என்ன செய்வதென்றும் தெரியவில்லை. ஆனால்அவளுடைய இறைவன் சாயி அவளுக்கு உதவிட வந்தார். சீர்டியை விட்டுப் புறப்படும்போது, அவள் ஸாடேயின் வாடாவுக்கு முன்னால் நானாஹாஹேப்புடனும் மற்றவர்களுடனும் நின்று கொண்டிருந்த பாபாவின் முன்சென்று சாஷ்டாங்க மாய் விழுந்து புறப்படுவதற்கு அனுமதி கேட்டாள். பாபா அவளிடம் "போ , சீக்கிரம் போ" அமைதியாகவும், குழப்பமடையாமலும் இரு. நான்கு நாள்களுக்கு பெலாபூரில் சௌகரியமாய் இரு. உனது உறவினர்களை கண்டபின் சீர்டிக்கு திரும்பு. பாபாவின் மொழிகள் எத்தகைய அதிஷ்டம் படைத்தது. நானாஸா ஹேப்பின் தீர்மானம் பாபாவின் தீர்ப்பி னால் தோற்கடிக்கப்பட்டது. (ஞானத்தை தேடுவோர்)

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 632

**மேலிருந்து கீழ்**

1-ஒரு நட்சத்திரம்.
2-கிடங்கு.
3-இந்து சமயத்தின் உட்பிரிவுகளுள் ஒன்று.
4-வேதனம்.
5-படுதா.
9-தற்பெருமை அடித்தல்.
11-குத்து விழுவது இப்படி.
12-பேச்சு ஓசை.
13-புதல்வன்.
14-விரிந்து.
15-குற்றம் சுமத்துதல்.
16-தினசரி மாறுவது.
17-அனைத்து.
19-உள்ளக.

**இடமிருந்து வலம்**

1-அமர்க்களமாக.
4-தெருக்கள் கூடும் பகுதி.
6-கையினால் அளவிடும் அலகு.
7.தேர் இழுக்கும் கயிறு
8-அஞ்சல்.
10-பிரி.
12-விலங்குகளின் அடிக்கால் பகுதி.
14-பிழையான நடவடிக்கை.
16-அளவுக்கு மிஞ்சியதால் வருவது.
17-மறைவில் தீட்டப்படுவது.
18-உள்காய வகை.
19-எழுத்துகளுக்கு முதல்.
20-உறுதி.
21-மனைவியின் சகோதரியின் கணவன்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | | 5 |
| 6 | | ■ | 7 | | | ■ | |
| 8 | | 9 | | ■ | 10 | 11 | ■ |
| | ■ | | ■ | 12 | | | 13 |
| ■ | 14 | | 15 | | | ■ | |
| 16 | | | | | ■ | 17 | |
| 18 | | | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | | |

அனுப்புபவர் பெயர்:-----------------------------------
விலாசம்:-----------------------------------------
-----------------------------------------------
கையொப்பம்:---------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:
**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 632

■ சொற்சிலம்பம் போட்டி 632ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே ஒகஸ்ட் 27ஆம் மற்றும் செப்ரெம்பர் 03ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபா லட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசு ரூபா 250 உம் 2ஆம் பரிசு ரூபா 150 உம் 3ஆம் பரிசு ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 630இல் பரிசு பெற்றோர்

1 ...செல்லம்மா, ...வெ.இராசநாயகம், ...பளை.

2 ...அ. அலோசியஸ், ...வீதி, ...நகர், வவுனியா.

3 ...திரவியநாதன், பொன்னையா லேன், ஆனைக்கோட்டை.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்திலும், **நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொழும்பு, வவுனியா** ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடரொளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

**செ.சின்னத்துரை,**
இல 131-D-10.,
உருத்திரபுரம்.

**திருமதி ச.மதுசன்,**
யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்,
மிருசுவில்.

**வ.ஆ.அதிருபசிங்கம்,**
அம்மன்கோவிலடி,
வல்வெட்டித்துறை.

**கே.தர்மினி,**
ரீ.சி. ஒழுங்கை,
சங்கானை.

**செ. தவலிங்கம்,**
தசபவனம்,சிறுப்பிட்டி
நீர்வேலி.

### சொற்சிலம்பப் போட்டி 630இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**
1.பிரமாதம்
2.சமர்க்களம்
3.வலை
4.வாட்ட
5.குடும்பம்
7.பாகம்
9.தலை
10.வானம்
12.கடுகு
14.நடுங்கு
15.சுவடு
16.மேரு
17.சகா
18.முடி
19.கைதி

**இடமிருந்து வலம்**
1.பிரசவம்
4.வாகு
6.மலை
7.பாட்டு
8.மாதர்
10.வாகடம்
11.தலைக்கனம்
13.கடும்
14.நம்
15.சுளகு
16.மேடு
17.சவம்
18.முருங்கை
20.சாடு
21.தாடி
22.குதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஷ்யப் புரட்சி

ரஷ்யப் புரட்சி 1917 என்பது, ரஷ்யாவில் 1917 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக நடைபெற்ற இரண்டு மக்கள் புரட்சிகளையும், அது தொடர்பான நிகழ்வுகளையும் குறிக்கும். இப் புரட்சிகள் ரஷ்யப் பேரரசின் சமூக இயல்புகளைமாற்றியதுடன், ரஷ்ய அரசையும் மாற்றியமைத்தன. சர்வாதிகாரம் அகற்றப்பட்டு சோவியத் ஒன்றியம் அமைக்கப்பட்டது.





சிறுவர்களே...!
உங்களின் கைவண்ணத்தைக் காட்டி இந்த 'சேட்' ஐ வர்ண மயமாக்குங்கள்.

# சிறுவர் சுடர்


### ஔவையின் உதடுகளில் இருந்து...



*கெடுவது செய்யின் விடுவது கருமம் :*
கெடுதி செய்துதான் ஒரு காரியத்தில் வெற்றி பெறவேண்டுமாயின் அக் காரியத்தையே விட்டு விடுவது நல்லது.

## கண்டுபிடியுங்கள்

இரு படங்களுக்கு மிடையே 5 வித்தியாசங்கள் உள்ளன.



ஜப்பானில் உள்ள ஹிபகு யுமோகு எனப்படும் மரத்துக்கு உலகிலுள்ள வேறெந்த மரத்துக்கும் இல்லாத சிறப்பு உள்ளது. 1945, ஓகஸ்ட் 6ஆம் திகதியன்று ஹிரோஷிமாவில் அணுகுண்டு போடப்பட்டபோது நகரமே அழிந்ததுடன், பல வருடங்களுக்குப் புல் பூண்டுகளே முளைக்காமல் போனது.ஆனால் ஹிபகு யுமோகு மரமானது சுமார் 75 ஆண்டுகளுக்கு மேலாக, அதாவது அணுகுண்டு போடப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை உறுதியாக நிற்கிறது. இன்று ஹிரோஷிமா சோலையாக பூத்துக் குலுங்கினாலும் இவையெல்லாம் கடந்த 50 ஆண்டுகாலப் பகுதி யில் உருவானவை. மிகக் குறைந்த அளவே காணப்படும் இந்த வகை மரங்களை ஜப்பான் கவனமாகப் பாதுகாத்து வருவதும் குறிப் பிடத்தக்கது.



## அறிந்துகொள்ளுங்கள்

1. ரூபாய் நோட்டில் விநாயகர் உருவம் பொறித்துள்ள நாடு இந்தோனேஷியா.
2. யூகலிப்டஸ் மரமே, மரங்களில் மிக உயரமாக வளரும் மரமாகும். 1872-ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் வாட்ஸ் நதிக்கரை ஓரம் இருந்த ஒரு யூகலிப்டஸ் மரம் 435 அடி உயரம் வளர்ந்திருந்தது.
3. ஆப்பிரிக்காவில் காணப்படும் வெள்ளைக் காண்டாமிருகத்தின உதடுகள் சதுர வடிவில் இருக்கும்.
4. செல்ஃபோனின் (மொபைல் போன்) தந்தை என அழைக்கப்படுபவ மார்டின் கூப்பர்.
5. அப்பிள் பழத்துக்கு நிகரான சத்துகள் நிறைந்தது நெல்லிக்கனி

சி.நகுலன், யாழ்ப்பாணம்

## வெஸூவியஸ் எரிமலை



இத்தாலியர்கள் உணர்ச்சி பூர்வமாகவும் ஆவேசமாகவும் வெஸூவியஸ் எரிமலை பற்றி விவரிப்பதில் வியப்பில்லை. ஐரோப்பாவிலுள்ள அனைத்து நாடுகளிலும் இல்லாத ஓர் அதிசயம் இத்தாலியில் மட்டுமே இருப்பது இங்குள்ள குமுறும் எரிமலைகள் தான்.
அதுமட்டுமல்லாமல் இத்தாலியின் தென்பகுதிகளிலும், சிசிலி தீவிலும் அடிக்கடி பூமி அதிர்ச்சி ஏற்படுவதும் வேறு ஐரோப்பிய நாடுகளில் இல்லாத ஒன்று வால்கனோ (எரிமலை) என்ற வார்த்தை பிறந்ததே இத்தாலி நாட்டில்தான். தங்கள் நெருப்புக் கடவுளான வால்கனின் செயல்களே எரிமலை என்று நம்பினர். ஆகவே எரிமலைகளுக்கு, "வால்கனோஸ்" என்று பெயரிட்டனர்.
மலைகளின் உள் குடைவுகளிலிருந்து, கற்களும், கல் குழம்புகளும் (லாவா) தீ சுவாலையும் குமுறி வெளிப்படுவது இன்று சகஜமானாலும், எரிமலையின் நிழலில் வாழும் வாழ்க்கை நிம்மதியானதாக இருக்க முடியாது.
இங்குள்ள படத்தில் வெஸூவியஸ் புகை கக்கிக் கொண்டிருப்பதைக் காண்கிறீர்கள். 1944இல் வெஸூவியஸ் ஆக்ரோஷமாக கர்ஜித்து, நெருப்பை உமிழ்ந்து, பேரழிவை ஏற்படுத்தியது. இதேபோல, கி.பி.79 இல் ரோமானியர்களின் செல்வங்கொழிக்கும் பாம்பே நகர் அழிந்ததும் வெஸூவியஸ் எரிமலையின் கோபத்தினால்தான். எரிமலையின் கோபத்தை வர்ணிக்க இயலாது. ஒரு பெரிய முழு நகரமே பூமியின் கீழே முப்பது அடிக்கு புதையுண்டு போகுமளவுக்கு, எரிமலை குழம்புகளும், சாம்பலும் வெளிப்படும்.

க.தனுசன், மானிப்பாய்.

## பனி ஏன் கொட்டுகிறது?

பூமி சுற்றும் போது, அதன் அச்சும் சுழல்கிறது. பூமியின் அச்சானது, சூரியனிடம் இருந்து, தொலைவில் இருக்கும் போது பூமிக்கு மிகக் குறைவான வெப்பமே கிடைக்கிறது. இதனாலேயே குளிர் காலத்தில் தட்ப



வெப்ப நிலை மாறுகிறது.
குளிர் அதிகமாக இருக்கும்போது, மேகமாக உருவான தண்ணீர்த் துளிகள் பனித் துகள்களாக மாறுகின்றன. அந்தப் பனித் துகள்கள் உருகாமல் அப்படியே பூமிக்கு வருகின்றன. இதன் விளைவாகவே அதிகாலையிலும், இரவிலும், புகை மாதிரி பனி மூட்டமே காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மீண்டும் அரவிந்தசாமி

'தளபதி' படத்தின் மூலம் இயக்குனர் மணிரத்தினத்தால் அறிமுகப்படுத்தப்பட்டவர் அரவிந்தசாமி. இந்தப் படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தாலும், அதன்பின், அவர் நடித்த எல்லா படங்களிலும் கதாநாயகனாகவே நடித்து வந்தார். இந்நிலையில், திடீரென சினிமாவை விட்டு ஒதுங்கியிருந்த அரவிந்தசாமி, மீண்டும் சினிமாவில் நடிக்க ஆரம்பித்துள்ளார். அவருடைய மீள்வரவையும் மணிரத்தினமே தொடங்கி வைத்தார். மணிரத்னம் இயக்கிய 'கடல்' படத்தின் மீண்டும் திரைக்கு வந்த அரவிந்தசாமி, தற்போது சினிமரில் தொடர்ந்து நடித்து வருகிறார். இது வரையிலான படங்களில் நாயகன், நாயகனுக்கு சமமான கதாபாத்திரத்தில் நடித்துவந்த அரவிந்தசாமி முதன்முறையாக வில்லன் வேடத்தில் நடிக்கவிருக்கிறார். ஜெயம்ராஜா இயக்கத்தில் ஜெயம் ரவி - நயன்தாரா நடிக்கும் 'தனி ஒருவன்' படத்தில் அரவிந்தசாமி நடிக்கிறாராம். இதை, தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் படத்தில் அவர் வில்லன் கதாபாத்திரத்தில் நடிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கனவே, கௌதம் மேனன் இயக்கத்தில் அஜித் நடிக்கும் படத்தில் வில்லனாக அரவிந்தசாமி நடிக்கவிருக்கிறார் என்ற செய்தி வெளிவந்தது. ஆனால், அந்தச் செய்தியை அவர் மறுத்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சூரியிடம் குவியும் ...



வல்லவனுக்...
நாயகனாக ...
நட்பு வட்டா...
விட்டு வரு...
ருக்கான ...
கொண்டே ...
பின்னால் ...
நடிப்பு எகிறி...
படி, லிங்கா...
மெகா பட...
இருக்கிறார்...
அவரது சம்...
சென்று கெ...
யாகிவிட்டே...
தில் என்னி...
கூறுவதால் ...
அபிமான இ...
செய்து வரு...
துக்கு வர வேண்டிய படங்களெல்லாமே...
தான் அணிவகுத்து நிற்கின்றன. அத்தோ...
வதற்கான போக்குவரத்து செலவை ...
கேட்பதில்லை. சொந்த செலவிலேயே ...
தில் பட அதிபர்கள் மத்தியில் சூரியின் செ...

## புதிய முயற்சியில் ரகுமான்

தனது முதல் படத்திலேயே தேசிய விருதையும் பின்னர் சினிமாவின் உயரிய விருதான ஒஸ்கார் விருதை வென்ற இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் தற்போது பல படங்களுக்கு இசையமைத்து வருகிறார். இசையமைப்பதில் தீவிரமாக இருந்தாலும் தயாரிப்பு நிறுவனம் ஒன்றை தொடங்கி, படங்களை தயாரிக்கவும் முடிவு செய்துள்ளார்.

ஏ.ஆர்.ரகுமான் தற்போது ஹிந்தி படம் ஒன்றை தயாரிக்கவுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'வாழ்க்கை தரும் அனுபவங்கள், பயணங்கள் காட்டும் மனிதர்கள், நமக்குள்ளே கதைகளை உருவாக்குகின்றன. எனக்குள்ளும் நிறைய கதைகளை உருவாக்கி இருக்கின்றன. அவற்றில் சிறந்த ஒன்றை தேர்வு செய்து படமாக எடுக்கிறேன். இந்த படத்தில் 20 வயதுள்ள, புதுமுக நாயகன் நடிக்கிறார். இயக்குநரும் தேர்வாகிவிட்டார். எனது நிறுவனத்துடன் இணைந்து ஈராஸ் இன்டர்நஷனல் நிறுவனமும் இணைந்து தயாரிக்கிறது.

இந்தப் பணிகள் முடிந்ததும் தமிழில் படம் தயாரிக்கிறேன். ஒரே நேரத்தில் இ... திட்டம் உள்ளது. இதற்கான பணிகளும் தொடங்கி விட்டது. சினிமா இ... அது பெரிய பொறுப்பு. எதை என்னால் சுமக்க முடியாது' என்கிறார்.



## நகைச்சுவை வேடத்தில் ஜெனிபர்

குழந்தை நட்சத்திரமாக பல படங்களில் நடித்தவர் ஜெனிபர். கில்லி படத்தில் நடித்ததன் மூலம் திரையுலகினர் மற்றும் ரசிகர்கள் மத்தியில் கவனிக்கப்பட்டவர். குழந்தை நட்சத்திரமான ஜெனிபர், பிறகு குமரி நட்சத்திரமாகி சில படங்களில் நடித்தார். ஆனாலும் தீவிர நடிகையாக அவரால் வர முடியவில்லை. எனவே சின்னத்திரைக்குப் போய் அங்கே பல தொடர்களில் நடித்து வருகிறார். அதுமட்டுமல்ல, தொலைக்காட்சித் தொடரிலும் நடன நிகழ்ச்சியிலும் பங்கு பெற்று நடனமாடி வந்தார். இந்தநிலையில், கல்கண்டு என்ற படத்தில் நகைச்சுவை வேடத்தில் நடித்து வருகிறார் ஜெனிபர். நாகேஷின் பேரனும், ஆனந்தபாபுவின் மகனுமான கஜேஷ் நடிக்கும் 'கல்கண்டு' படத்தில் ஜெனிபருக்கு முழுநீள நகைச்சுவை வேடத்தைக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் நந்தகுமார். இவர் விஜயகாந்தை வைத்து தென்னவன், பிரசாந்தை வைத்து ஜாம்பவான் ஆகிய படங்களை இயக்கியவர்.





படம் : ஜீரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ியும் வாய்புகள்

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் படத்தில் நாயகனாக நடித்த பிறகு சந்தானத்தின் நட்பு வட்டார நடிகர்களே அவரை கழட்டி விட்டு வருகின்றனர். அதனால் அவருக்கான படவாய்ப்புகள் குறைந்து கொண்டே வருகிறது. மாறாக, அவருக்கு பின்னால் வந்து கொண்டிருந்த சூரியின் நடிப்பு எகிறி விட்டது. தற்போதைய நிலவரப்படி, லிங்கா, அரண்மனை, ஐ, என சில மெகா படங்களில் மட்டுமே சந்தானம் இருக்கிறார். இதற்கு முக்கிய காரணம், அவரது சம்பளமும் தற்போது ஏறுமுகத்தில் சென்று கொண்டிருப்பதுதான்.நான் நாயகியாகிவிட்டேன் அதனால் பழைய ஞாபகத்தில் என்னிடம் வராதீர்கள் என்று அவர் கூறுவதால் பட்ஜெட் தாங்காது என்று அவரது அபிமான இயக்குநர்களே சூரியை ஒப்பந்தம் செய்து வருகின்றனர். இதனால் சந்தானத்...களெல்லாமே இப்போது சூரிக்கு பின்னால் ...ன. அத்தோடு படப்பிடிப்புகளில் கலந்துகொள் ... செலவை கூட தயாரிப்பாளர்களிடத்தில் ...விலேயே வந்து செல்கிறார் சூரி. மொத்தத் ... சூரியின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது.



படம் : மீகாமன்



...ரத்தில் இரண்டு படங்களை தயாரிக்கும் ...ரிமா இயக்கும் எண்ணம் இல்லை.

## 5 படங்களைத் தயாரிக்கும் குஷ்பு

அரசியல் கோதாவில் இருந்து விலகி விட்ட குஷ்பு இப்போது சின்னத்திரையில் மட்டும் ஒரு சில நிகழ்ச்சிகளில் நடித்து வருகிறார். அதனால் முழுநேர தயாரிப்பாளராக முடிவெடுத்துள்ளார். ஏற்கனவே கிரி, ரெண்டு, நகரம் மறுபக்கம், கலகலப்பு ஆகிய படங்களை தயாரித்திருப்பவர், அஜித்தை வைத்து ஒரு படம் தயாரிக்க திட்டமிட்டார். ஆனால், அவருக்கு சரியான பதில் கிடைக்கவில்லை. அதனால் அந்த முயற்சியைத் தற்காலிகமாக கைவிட்டுவிட்டார். ஆனால், இப்போது ஒரே நேரத்தில் 5 படங்களைத் தயாரிக்க திட்டமிட்டுள்ளாராம் குஷ்பு. அப்படிதான் தயாரிக்கும் படத்தை தனது கணவர் சுந்தர்.சி மட்டுமின்றி மற்ற இயக்குநர்களுக்கும் இயக்க வாய்ப்புக் கொடுக்கப்போகிறாராம். அதோடு ஏற்கனவே ஒரு படத்தில் நடிக்க சிவகார்த்திகேயன்-ஹன்சிகாவை புக் பண்ணி விட்டவர். மேலும் சில நம்பிக்கைக்குரிய நடிகர்-நடிகைகளுக்கு அழைப்பு விட்டு வருகிறாராம். ஆனால் அப்படி குஷ்பு தயாரிக்கும் அனைத்து படங்களுமே சிறு முதலீட்டுப் படங்கள்தானாம். குறைந்த பட்ஜெட்டில் தரமான படங்களை கொடுக்க வேண்டும் என்பதே அவரது நோக்கமாம். அதனால் தற்போது வித்தியாசமான கதைத் தேடலில் ஈடுபட்டுள்ள அவர், அசத்திவரும் சில இளவட்ட நாயகர்களிடமும் வலைவிரித்திருக்கிறாராம்.

இந்த தகவல் பரவியதை அடுத்து திரையுலகத்தில் ஓரிரு படங்கள் நடித்த பல நாயகர்கள் குஷ்புவை முற்றுகையிட்டு வருகின்றனர்.

## ...லிஸ் அதிகாரி வேடத்தில் அபிராமி



அபிராமி மீண்டும் சினிமாவில் நடிக்கிறார். தமிழில் 2000இல் 'வானவில்' படம் மூலம் நாயகியாக அறிமுகமானார். தோஸ்த், சமுத்திரம், சமஸ்தானம் உள்ளிட்ட படங்களில் நடித்தார். கடைசியாக கமலுடன் விருமாண்டி படத்தில் நடித்தார். 2004 இல் இந்தப் படம் வந்தது.

தொடர்ந்து சில படங்களில் நடித்து விட்டு சினிமாவை விட்டு ஒதுங்கியிருந்தார். ஆறு வருடங்களுக்குப் பிறகு தற்போது மீண்டும் சினிமாவில் நடித்து வருகிறார். கேரளாவின் முதல் பெண் ஐ.பி.எஸ் அதிகாரியான குட்டியம்மா வாழ்க்கை மலையாளத்தில் படமாகிறது.

இதில் குட்டியம்மா வேடத்தில் பொலிஸ் அதிகாரியாக அபிராமி நடிக்கிறார்.



## ஓவியப் பிரியர் ஹன்சிகா



ஹன்சிகா மிகச்சிறந்த ஓவியர். ஓய்வு கிடைத்தால் போதும் தூரிகை யும் கையுமாக உட்கார்ந்து விடுகிறார்.

இவர் வரைந்த ஓவியங்கள் மும்மைப் யில் உள்ள அவருடைய வீட்டை அலங்கரிக்கின்றன. தான் ஓவியர் ஆனது எப்படி? என்பது குறித்து ஹன்சிகா அளித்த பேட்டியில்.

குழந்தை பருவத்தில் இருந்தே எனக்கு ஓவியங்கள் மீது மிகுந்த ஈடுபாடு. ஏழு வயதில் நான் இரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது, முதன்முதலாக வர்ணம் தீட்ட ஆரம்பித்தேன். நான் முதன்முதலாக வரைந்த ஓவியம், ஒரு சிங்கம். அழகாக வரைந்து இருக்கிறேன் என்று என் குடும்பத்தினர் அனைவரும் பாராட்டினார்கள். அந்தப்பாராட்டுதான் என்னை தொடர்ந்து ஓவியங்கள் வரைய தூண்டியது. இதற்காக ஓவியப் பள்ளிக்குப் போய் படிக்கவில்லை. விரும்பியதை எல்லாம் வரைய ஆரம்பித்தேன்.

நடிப்பை என் தொழிலாகவும், ஓவியம் வரைவதை பொழுதுபோக்காகவும் வைத்திருக்கிறேன். சினிமாவில் தீவிரமான பிறகு வரைவதற்கு நேரம் கிடைப்பதில்லை. அபூர்வமாக ஓய்வு கிடைக்கிறது. அந்தச் சமயங்களில் ஓவியக் கலையில் ஈடுபடுகிறேன். ஓவியங்கள் வரைவது எனக்கு ஆத்ம திருப்தியை அளிக்கிறது. இதுவரை 30 இற்கும் மேற்பட்ட ஓவியங்களை வரைந்திருக்கிறேன். சிவன், பார்வதி, விநாயகர் என பல கடவுள்களின் படங்களை வரைந்திருக்கிறேன். நான் வரைந்த ஓவியங்களிலேயே எனக்கு மிகவும் பிடித்த ஓவியம், விநாயகர். என் ஓவியங்களை ஒரு கண்காட்சியாக பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் என்பது நீண்டகால ஆசை. அதன் மூலம் கிடைக்கும் பணத்தை மாற்பக புற்று நோயாளிகளுக்கும், ஆதரவற்ற குழந்தைகளுக்கும் கொடுக்க முடிவு செய்திருக்கிறேன்.

இவ்வாறு ஹன்சிகா கூறினார். பிரபலமான நடிகையாக இருந்தாலும் 25 குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதோடு ஓவியம் வரைவதிலும் ஆர்வமாக இருக்கும் ஹன்சிகா வித்தியாசமானவர்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



... புகை மாதிரி பனி மூட்டமே காணப்படுகிறது.

# குழந்தைகளுக்கான புதிய டேப்லட்




கூகுளின் பிந்திய இயங்குதளப்பதிப்பான Android 4.4 இல் இயங்கக்கூடிய Nabi Jr Tablet எனும் குழந்தைகளுக்கான புதிய டேப்லட் அறிமுகம் செய்யப்படவுள்ளது. 270 டொலர் பெறுமதியான இந்த டேப்லட்டில் Tegra 3 Processor பிரதான நினைவமாக 2GB RAM மற்றும் சேமிப்பு நினைவகமாக 16 GB தரப்பட்டுள்ளது. மேலும் 8 அங்குல அளவு, 1920 x 1200 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ள இந்த டேப்லட்டில் 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பனவும் தரப்பட்டுள்ளன.

# சர்ச்சைகளில் சிக்கும் நித்தியானந்தா

சர்ச்சை சாமியார் நித்யானந்தா, தொடர்ந்தும் சர்ச்சைகளை எதிர்கொண்டு வருகின்றார். தான் கன்னட அமைப்புகளை திட்டவில்லை என்று மறுப்பு தெரிவித்துள்ளார். கன்னட அமைப்புகள் கடந்தவாரம் பிடதியில் உள்ள நித்யானந்தா ஆசிரமத்திற்கு வெளியே போராட்டத்தில் குதித்ததோடு, நித்யானந்தாவை கைது செய்யக் கோரி கோஷம் எழுப்பியுள்ளனர். சாமியார் நித்யானந்தாவை கைது செய்து ஓகஸ்ட் 6ஆம் திகதிக்குள் பாலியல் பரிசோதனை நடத்த வேண்டும் என ராம்நகர் மாவட்ட அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், தனிப்படை பொலிஸார் தன்னை தேடிவரும் நிலையில் கன்னட அமைப்புகளின் போராட்டம் தொடர்பாக நித்யானந்தா அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு.

நான் கன்னட அமைப்பினரை விமர்சிக்கவில்லை, சிறுவயதில் திருவண்ணாமலையில் இருக்கும்போது கொடியை தூக்கிக்கொண்டு போராட்டம் நடத்திக்கொண்டிருந்த கம்யூனிஸ்ட்டுகளை தான் திட்டினேன்.

வாரத்தின் 7 நாட்களும் ஏதாவது ஒரு பிரச்சினைக்காக கூச்சல் போடுவார்கள். ஒரு பிரச்சினை முடிவதற்குள் இன்னொரு பிரச்சினைக்கு தாவி விடுவார்கள்.

அவர்களுடைய குறிக்கோள் பணம் தான். இதனை நான் திருவண்ணா மலையில் பார்த்துள்ளதால் கூறினேன்.

ஆனால் கன்னடத் தொலைக்காட்சிகள் இதனைத் தவறாக வெளியிட்டுள்ளனர். கன்னட மக்களை என்னுடைய மக்களாக கருதுவதால் ஒருபோதும் அவர்களை பற்றித் தவறாக பேசமாட்டேன் எனவும் தெரிவித்துள்ளார்.




# வளைந்த மேற்பரப்பு தொலைக்காட்சி அறிமுகம்

LG நிறுவனம் 105 அங்குல அளவுடைய பெரிய தொலைக்காட்சி ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது. முதன் முதலில் தென்கொரியாவில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள இந்தத் தொலைக்காட்சியானது, வளைந்த மேற்பரப்பினை உடையதுடன், அல்ட்ரா HD தொழில்நுட்பத்தினை உள்ளடக்கியுள்ளது.

அத்துடன் 4K Resolution 21:9 அளவிடை என்பனவற்றினையும் 7.2 சேனல் ஸ்பீக்கர் சிஸ்டத்தினையும் கொண்டுள்ளது.

பலத்த வரவேற்பைப்பெற்றுள்ள இந்தத் தொலைக்காட்சிகள் இதுவரை 117,000 டொலர்கள் பெறுமதிக்கு முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# குளியலறையில் முதலை

குஜராத்தின் அனந்த் மாவட்டம் சொஜித்ரா நகரில் உள்ள ஒரு குடியிருப்பின் குளியறையில் முதலை இருப்பதை பார்த்து வீட்டிலுள்ளவர்கள் கடும் அதிர்ச்சியடைந்தனர்.

தனது வீட்டிலுள்ள குளியலறையில் குளிக்க சென்ற பாரத் படேல்



என்பவர் குளியலறையின் மூலையில் ஐந்து அடி நீள முதலை இருப்பதை பார்த்து கடும் அதிர்ச்சியடைந்தார். உடனடியாக குளியலறை கதவை வெளிப்புறமாக பூட்டிய அவர், அக்கம் பக்கத்தினரிடம் இதுபற்றி கூறினார். வனத்துறையினருக்கும் உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது. விரைந்து வந்த வனத்துறையினர் கூண்டுக்குள் முதலையை பிடித்து அனந்த் மாவட்டத்தின் மலட்டாஜ் கிராமம் அருகே உள்ள ஏரியில் கொண்டு போய்விட்டனர்



# வினோதமான வயல்வெளி

ஜேர்மனியின் பவேரியா நகரம் அருகே உள்ள கிராமப்புறம் ஒன்றில், கோதுமை வயலில் செய்யப்பட்டிருந்த வித்தியாசமான வட்ட வடிவிலான அறுவடையால் உருவாகியுள்ள சின்னம், பல்வேறு வியூகங்களை எழுப்பியுள்ளது.

அந்த பிரமாண்ட வயல்வெளியில் ஒரு பெரிய கோதுமை வயலில் மட்டும், நன்கு விளைந்திருந்த பயிர்கள், குறிப்பிட்ட வடிவத்தில் வெட்டப்பட்டிருந்த தால், ஒரு வித்தியாசமான வடிவம் உருவாகியிருந்தது.

வானில், காற்றடைத்த பலூனில் பறந்த சாகச வீரர் ஒருவர் தற்செயலாக பார்த்து, அவற்றை படம்பிடித்து, சமூக வலைதளத்தில் வெளியிட்டதை அடுத்து, அந்த வினோத வயல்வெளியை ஏராளமானோர் பார்த்து செல்கின்றனர்.

அந்த இடத்தில் காந்த சக்தி இருப்பதாக கூறும் சிலர், அங்கே அமர்ந்து தியானமும் செய்கின்றனர். எனினும், அந்த வயலில் உருவான வித்தியாசமான வடிவம் பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது எனவும், தான் அவ்வாறு செய்யவில்லை என்றும், வயலின் உரிமையாளர் கூறியுள்ளார். வயல் வெளியில் நின்றபடி பார்த்தால், எந்த வித்தியாசமும் தெரியவில்லை வானில் இருந்து பார்த்தால் அற்புதமான வட்ட வடிவமும் அதனுள் மனித கண்கள், காது, மூக்கு, வாய் போன்ற அமைப்புகளும் இருப்பதை அறிய முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வின் ஊற்று -07



## காமுகர்க்கு

கையிலுள்ள
தடியாலே
கடாவை
அடக்குதல் போல்
கற்க வரும்
பிள்ளைகள் மேல்
கணை தொடுக்கும்
காமுகர்க்கு
மனதை அடக்கச்
சொல்லும்
மற்றவைகள் தானாக
அடங்கும் என்று

அ.பத்மினி,
யா/ உசன் இராமநாதன்
ம.வி

## முட்டாள் தனம்

தெய்வத்தின்
சந்நிதியில்
கொடூரர்களின்
கேலிக் கூத்து
காத்து நிற்கும்
தெய்வத்துக்கு
கடாக்களின்
கழுத்துக்கள்
ஒப்படைப்பு
ஐந்தறிவு
ஜீவன்களின்
அழுகுரல்
வேடிக்கை
பார்ப்போருக்கு
ஏளனம்
ஏன் இந்தக்
கொடூரம்
விட்டு விடுங்கள்
படைத்தவனே
அழித்திடுவான்
என்றோ
ஒரு நாள்.

கே.அகிலன்,
கண்கம்பிலைக்குளம்

## அறிவு

ஆறறிவு
உடையவர்களே
பலியிடல் நியாயம்
எனச் சொல்லும் போது
ஐந்தறிவு படைத்த
உன்னால்
நியாயமில்லை
எனச் சொல்லி
உன் மரணத்தை
தடுக்க முடியாது தானே!

-நீ.நிரூதா,
உரும்பிராய்.

## பலிக்களம்

ஓ... மிருகமே
வழமை போல்
உணவு
தருவதற்காகத் தான்
உன்னைக்
கூட்டிச் செல்கிறார்கள்
என்று நினைத்தே
அவர்கள்
பின்னால்
இந்த
இடத்துக்கு
வந்து
சேர்ந்தாயோ?

-வதனன்,
கோண்டாவில்.

## வேண்டாம் மிருகபலி

ஆலயங்களில்
வேள்வியென்ற
பெயரால்
மிருகங்களைக்
கொன்று குவிக்குப்
மனிதர்களே
ஒரு நிமிடம்
சிந்தியுங்கள்
கருணையே
வடிவமாகி
அனைத்து
உயிர்களிலும்
நிறைந்துள்ள
இறைவன்
மிருக பலியை
விரும்புவானா
என்று!

-சி. ஜெயரூபன்,
பருத்தித்துறை.

## நரகம்

ஓ.....
மரணமே... நீ
என்னை அழைத்துச்
சென்றாய்
எமதர்மன் கேட்கிறான்
ஏய் மானிடா
உன் பாவக்
கணக்கின் படி
சொர்க்கம் நரகம்
சமமாக உள்ளது
முதலில் எங்கே
செல்கிறாய்?
புன்னகையுடன்- பதில்
சொன்னேன்....
நரகமே செல்கிறேன்
ஏனெனில்
பழகிய இடத்தில்
வாழ்வது சுலபம் தானே!

-எஸ். கௌதம்,
தர்மபுரம்.

## மனித மிருகங்கள்

இரவிரவாக
ஆட்டுக்கடா
பலிகள்
விழுந்த பின்பு
வீடுகளில்
ஆட்டுக்கறி

என்னடா
உலகம் இது
சாமி கேட்காத
வேள்விகளை
மனித மிருகங்கள்
அரங்கேற்றி
முடிக்கின்றன.

-வே. வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்

## அடங்கி விட்டாயா

வாய் பேசும்
சின்னஞ் சிறிய
சிறார்களையே
சீண்டிப் பார்க்கும்
இந்தக் காலத்தில்
வாய் பேசாத
உன்னால்
என்ன தான்
செய்ய
இயலும் என்று
அடங்கி விட்டாயா?

-நா. டர்சிகா,
சங்கானை.

## என்ன குற்றம்

களவு எடுத்தாயா
கன்னியை
கற்பழித்தாயா
சுற்றி வரும்
பூமியில்
சுழன்ற
மாந்தரை
குண்டு
வைத்தழித்தாயா?

வானில் பறந்த
விமானத்தை
நடுக்கடலில்
சுட்டு வீழ்த்தினாயா?
பயங்கரவாதி என்ற
பட்டமும் பெறவில்லை

பள்ளி அறையில்
இருந்தவளை
பாதியிலே இழுத்து
வந்தாயா?
பாதகம் எதுவும்
செய்யாத உன்ன
பலர் முன் வைத்து
பரிதவிக்க
வெட்டுகிறார்களே
ஏன்?

-ஜெ. விஜயலட்சுமி,
மல்லாகம்.

# கவிதைப்புனல்




## நட்பு

இன்பத்தில்
மட்டுமன்றி
துன்பத்திலும்
தோள் கொடுத்துதவும்
உலகு வாழ்
உயிரினங்களின்
உயரிய
சங்கமம்

-த.ஜெயதீபன்,
தர்மபுரம்.

## நாணயம்



இருக்கையில்
மனாங்களின்
நாணயம்
தவறியதால்
பிணங்களின்
நெற்றியில்
நாணயம்

-அ. அஜந்தன்,
கந்தர்மடம்.

## தூரம் போகும் நாரைகளே

தூரம் போகும்
நாரைகளே
எம் மண்ணின்
துயரங்களை
நீங்கள்
துணிந்து
கொண்டு
செல்லுங்கள்
ஆழ அரிந்து
நிற்கும்
எம் மன வேர்களின்
துயரங்கள்
வான வெளியில்
சிதறட்டும்
அங்கேயும்
எமக்காக
குரல்
கொடுக்கும்
வானம் பாடிகளின்
குரல்.. ஒலிக்கட்டும்...

-முல்லை ரமணன்

## ஓடம்

கரை தேடும்
ஓடமாக...
கட்டியிழுக்கப்படும்
என் உயிர்
ஈழ நதியின்
இதயச் சுவரில்
ஒரு துளி....!

-த. பருத்தி தாசன்

## இதயம்

எந்த நேரமும்
வடக்கு திசையையே
காட்டும்
திசைமானி
போலவே
என்னிதயமும்
உன்னையே
காட்டுகிறது
எனக்குரியவள்
நீ தான் என்று

-ஏ. பாரிஸ்,
மீஹிந்தலை

## கவியில் ஓர் காதல்




வாழ்வில் வேண்டும்
நீ வார்த்தைகளால்
பகிர முடியவில்லை
வார்க்கிறேன்
கவி வரிகளில்

என் அளவுக்கு
உண்மையாகவே நீயும்
என்னை நேசிக்கிறாயா?
அன்பே உன்
நேசிப்பும் நிஜம் என்றால்
உறவே உன் தோள் சாய
வேண்டும்

நிஜமாக நினைவுகள்
எல்லாம் நீ
நித்திய பொழுதும்
உன் ஞாபகம்
மறக்கப்பட
முடியாத உறவு
மறுக்க முடியாத
உன் அன்பு
சண்டை போட்டு
சேர்ந்திடும் பொழுதுகள்
சத்தியமாக

உன் அன்பின் வீதம்
குறைவென்றால்
உறவே மன்னித்து விடு
என் எதிர்பார்ப்புகளும்,
ஆசைகளும்
என்னோடு மட்டுமே
முடிந்து போகட்டும்

-வந்தனா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரைதேடும் இணைய வலை

ஒரு வலையமைப்பை வேவு பார்த்து அதிலிருக்கும் வலையமைப்பு எண்கள், வெளித்தொடர்புக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கும் வலைத்தொடர்பு புள்ளிகள் ஆகிய வற்றை அறிந்து கொள்ள ஹக்கர்கள் மேற்கொள்ளும் Reconnaissance Scan முடிந்த பின் கிடைத்தத் தகவல் களுக்கேற்ப தங்கள் தாக்குதல் குறித்து திட்டமிடுவார்கள். இந்தத் தாக்குதல் எந்த ரூபத்தில் வருமென்று யாராலும் கணிக்க முடியாதபடி வித்தியாசமாக யோசிக்கும் கில்லாடி ஹக்கர்களும், அவற்றை எதிர்கொள்ளும் போது தாக்குத லின் விதத்தை வைத்தே அவர்களின் இடம், வயது, உபயோகப்படுத்தும் மென்பொருள்கள் முதற்கொண்டு அவர்கள் வயதுக்கு வந்த நேரம் வரை புட்டுப்புட்டு வைக் கும் வலையமைப்பு பாதுகாப்பு வல்லுநர்களும் வாழும் ஒரே அதிசய உலகம் தான் இணையம்.

ஒரு வலையமைப்பின் வாஸ்து விவரங்கள் அனைத்தை யும் வேவு பார்த்து முடித்த பின் (Reconnaisance Scan), கிடைத்த விவரங்களுக்கு ஏற்றவாறு வலைத் தாக்குலை முன்னெடுப்பதுதான் அடுத்த கட்டம். இந்தக் கட்டத்தில் தான் ஒரு வலையமைப்பில் தொடர்பு கொள்ளக் கூடிய உபகரணத்தின் அல்லது கணினியின் இயங்கு தளம் என்ன, எந்தவிதமான பயன்பாட்டுக்கு அது பயன் படுத்தப் படுகிறது, என்னென்ன மென்பொருள்கள் இருக் கின்றன, போன்ற விவரங்கள் வரை சகலமும் திரட்டப்படும்.

உலகில் உள்ள அனைத்துப் பொருள்களுக்கும், உயிர்க ளுக்கும் ஒரு பலவீனம் இருக்கும். அது புகழ்ச்சி, மது, மாது, சூதும் உணவு, பணம், பேஸ்புக் லைக்குகள், அதி கம் பரிந்துரைக்கப்பட்ட இடுகை, மதம், சாதி இப்படி எது வாக வேண்டுமானாலும் இருக்கலாம். கிட்டத்தட்ட இதே தத்துவ விஞ்ஞானம் வலையமைப்புகளுக்கும், கணினிக ளுக்கும் கூட செல்லுபடியாகும். இயங்குதளங்கள், அனைத்து வலையமைப்பு உபகரணங்கள், தகவல் தளங்கள் மற்றும் இந்த உலகத்தையே இணையத்தில் மேய விடும் உலாவிகள் இப்படி சகலமும் அடிப்படையில் ஏதோ ஒரு கணினி மொழியில் எழுதப்பட்ட மென் பொருள்கள் தான் என்பதை நினைவில் கொள்ளவும்.


இரவும், பகலும் வீட்டுக்குக் காய்கறி கூட் வாங்காமல் உழைக்கும் மென்பொருள் வல்லுநர்களின் மிகப்பெரிய சவால், அவர்கள் தயாரித்த மென்பொருட்கள் பொதுப் பயன்பாட்டுக்கென்று சந்தையில் விற்பனைக்குச் சென்ற பின், அதில் இது நொட்டை, அது நொள்ளை என்று குறை சொல்லும் வாடிக்கையாளர்கள் தான். இது போன்ற குற்றச்சாட்டுகளைக் கேட்டு சீதையைப்போன்று தீக்குளிக் கத் தோன்றினாலும், அது மிகவும் சுடும் என்பதால் குறிப்பிட்ட கால இடைவெளியில் அதுநாள் வரை தெரிவிக் கப்பட்டக் குறைகளை நிவர்த்தி செய்து புத்தம் புதிய ஈஸ்ட்மென் கலரில் பதிப்புருக்கள் (versions) வெளி யிடுவது வழக்கம்.

இது போன்ற குறைபாடுகளைத் தவிர்க்கத்தான் அனைத்து மென்பொருள் நிறுவனங்களும், தயாரித்த மென்பொருள் களை சோதனை செய்து பார்க்க, குறை கண்டுபிடித்தே பெயர் வாங்கும் சோதனையாளர்கள் குழுவினை உரு வாக்கியது. இவர்கள் செய்யும் சோதனை பெரும்பாலும் குறிப்பிட்ட மென்பொருளின் பயன்பாட்டைச் சார்ந்ததாகவே இருக்கும்.

இன்றைய இணைய உலகில் பொதுப்பயன்பாட்டுக்கென எழுதப்படும் நிரல்கள்ஃமென்பொருள்களின் பாதுகாப்புத் திறன் குறித்து விரிவான அலசலோ அல்லது சோத னையோ செய்வது மிகமிக அரிது. காரணம் ஒரு மென் பொருளில் அல்லது நிரலின் எந்த விதமான குறை பாடுகளை (Vulnerabilities) ஹக்கர்கள் பயன்படுத்து வார்கள் என்பதையும் அதன் மூலம் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்து வார்கள் என்பதையும் எல்லோரலும் கணித்து விட முடியாது. பாதுகாப்பு வல்லுநர்களோ அல்லது ஹக்கர்களோ தாங்களே முன்வந்து சொல்லும் வரை யாருக்கும் தெரியப்போவ தில்லை.


நிறுவனங்கள்/மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் மென்பொருள்களில் கூட சில சமயங்களில் பாதுகாப்புக் குறை பாடுகள் கடந்த காலங்களில் கண்டறியப்பட்டு வலைய மைப்பு நிலைவரம் கலவரம் ஆன வரலாறுகள் பல உண்டு. உதாரணத்துக்கு உலகமெங்கும் உள்ள அனைத்து வீடுகளிலும் சீனப்பொருள்களுக்கு இணையாக இடம்

▪ சுடுதண்ணி



பிடித்த ஒரே அமெரிக்கத் தயாரிப்பான மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் விண்டோஸ் இயங்குதளத்தினை எடுத்துக் கொள்வோம். பிரதி மாதம் இரண்டாவது செவ்வாய்க் கிழமை கணினி உலகம் சம்பள நாளாக இல்லாத பட்சத் தில் எதிர்பார்க்கும் முக்கிய விஷயம் மைக்ரோசொப்ட் நிறு வனம் வெளியிடும் விண்டோஸ் இயங்குதளத்தின் பாது காப்புக் குறைபாடுகளை சரி செய்வதற்கான நிரல்திட்டுகள் (patches). கடந்த பதினைந்து வருடங்களுக்கும் மேலாக அந்தக் காலகட்டத்தில் பயன்பாட்டு இயங்குதள பதிப்புக் கான இந்த மாதாந்த வெளியீடு நடந்து கொண்டே தான் இருக்கிறது. அடுத்த நாளே அடுத்த வெளியீட்டுக்கான குறைபாடுகள் கண்டுபிடித்து வெளியிடுவதற்கான பணிகள் ஆரம்பமாகி விடும்.

குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்ட அன்றே அதனைப் பயன்படுத்தி தாக்குதலைத் தொடுத்து அனைவரையும் திணறடிக்கும் அதிரடி ஹக்கர்களைக் கையாள்வது தான் இருப்பதிலேயே கடினமான பணி.. கன்னித்தீவுக் கதை போல் இது தொடர்ந்து கொண்டே தான் இருக்கப் போகிறது. இதன் மூலம் பாதுகாப்பு குறைபாடுகளை முழுமையாகச் சரிசெய்வது எவ்வளவு கடினம் என்பதை அறிந்து கொள்ள லாம். மைக்ரோசொப்ட் போன்ற திமிங்கலங்களையே திணறடிக்கும் இந்தப்பிரச்சினை சிறு நிறுவனங்களுக்கு எவ்வளவு சவாலாக இருக்குமென்பதையும் ஊகித்துக் கொள்ளலாம். (வலை விரியும்)



## உணர்வின் ஊற்று

*வாசகர்களே! நீங்கள் கவிதை எழுத விரும்பு பவர்களா? அப்படியா யின் உங்களுடைய கவி யாற்றலுக்கு ஒரு சவால். இந்தப் பகுதியில் பிரசுரமாகியிருக்கும் ஒளி ஓவியத்தை பார்க்கும்போது உங்கள் மனதில் எழும் உணர்வுகளை 10 வரிக்குள் கவிதையாக்கி அனுப்புங்கள்.*

**அனுப்பவேண்டிய முடிவுத் திகதி : 17.08.2014** தரமானவை பிரசுரிக்கப்படும்.

முகவரி :

உணர்வின் ஊற்று - 9

**சுடர் ஒளி**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவக்காதல் சரியா?

காதலர்கள் இருவரும் சேர்த்து தனித்து வாழ முடிவெடுக்க முடியாத வயதில் ஏற்படும் காதலே அறியாப்பருவக் காதல் எனப்படுகிறது. இந்த வயதில்தான் கண்டிப்பாக எல்லா மனிதர்களும் காதலில் விழுகிறார்கள். மனதுக்குப் பிடித்தவர்கள் என்று எவரையாவது அடையாளம் கண்டுகொள்கிறார்கள். காதல் என்பதை உயிரினும் மேலாக நினைப்பார்கள். ஆனால் இந்தக் காலகட்டத்தில் காதலில் ஒரு மிகப்பெரிய குறை இருக்கும். அதாவது இன்று தான் பார்க்கும் ஓர் அழகி அல்லது அழகனைவிட சிறப்பாக இன்னொருவரைப் பார்க்க நேர்ந்தால், அதுவரை இருந்த காதல் ஒத்துவராது என தனக்குள் முடிவு கட்டிவிட்டு அடுத்த காதலில் இறங்கிவிடுவார்கள்.

எப்படி பருவமடையாத வயதில் திருமணம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதில் சமூகம் உறுதியாக இருக்கிறதோ, அப்படியே காதலில் விழுந்த ஆண் அல்லது பெண்ணிடம் வாழ்வதற்கு ஆதாரத் தேவையான வருமானம் இல்லாத பொழுது, அந்தக் காதலும் ஏற்றுக்கெள்ளப்படாது. வருமானம் இல்லாதவர்களும் பருவ வயதினரும் காதல் செய்ய முழுத் தகுதி பெற்றவர்கள். காதல் செய்யத் தகுதி படைத்தவர்கள் எனும் பொழுது காதலிக்கப்படவும் இவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் திட்டமிட்டு எதிர்காலத்தை கருத்தில் கொண்டு திடமான மனதோடு இருந்தால் பருவ வயது காதல்களும் காலம் முழுதும் வாடாதிருக்கும்.



தன் மனதில் தோன்றும் ஆசைகள் அனைத்துக்கும் உருவம் கொடுக்க நினைப்பார்கள். தன்னிடம் என்னென்ன தகுதிகள் இருக்கின்றன என்பதை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், எதிரே இருப்பவரின் தகுதியினை மட்டுமே பார்ப்பார்கள்.

தனக்குப் பாடம் எடுக்கும் ஆசிரியர், ஆசிரியை, சினிமா நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்கள் என இந்தப் பருவக் காதல் வயது வேறுபாடு, தகுதி, தேசம்,இனம், மதம், மொழி என எவற்றையும் கணக்கில் கொள்ளாமல் உருவாகி விடுகிறது. காதலை அல்லது காதலரை வாழவைப்பதற்கு அடிப்படைத் தேவையான வருமானம், மன உறுதி, உடல் உறுதி போன்றவை இல்லாத காரணத்தால் இத்தகைய காதல்கள் தப்பிப் பிழைப்பது மிகக் குறைவே. பணம் சம்பாதிக்காதவர்களுக்கு காதல் வரக்கூடாதா எனக் கேட்கலாம். காதல் வருவதற்கு வருமானம் தடையாக இருக்காது. ஆனால் நாம் காதலில் வெற்றிபெறுவதைப் பற்றியும், திருமணம் முடிப்பது பற்றியும், அதற்குப் பின்னரும் வாழ்நாள் முழுவதும் காதல் தொடர வேண்டும் என்பதால் வருமானம் இல்லாதவர்கள் காதலின் அடுத்த கட்டத்தை தொடமுடியாது என்பதுதான் நிஜம்.

## நிசப்த வெளிக் காதல்

- தபின்

கோடைகாலம் பற்றிய
அசை மீட்டலின் நடுவே
உறைந்து போய்க் கிடக்கிறது
நீ தெளித்து விட்டு போன
நீர்த்திவலைகள்.


இரவின் துளைகள் வழியே
அவை பெருக்கெடுக்க
உள்ளுக்குள்
ஊறத் தொடங்குகிறது
ஈரம்

உனதான
நீர்ச் சொற்களுக்குள்
அமிழ்ந்து,
அலைக்கழிக்கப்பட்டு
பின்
பெரும் பிரவாகம் ஒன்றினால்
தூக்கியெறியப்பட்டேன்
உன் குளியலறைக்குள்.

அங்கு
கனவுகள் நிரம்பிய வாசனை
குமிழிகளாக
உடைபடும் பிரதிமைகள்
குருதித்துளியாக
தெறிப்படைந்து கிடக்கும்
மஞ்சள் வெயிலின் ரேகைகள்.

இத்தனைகளோடும்
நீ,நான் மற்றும்
உன் நீர்க் காதலன்.

# காதலிக்கத் தூண்டும் காதல் வங்கி



மனிதர்களிடம் காதல் உணர்வு இருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். ஆனால் அது மூளையின் எந்த பகுதியில் இருந்து செயற்படுகிறது? எப்படிச் செயற்படுகிறது? காதல் உணர்வு மனிதனுக்குள் பாயும்போது மூளையில் என்ன மாதிரியான மாற்றங்கள் நிகழ்கின்றன ? என்பனபற்றியெல்லாம் பெரும் புதிராகத்தான் இருந்து வந்தது. இந்தப்புதிருக்கான விடையை லண்டன் பல்லைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி செமிர் ஜெகி தனது நீண்ட கால ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்துள்ளார்.

மனித மூளையில் 'காதல் வங்கி' என்ற ஒரு பகுதி அதிவேகமாகச் செயற்படுகிறது. மனிதனுக்குள் காதல் உணர்வை ஏற்படுத்துவது சில இரசாயனக் கலவைகள்தான். ஒரு ஆண் இன்னொரு பெண்ணை மோகத்துடன் பார்க்கத் தூண்டுவது இந்த இரசாயனம்தான். சில ஆண்கள் ஒரு பெண்ணைப் பார்த்ததும் முதல் பார்வையிலேயே மனதைப் பறி கொடுத்து விட்டேன் என்று சொல்லிப் புலம்புவார்கள். காரணம் முதல் பார்வையிலேயே அவர்களது மூளையில் உள்ள காதல் வங்கியில் அந்த அழகு தேவதையின் முகம் பதிவாகி விடுவதுதான். இப்படி ஒரு ஆணின் காதல் வங்கியில் ஒரு பெண் முகம் பதிவு செய்யப்பட்டு விட்டால் எளிதில் அந்த வங்கியில் ஏற்பட்ட இரசாயன மாற்றம் மாறாது.

அந்த இரசாயனம் அந்தப் பெண்ணை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டுகிறது. அப்படிப் பார்க்கும்போது காதல் வங்கியின் செயற்பாடு முன்பைவிட பல மடங்கு வேகமாக இருக்கும். அப்போது காதல் எண்ணங்களைத் தவிர வேறு எதையும் அது நாடாது. இதே போல் தான் பெண்களின் மூளையில் உள்ள காதல் வங்கியும் செயற்படுகிறது. இருவரின் மனதிலும் ஒரே மாதிரியான எண்ணங்கள், ஆசைகள், லட்சியம் இருக்கும்போது காதல் உணர்வுகள் காற்று வேகத்தில் ஒன்றுடன் ஒன்று கலந்து அவரவர் காதல் வங்கிகளில் பரிமாற்றம் செய்கின்றன. அதன் பிறகு அந்த ஆணும், பெண்ணும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளும்போதும், பார்க்கும்போதும், காதல் வங்கிகள் அசுர வேகத்தில் செயற்பட்டு இன்பக் கிளர்ச்சிகளை ஏற்படுத்துகின்றன. இந்த மாதிரியான காதலர்கள் கடைசி வரை பிரியமாட்டார்கள் என்பது விசேடமான ஒன்று.

அது சரி மூளையில் காதல் வங்கி எங்கே இருக்கிறது என்கிறீர்களா? மூளையில் உள்ள புட்டமன், இன்சுலா ஆகிய பகுதிகள்தான் காதல் வங்கி என்று அழைக்கப்படுகிறது. இதில் ஏற்படும் இரசாயன மாற்றம்தான் ஆண்பெண் ஜோடிகளை காதல் வானில் சிறகடித்து பறக்க வைக்கிறது.

காதலர்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தும்போது, பாராட்டும் போது, பரிசு கொடுத்து வாழ்த்தும் சமயங்களில் காதல் வங்கியில் இராசயனச் சேமிப்பு பல மடங்கு அதிகமாகிறது. இந்த சேமிப்பு அதிகரித்தால் வாழ்க்கை சொர்க்கம் போல் மாறும். அதே சமயத்தில் காதல் ஜோடிகள் ஒருவரை ஒருவர் வெறுக்கும்போதும், திட்டிக்கொண்டிருக்கும்போதும், சந்தேகப்படும் சமயங்களிலும் காதல் வங்கியில் இராசயனச்சேமிப்பு மெல்ல மெல்லக் குறைந்து விடும்.

இந்த இராசயனச்சேமிப்பு முற்றிலும் குறைந்து பூஜ்ஜிய நிலையை எட்டும் போது காதல் வங்கியானது வெறுப்பு வங்கியாக மாறிவிடுகிறது.

காதல் வங்கி ஒரு அற்புதமான விஷயம். காதலர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு சகிப்புத்தன்மையுடன் விட்டுக்கொடுத்து வாழ்ந்தால் காதல் வங்கி கலக்கலாக செயற்படும். காதல் வங்கியின் செயற்பாட்டில் டெஸ்டோஸ்டிரான், ஈஸ்ட்ரோஜன் ஆகிய ஹோர்மோன்களின் செயல்பாடும் முக்கிய பங்கு வகிக்கின்றன.




# மாட்டிக் கொள்ளாமல் காதலிக்க...!

**தப்பித்தல் - 04**

* எப்போதும் தங்களுடைய காதலரின் குரலைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் அல்லது அவர்கள் அனுப்பிய காதல் ரசம் சொட்டும் குறுஞ்செய்திகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எல்லோர்க்கும் உண்டு தான். அதற்காக சிலர் காதலர்களோடு உரையாடும் போது அதைப் பதிவு செய்து வைத்திருப்பார்கள். அதே போன்று குறுஞ் செய்திகளையும் தனியான சேமிப்பகம் ஒன்றில் பத்திரப்படுத்தி வைத்திருப்பார்கள்.ஆனால் இதுவும் சில நேரங்களில் மாட்டக் கூடாதவர்களின் கைகளில் மாட்டி விட்டால் உங்கள் காதலும் சிக்கலில் விழுந்து விடும்.
* பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகம் இருண்டு விடும் என்று நினைக்குமாம். அதைப் போன்று காதலர்களும் தாங்கள் செய்வது தங்களுக்கு மட்டுமே தெரியும் என்ற எண்ணத்தில் இருப்பார்கள்.உண்மையில் அது தவறானது. சுற்றிலும் உள்ளவர்கள் தம்மை கண்காணிக்க மாட்டார்கள் என்று நினைப்பார்கள். அத்தோடு தாம் இருவரும் பேசுவது தமக்கு மட்டுமே கேட்கும் என்ற எண்ணத்தில் சுற்றுச் சூழலை மறந்து செல்போனில் கதைப்பார்கள்.ஆனால் சுவருக்கும் காது உண்டு என்பதை எப்போதும் காதலர்கள் நினைவில் கொண்டால் ஆபத்துக்களைத் தவிர்க்கலாம். (ஆலோசனைகள் தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு

46



சில கடிதங்களையும் அவர் எனக்குப் படித்துக் காட்டினார். யாழ்ப்பாணத்தில் உள்ள பெண் தொண்டர்களிடமிருந்து வந்தவை அவை. தமக்கும் இராணுவப் பயிற்சி தர வேண்டும் என்று அவர்கள் கேட்டிருந்தார்கள். கொடுமையான ஒடுக்கு முறையில் இருந்து தம் மக்களை விடுவிக்கும் விடுதலைப் போராட்டத்தில் தாமும் மும்முரமாக ஈடுபட இந்தப்பயிற்சி உதவுமென அவர்கள் கேட்டிருந்தார்கள்.

ஆனால் 1983இன் பிற்பகுதியில் பிரபாகரன் கவனம் முழு வதும் இந்திய அரசு தமக்கு வழங்கும் இராணுவப் பயிற்சித் திட்டம் என்ற பொன்னான வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்துவதிலேயே குவிந்திருந்தது. அந்த நிலைப்பாடு சரியே என்பதும் பின்னர் நிரூபணமாயிற்று. இராணுவப் பயிற்சியை நாடிய நூற்றுக்கணக்கான வட கிழக்கு இளைஞர்கள் விடுதலைப் புலியணியில் பிரபாகரனுடைய மூத்த போராளிகளின் கீழ் சேர்க்கப்பட்டு வடஇந்தியாவுக்கு பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்கள். இந்திய இராணுவத் தளங்களில் கணிசமான அளவு போராளிகள் ராணுவப் பயிற்சி பெற்றபின் தமிழ் நாட்டிலே ராணுவப் பயிற்சிப் பாசறைகளை நிறுவுவதில் பிரபாகரன் தமது கவனத்தைத் திருப்பினார்.

அங்கே, இந்தியப் பயிற்சி பெற்றவர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து புதிதாக சேர்ப்பவர்களுக்குத் தரமான பயிற்சி வழங்கும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்து,தமது இராணுவப் பிரிவுகளை பலப்படுத்த அவர் திட்டமிட்டார். இத்தகைய சுறுசுறுப்பான நடவ டிக்கைகளும் திட்டமிடலும் நடைபெற்றுக் கொண்டிருந்த 1983 இறுதியில் பிரபாகரனிடமிருந்து எனக்கு ஒரு செய்தி வந்தது. அதன் படி யாழ்ப்பாணத்தில் இருந்து நான்கு இளம் பெண்கள் எனக்குத் துணையாக விரை விலே வர இருந்தார்கள். இந்த நான்கு பேரும் போராட்டம் மீது அனுதாபம் கொண்டவர்கள். ஆனால் விடுதலைப் புலிகளிடமிருந்து ராணுவப்பயிற்சி பெறுவதற்காக என்று அவர்கள் சென்னைக்குச் வரவில்லை .தமிழ் மாண வர்களுக்கு கல்வி வசதி வழங்கப்படாமைக்கு மறுப்புத் தெரிவித்து உண்ணா மறியலில் ஈடுபட்டிருந்த இந்த இளம்பெண்களை மரணத்திலிருந்து விடு தலைப்புலித்தலைவர்கள் காப்பாற்றியிருந்தனர். இந்த நான்கு இளம் பெண் களுக்கும் இப்போது குடும்பமோ,நண்பர்களோ இல்லை என்ற நிலையில் இவர்களுடைய நலனில் பிரபாகரன் கரிசனை கொண்டி ருந்தார். இவர்கள் யாழ்ப்பாணத்தின் இருந்து வந்ததும் திருவான்மியூரில் உள்ள எமது பிரத்தியேக வீட்டில் அவர்களை இருத்துவது என்றும் தீர்மானித்தார். அங்கே பிரபாகரனுடைய நேரடிக் கண்காணிப்பு இருக்கும். அத்துடன் திரும ணம் புரிந்த தம்பதியராக பாலாவும் நானும் இருந்தோம். எம்மோடு சீவிப்பதே இந்த இளம் பெண்களுக்கும் வழங்கக்கூடிய சிறந்த சமூகப் பண்பாட்டுச் சூழலாக இருந்தது. இவர்கள் சென்னைக்கு வருவதும் விடுதலைப்புலிகளின் தலைவருடன் உடனடியாகத் தொடர்பு ஏற்படுத்துவதும் பெண்ணியம் சம்பந்தப் பட்டதா கவோ அன்றி போராட்டத்தில் பெண்களை ஈடுபடுத்துவதை நோக்கமாக கொண்ட தாகவோ இருக்கவில்லை. ஆனாலும் மதி, வினோஜா, ஜெயா, லலிதா என்ற இந்த நான்கு இளம் பெண்களின் வருகை, எதிர்பாராத நிலையிலே இயக்கத் துக்குள் ஒரு குட்டிப் புரட்சியைப் ஏற்படுத்தியது என்றே கூறலாம்.

போராட்டத்தின் இந்தப் படிநிலையிலே கூட , போராளிகளிடையே கடுமையான ஒழுக்கக் கட்டுப்பாடுகளை விடுதலைப்புலிகள் கடைப்பிடித்தார்கள்.

(பதிவு தொடரும்)




06.08.2014 -12.08.2014

**மேஷம்** — **அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

சுக்கிரன் மூன்று, நான்காம் வீடுகளில் இடம் பெற்று குடும்ப வளத்திற்கு தேவையான நன்மை வழங்குகிறார். பணிகளில் ஆர்வம் கொள்வீர்கள். சமூக நிகழ்வுகளை எளிதாக எடுத்துக் கொள்வீர்கள். புத்திரரின் உத்வேக செயல்களை ஒழுங்குபடுத்துவது நல்லது. எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். இல்லறத்துணை உங்களின் சிறந்த குணம் பாராட்டுவார். தொழிலில் உற்பத்தி விற்பனை சீராகும். பணியாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு கிடைக்கும். குடும்ப பெண்கள், கணவரின் அன்பு திருப்திகர பணவசதி பெறுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் பெற சில வழிகாட்டுதல் கிடைக்கும்.

**ரிஷபம்** — **கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

பல நாள் நினைத்த திட்டத்தை இலகுவாக நிறைவேற்றுவீர்கள். பேசும் வார்த்தை பழகுபவரிடம் உங்கள் மீதான நன்மதிப்பை அதிகரிக்கும். புத்திரர் தம் நண்பர்களிடம் உருவான கருத்து வேறுபாடு விலக ஆலோசனை சொல்வீர்கள். இல்லறத்துணை, உங்கள் சொல்லை வேதம் என, கருதுவார். தொழிலில் அபிவிருத்தி பணி செய்து, உற்பத்தி விற்பனையில் முன்னேற்றம் காண்பீர்கள். இல்லறத்துணை குடும்பநலனுக்காக அக்கறையுடன் செயல்படுவார்.மாணவர்கள் ஒருமுகத்தன்மையுடன் படித்து கூடுதல் தேர்ச்சி பெறுவர்.

**மிதுனம்** — **மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

பொறாமை குணத்துடன் பேசுபவர்களிடம் விலகுவது நல்லது.அத்தியாவசிய செலவுக்காக கொஞ்சம் பணக்கடன் பெற வேண்டியிருக்கும். வீடு வாகனத்தில் உரிய பாதுகாப்பை பின்பற்ற வேண்டும்.புத்திரரின் விளையாட்டுத்தனமான செயல்களை பொறுமையுடன் சரி செய்வீர்கள். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு வகைகளை உண்ண வேண்டாம். தொழில் வியாபாரத்தில் உருவாகிற முன்னேறத்திற்கு நன்றி சொல்கிற வகையில் தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். பெண்கள் ஓய்வு நேரத்தை உபயோகமாக பயன்படுத்துவர். மாணவர்கள், கண்களின் பாதுகாப்பில் கவனம் பின்பற்றவும்.

**கடகம்** — **புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

உறவினர்களிடம் பெற்ற நற்பெயரை பாதுகாப்பதில் கூடுதல் அக்கறை வேண்டும். பொது இடங்களில் எவருடனும் விவாதம் செய்ய வேண்டாம். உடன் பிறந்தவர் கூடுதல் அன்பு, பாசம் மேற்கொள்வர். வீடு வாகனத்தில் பராமரிப்பு பணி தேவைப்படும். புத்திரர், விரும்பிய பொருள் வாங்குவதில் பிடிவாத குணத்துடன் நடந்து கொள்வர்.சேமிப்பு பணம் செலவாகும். இல்லறத்துணை சொல்கிற ஆறுதல் வார்த்தை ஊக்கம் தரும்.தொழிலில் அளவான உற்பத்தி விற்பனை இருக்கும். பணியாளர் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும்.

**சிம்மம்** — **மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

இதமான பேச்சு, அணுகுமுறையால் புதியவர்களின் அன்பு, நட்பு பெறுவீர்கள். இளைய சகோதரர் உறுதுணையாக நடந்து கொள்வார். பூர்வ சொத்து பராமரிப்பில் நம்பகமானவரை பணியமர்த்துவது நல்லது. சத்து நிறைந்த உணவு சாப்பிட்டு உடல்நலத்தை மேம்படுத்துவீர்கள். இல்றைத்துணையின் சாதகயோக பலம் குடும்பத்தில் மங்கல நிகழ்வை உருவாக்கும். தொழில்,வளர்ச்சி பெற தேவையான உதவி கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிவர். குடும்ப பெண்கள், பண வசதிக்கேற்ப வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், சாதனை நிகழ்த்துகிற எண்ணத்துடன் கல்வி பயில்வர்.

**கன்னி** — **உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கொள்வீர்கள். புதியவர்களின் அறிமுகம், அன்பு, உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் சில மாற்றம் செய்வீர்கள். புத்திரரின் கவனக்குறைவை சரி செய்வது நன்மை பெற உதவும். எதிரி கெடுதல் செய்ய உரிய தருணம் எதிர்பார்த்து காத்திருப்பார்; கவனம் தேவை. இல்லறத்துணை குடும்பத்தின் சிரமத்தை தாமதமாக உணருவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உருவாகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், தாய் வீட்டு உதவி கிடைத்து மனம் மகிழ்வர். மாணவர்கள், ஆசிரியரின் வழி காட்டுதலை பின்பற்றி படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

**துலாம்** — **சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

மனதில் உத்வேகமும், செயலில் பரிமளிப்பும் உருவாகும். நண்பரால் உதவி உண்டு. பணப் பரிவர்த்தனையில் நிதானம், பாதுகாப்பு முறை பின்பற்றவும். தாயின் தேவையை நிறை வேற்று வதால், குடும்ப ஒற்றுமை வளரும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். இல்லறத் துணையின் உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை உதவும். தொழில், வியாபாரம் செழிக்க, நடத்துகிற முயற்சி வெற்றியாகும். பணியாளர், பொறுப் புணர்வுடன் செயல்பட்டு நற்பெயர். பெண்கள், குடும்ப உறுப்பினர்களின் எண்ணங்களால் நல்ல மாற்றம் கொண்டு வருவர். மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதை குறைப்பதால், படிப்பில் கவனம் வளரும்.

**விருச்சிகம்** — **விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

நல்ல வார்த்தையின் மகத்துவத்தை அனுபவத்தில் உணருவீர்கள். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பை பின்பற்ற வேண்டும். புத்திரரின் ஞானம் நிறைந்த சிந்தனை உரிய தருணங்களில் நல்ல வரவேற்பு தரும். எதிரி சொந்த சிரமங்களால் விலகுவர். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறை தாமதமின்றி சரி செய்ய வேண்டும். உத்தியோகஸ்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்துவதால், பணி இலக்கு எளிதாக நிறைவேறும். பெண்கள், பணவரவுக்கேற்ப செலவு மேற்கொள்வர். மாணவர்கள், பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்லக்கூடாது.

**தனுசு.** — **மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

நிதானித்து பேசுவதால், அவப்பெயர் வராமல் தவிர்க்கலாம். இளைய சகோதரர் உறுதுணையாக நடந்து கொள்வார். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும். புத்திரரின் தேவையை, தாராள பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள். எதிரியால் வரும் சிரமத்தை, மாற்று உபாயத்தால் சரி செய்வது நல்லது. இல்லறத்துணையின் மனதில், உங்கள் மீதான நம்பிக்கையில் குறை வராமல் நடந்து கொள்ளவும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, கிடைக்கிற வாய்ப்பை தவறாமல் பயன்படுத்த வேண்டும். பெண்கள், உறவினர் குடும்ப விவகாரங்களில் கருத்து சொல்ல வேண்டாம்.

**மகரம்** — **உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

புதியவர்களிடம் பழகுவதில், சமயோசித குணம் பின்பற்ற வேண்டும். வாகன ஸ்தானத்தில் சனி, செவ்வாய் பார்வை பதிவதால், மிதவேகம் நல்லது. புத்திரர் செயல் நிறைவேற தாமதம் ஆவதால், மனவருத்தம் அடைவர். சத்தான உணவுப்பழக்கம், சீரான ஓய்வு, உடல்நலம் காக்கும். இல்லறத்துணையின் செயல்குறையை பெரிதாக எண்ண வேண்டாம். தொழிலில் அளவான மூலதனம், அதிக உழைப்பு என்கிற நடைமுறை நன்மை தரும். பணியாளர், கூடுதல் பொறுப்புணர்வுடன் பணிபுரிவது நல்லது. பெண்கள், நகை பாதுகாப்பில் தகுந்த கவனம் வேண்டும். மாணவர்கள், சாகச விளையாட்டுகளில் ஈடுபடக்கூடாது.

**கும்பம்** — **அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

நற்குணம் உள்ளவர்களின் அறிமுகம், உதவி கிடைக்கும். பேச்சை குறைத்து, செயலில் கவனம் கொள்வது சிறப்பு தரும். வாகன பயன்பாடு, திருப்திகர அளவில் இருக்கும். புத்திரர் திறமைமிகு செயல்புரிந்து புகழ் பெறுவார். எதிரி வியக்கும் வகையில், உங்கள் வாழ்வின் தரம் மேம்படும். இல்லறத்துணை முக்கிய தருணங்களில் நல்ல ஆலோசனை வழங்குவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வழி உருவாகும். பணியாளர், தொழில்நுட்ப அறிவில் முன்னேற்றம் காண்பர். பெண்கள், குடும்பத்தின் நலன் சிறந்து, இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள், விரும்பிய பொருளை பெற்றோர் வாங்கித் தருவர்.

**மீனம்** — **பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

குருவின் பார்வை ராசியில் உள்ளதால், சான்றோரின் ஆசி, மனதில் ஊக்கம் தரும். பணவரவை உணர்ந்து, செலவு மேற்கொள்ளவும். உறவினர்களின் வருகை, வீட்டில் மகிழ்ச்சியை உருவாக்கும். புத்திரர் அறிவு சார்ந்த [illegible] படுவர். எதிரியிடம் விலகுவதால், பொன்னான நேரத்தை நல்லமுறையில் பயன்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, சில மாற்றம் செய்வீர்கள். பணியாளர் இலகுவாக பணி மேற்கொள்வர். பெண்கள், உறவினர் கடந்தகால அவதூறு பேச்சை மன்னித்து, அன்பு பாராட்டுவீர்கள். மாணவர்கள், பெற்றோரின் சொல் கேட்பது, சில நன்மை பெற உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அவன் வருவானா?

ஆரம்பத்தில் நட்பாகி வளர்ந்து சென்ற உறவு சிறிது காலத்தில் காதலாக மலர்ந்தது. சுரேஷ் அவள் மீது காட்டிய பாசத்தாலும், அவன் மீது தனக்கிருந்த அன்பாலும் அவனது காதலை ஏற்காது விட்டால் சுரேஷ் தன்னை விட்டு விலகிச் சென்று விடுவானோ என்ற பயத்தாலும் அவனது காதலை ஏற்றுக் கொண்டாள்.

சுபா சில நாள்களாவே மிகவும் குழம்பிய மனதுடன் காணப்பட்டாள். எதற்கெடுத்தாலும் சிடுசிடுப்பதும், கோபம் கொள்வதுமாகவே இருந்தாள். அவளது மனம் குழப்பமுற்று கலங்கிய குட்டையாகக் காணப்பட்டது. ஆனாலும் சுபாவின் இயல்பு அதுவல்ல.

எப்பொழுதும் சிரித்த முகத்துடன் வலம் வருவாள். யாருடனும் இலகுவில் சென்று கதைக்கமாட்டாள். ஆனால் பழகியவர்களுடன் நல்ல நட்புறவுடன் பழகுவாள். தேவையற்ற பேச்சுக்களில் நாட்டம் காட்டுவதில்லை. எப்போதும் மற்ற மாணவர்களுக்கு அவள் எடுத்துக் காட்டாக விளங்குவாள்.

சுபா வீட்டில் கடைசிப் பெண் பிள்ளை. எனவே மிகவும் செல்லமாக வளர்ந்தவள். அவள் எது கேட்டாலும் அது கட்டாயம் கிடைத்து விடும். சூழலுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்வாள். தனக்கு இல்லாத போதிலும் பிறருக்கு கொடுத்து இன்பம் காண்பாள். யாருடனும் மனம் நோகக் கதைக்க மாட்டாள். யாரையும் அவமதிப்பதில்லை. மிகுந்த பொறுமை காப்பவள். எந்த வேலையாக இருந்தாலும் பொறுமையுடன் செய்து முடித்து விடுவாள். எல்லோருடனும் அன்பாக இருப்பாள். இவ்வாறு இவளது வாழ்வு நகர்ந்து செல்லும் போது தான் அவளே எதிர் பாராமல் அந்தச்சம்பவம் நடந்தேறியது. இதற்குக் காரணமாக இருந்தவன் அவளது ஆயிருர்க் காதலன் சுரேஷ் தான். இருவரும் வெவ்வேறு இடங்களில் வசிக்கின்றனர். தொலைபேசி மூலமாக தமது காதலைத் தொடர்ந்து வந்தனர். சில நாள்களாக சுரேஷிடம் இருந்து எவ்வித அழைப்புகளும் வருவதில்லை. சுபாவின் அழைப்புக்களும் பதில் கிடைப்பதில்லை. எந்த விதமான எஸ்.எம்.எஸ். கூட வருவதில்லை. இதனால் மனம் சோர்ந்துபோன சுபா தன்னை மறந்த நிலையில் சுரேஷை சந்தேகப்பட்டு விட்டாள். இதனால் சந்தேகம் வாழ்க்கைக் குச் சரி வராது. தன்னை மறந்து விட்டு வேறு யாரையும் மணம் முடிக்கு மாறும் சுரேஷ் கூறியிருந்தான். இந்த வார்த்தைகளே சுபாவின் மன அழுத்தத்துக்கு காரண மாகும். அதன் பின் சுரேஷ் சுபாவுடன் கதைத் ததே இல்லை. அவன் இல்லாத வாழ்வை எண்ணிப் பார்க்கக் கூட சுபாவால் முடிய வில்லை. இதனாலேயே மனம் சோர்ந்து. எதையோ பறிகொடுத்தவள் போன்று காணப்பட்டாள்.

சுபாவால் சுரேஷையோ. அவனுடன் கதைத்த நாள்களையோ மறக்க முடியவில்லை. அவற்றை மீட்டிப் பார்ப்பதிலேயே இன்பம் கண்டாள்.

* * *

சுபாவும், சுரேஷும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர். சுரேஷ் மூன்றாம் வருடத்தில் படித்துக் கொண்டிருந்த போது சுபா இரண்டாம் வருடத்தில் கற்றுக் கொண்டிருந் தாள். இருவரும் வெவ்வேறு பீடங்களில் கற்றுக் கொண்டிருந்தனர்.

பல்கலைக்கழக வளாகத்தில் சுபா சென்று வரும் போதெல்லாம் சுரேஷ் மர நிழலிலுள்ள கல் இருக்கைகளில் தனது நண்பர் களுடன் அமர்ந்து சுபாவைக் கிண்டலடித்த வண்ணம் இருப்பான். கம்பஸிலசகஜம் என்று எண்ணிய சுபா அதனைக் கண்டு கொள்வதில்லை. ஆனால் சுரேஷ் அவளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டான். யாருடனும் முகமுறித்துப் பேசிப்பழக்கமற்ற சுபாவும் அவ்வழைப்பினை ஏற்றுக் கதைத்தாள். ஆரம்பத்தில் நட்பாகி வளர்ந்து சென்ற உறவு சிறிது காலத்தில் காதலாக மலர்ந்தது. சுரேஷ் அவள் மீது காட்டிய பாசத்தாலும், அவன் மீது தனக்கிருந்த அன்பாலும் அவனது காதலை ஏற்காது விட்டால் சுரேஷ் தன்னை விட்டுவிலகிச் சென்று விடுவானோ என்ற பயத்தாலும் அவனது காதலை ஏற்றுக் கொண்டாள். சுபா சுரேஷை காதலிப்பது தெரிந்ததும் பலர் பலவாறாக கூறினர். "கம்பஸ் பெடியளை நம்பக் கூடாது. அவங்கள் படிச்சு முடிய விட்டிட்டுப் போடுவாங் கள்" என்று பலரும் கூறினர். "சுரேஷ் வேற மாவட்டம் என்ன செய்தாலும் தெரியாது. எதுக் கும் நல்லா யோசிச்சுப் பார்" என அவளின் நண்பர்களும் கூறினர். ஆனால் சுபா சுரேஷை முழுவதுமாக நம்பினாள். அவன் தன்னைக் கைவிட மாட்டாள் என நம்பினாள்.

இன்று சுரேஷ் தனது பட்டப்படிப்பை முடித்து விட்டு தன் ஊரில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் தொழில் புரிந்து கொண்டிருக்கிறான். சுபா தனது படிப்பைத் தொடர்ந்த வண்ணமிருக்கிறாள். காதல் என்ற போர்வையில் பல தவறுகள் நடக்கின்ற இந்தக் காலத்தில் இவர்கள் இருவரும் மிகுந்த கண்ணியத்துடன் இருந்தனர். நேரில் காணும் போதெல்லாம் ஒரு பார்வை யை வீசி விட்டு தம் போக்கில் சென்று விடுவார்கள். இப்போதெல்லாம் 'சுரேஷ்' என்ற வார்த்தையைத் தவிர சுபாவுக்கு எதுவும் தெரியாதுஎன்றேகூற வேண்டும். எப்போதும் அவன் நினைவாகவே இருப்பாள். சுரேஸுடனான தனது வாழ்வை மிகவும் அழகாகக் கற்பனை செய்து வைத்திருக் கின்றாள். அவளது வாழ்க்கையே சுரேஷ் தான். சுரேஸுற் காக தன்னில் எத்தனை யோமாற்றங்களைச் செய்துள்ளாள். இதெல்லாம் சுரேஷ் அறிந்ததே.

* * *

இப்படி வாழ்ந்தவளுக்கு தான் "என்னை மறந்து விடு. நீ கல்யாணம் முடிச்சா இரண்டு பேரின் வாழ்வும் பாழாகி விடும். எனக்கும் உனக்கும் சரிவராது. நீ என்னை சந்தேகிக்கிறாய்" என்ற சுரேஷியின் வார்த்தைகள் அவளை நிலைகுலையச் செய்தன. சுபா தன்னை சந்தேகப்படுவதாக சுரேஷ் கூறியபோதிலும் அவள் அதனை அவனுக்கு எடுத்துக் கூறிய போதிலும் அவன் அவளைப் புரிந்து கொள்ள வில்லை. அவன் அவளை வெறுத்து விட்டதாகக் கூறுவது முழுமையான பொய் என் பது சுபாவிற்கு உறுதியாகத் தெரியும். ஏதோ ஓர் அசௌகரியமான நிலையில் அவன் இருந்த போது தனது அவசரத்தால் அதனை பிரச்சினையாக்கி விட்டேன் என்பதனை சுபா உணர்ந்து கொண் டாள். தன்னில் தான் முழுத் தவறும் என்று உணர்ந்து கொண்டாள். தனது தவறை உணர்ந்து கொண்டதிலிருந்து அவனிடம் பல முறை பலவிதமாக மன்னிப்புக் கேட்டு விட்டாள். தன்னை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவனைக் கெஞ்சிக் கேட்டாள். அவனுக்கு அழைப்புக்களை ஏற்படுத்துவாள். எஸ். எம். எஸ்களை அனுப்புவாள். ஆனால் எதனையும் சுரேஷ் லட்சியம் செய்வதில்லை. சுரேஷுக்கும், தனக்குமான பிரச்சினைகளை அவள் யாரிடமும் கூறவில்லை. அவளது நெருங்கிய நண்பி ஒருத்திக்கு மட்டுமே கூறியிருந்தாள். இருவரும் சேர்ந்து சுரேஷுடன்கதைப்பதற்கு பல முயற்சிகளை எடுத்தாலும் அவன் மௌனமாகவே இருக்கின்றான். இதற்காக அவளால் அவனை வெறுக்க முடிய வில்லை.

சுரேஷ் சுபாவுடன் கதைக்காமல் விட்டு ஒரு மாதத்திற்கு மேலாகி விட்டது. ஆனால் அவளால் அவனை மறக்கமுடியவில்லை. அவன் சொல்வது போல் வேறு ஆணை திருமணம் செய்து குடும் பம் நடத்த அவள் தயாரில்லை. அவன் இல்லாத வாழ்வு தேவையில்லை என்று தற்கொலை செய்து கொள்ள எண்ணினாள். ஆனால் எந்தப் பிரச்சினைக்கும் தற்கொலை ஒரு முடிவல்ல. அவ்வாறான முடிவுகள் தனக்குப் பின் தனது குடும்பத்திற் கும், தனக்கும் சமூகத்தில் இழி வான பெயரையே பெற்றுத் தரும் என்பதனை அவள் உணர்ந்தி ருந்தாள். படித்ததன்னைப் போன்றவர்களே இவ்வாறான முடிவுகளை எடுத்து சமூகத்தை தீய வழிக்கு இட்டுச் செல்வது சிறந்ததல்ல என்பதனை உணர்ந்து கொண்டாள். தன்னைப் படிக்க வைத்து ஆளாக்கி விட்ட தன் குடும்பத் துக்கு அவப்பெயர் தேடிக் கொடுக்க அவளால் முடியவில்லை. எனவே அந்த ஆரோக்கியமான வழிகளைக் கண்டு பிடிப்பதில் ஈடுபட்டாள்.

சுரேஷ் தனக்குத் தான் சொந்தமானவன். அவன் தன்னை ஏமாற்ற மாட்டான். அவன் கண்டிப் பாகத் தன்னை நாடி வருவாள். அவன் தன்னை திருமணம் செய்து கொள்வான்என்று நம்புகிறாள். தனக் குத் திருமணம் என்று ஒன்று நடந்தால் அது சுரேஷுடன் தான் என்று உறுதியாக உள்ளாள். சுரேஷ் இல்லாது விட்டால் தனது வாழ்வே பூச்சியமானது. அர்த்தமற்றது என்பது அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. சுபா இன்று ஒருபைத்தியக்காரி போன்றே நடமாடுகிறாள். கண்களில் உயிர்ப்பில்லை. உதட்டில் சிரிப்பில்லை. முகத்தில் மகிழ்ச்சி யில்லை. உணவு, உறக்கம், கல்வி, எல்லாவற்றையும் தொலைத்து ஒரு நடைப் பிணமாக ஊசலாடுகின்றாள். சுரேஷ் தனக்குக் கிடைக்க வேண்டுமென்று தினமும் கடவுளிடம் கண்ணீரோடு வேண்டுகின்றாள். அவளது பிரார்த்தனை கண்டிப்பாக நிறைவேறும். பொருளாதாரத்துக்கும், உடல் சுகத்துக்காகவும் கணவனைக் கூட உதறித் தள்ளி விட்டு செல்கின்ற ஒரு சில பெண்கள் இருக்கின்ற இந்த உலகத்தில் சுரேஷ் தன்னை தேடி வருவான். தானும் சுரேஷுடன் நிம்மதியாக வாழ்வு வாழ்வேன் என்ற நம்மபிக்கையுடன் அவனின் அன்புக்காக ஏங்கி அவனின் காதலுக்காக காத்திருக்கிறாள். அவன் வருவானா? என்று...



சுபத்திரை,
மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதைகுழிக்குள் தோட்டுச்சுரை

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
(குடும்ப மருத்துவர்)

இவளின்ரை தோடெல்லோ காணாமல் போச்சு.."

இவ்வாறு சொன்னவர் நான் அவளது காதைப் பார்ப்பதை அவதானித்து விட்டு, "மனிசர்தான் புதைகுழிகளுக்குள் காணாமல் போகினம் எண்டு பார்த்தால் இவளின்ரை தோட்டுச் சுரையும் புதைஞ்சு போட்டுது" என்றார்.

அவர் பேச ஆரம்பித்தபோது "இரண்டு பக்கமும் காதிலை தோடுகள் கிடக்குத்தானே" என்று நினைத்த நான் இப்பொழுது அவளது காதுகளின் பின்புறத்தை ஆராய வேண்டி நேர்ந்தது. வலது புறக் காதில் தோடும் சுரையும் வழமை போலத் தோற்றமளித்தன. ஆனால் இடது புறத்தில் தோடு ஜோராக மினுங்கிக் கொண்டிருந்த போதும் பின் புறத்தில் தோட்டுச் சுரை இருக்க வேண்டிய இடத்தில் இருக்கவில்லை. தோல் மட்டும் வழுவழுப்பாக ஆனால் சற்று மிதந்து கிடந்தது. தொட்டுப் பார்த்தபோது சருமத்தின் உள்ளே தோட்டுச் சுரை புதைந்து கிடப்பதை உணரக் கூடியதாக இருந்தது.

## அணிகலன்கள்

மனிதர்களுக்கு தாங்கள் அழகாக இருக்க வேண்டும், மற்றவர்களைக் கவர்ந்து இழுக்க வேண்டும் என்பதில் ஆதிகாலம் முதற்கொண்டு ஆர்வம் இருந்திருக்கிறது.அதற்காக ஆபரணங்களை அணியமுற்பட்டார்கள்.

காதில் தோடு, மூக்கில் மூக்குத்தி, கழுத்தில் மாலை, காலில் சலங்கை, கைகளில் வளையல்கள் விரல்களில் மோதிரம் என ஆபரண வகைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். அழகைக் கொடுத்து, மற்றவர்களைக் கவர்ந்து, அணிந்தவர்களை உவக்க வைக்கும் இவை சில தருணங்களில் நோய்களை விதைத்து வேதனையில் உழல வைப்பதும் உண்டு.

அணிகலன்களால் ஏற்படும் பிரச்சினைகள் பலவாகும்.

காது மற்றும் மூக்கு குத்திய இடங்களில் கிருமி தொற்றி வீங்கிச் சீழ் பிடிப்பதே அதிகமாகக் காணப்படும் பிரச்சினையாகும். அத்தோடு தோடு, மூக்குத்தி, காப்பு, மெட்டி, பொட்டு போன்றவற்றை அணி யும் இடங்களில் சருமத்தில் ஒவ்வாமை ஏற்பட்டு எக்ஸிமா ஏற்படுவது அடுத்த முக்கிய சிக்கலாகும்.

இவற்றைத் தவிர, அந்த இடங்களில் தடித்த தழும்பு (மறு) (Keloid) தோன்றுவது, கட்டிகள் வளர்வது (cyst formation) காது மடல் பிரிவது போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதையும் காண முடிகிறது. குருதிக் கண்டல் (hematoma) ஏற்படவும் வாய்ப்புண்டு.

## புதை குழியில் சுரை

ஆனால் இந்தப் பெண்ணின் பிரச்சினை வேறாகும். குழந்தைப் பருவத்தில் தோடு குத்திய போதும் இதுவரை எந்தப் பிரச்சினையும் ஏற்பட்டதில்லை. அவ்விடத்தில் அழற்சி ஏற்படவோ, கிருமி தொற்றவோ, சீழ்பிடிக்கவோ இல்லை. கடுமையான வேதனையும் இல்லை.

இருந்தபோதும் பாம்பு தேரையை விழுங்குவது போல காது மடலானது தோட்டுச் சுரையை முழுங்கிவிட்டது.

இதனைப் புதையுண்ட தோட்டுச் சுரை (Embedded Earring) எனலாம்.

தோடு போடுவதால் ஏற்படும் பிரச்சினைகளில் பெரும்பாலானவை காது குத்தும் செயற்பாட்டின் தொடர்ச்சியாகவே ஏற்படுகின்றன. அதாவது தவறான முறைகளில் காது குத்துவதின் பின்விளைவுகளாகும். கிருமித் தொற்று, தழும்பு ஏற்படல், குருதிக் கண்டல், கட்டிகள் வளர்தல், காது மடல் பிரிதல் போன்றவை பற்றி ஏற்கனவே சொன்னோம்.

இவற்றைத் தவிர வைரஸ் கிருமித் தொற்றால் ஏற்படும் ஈரல் அழற்சி (Hepattitis) குருத்தெலும்பு அழற்சி (osteomyelitis) போன்றவை சற்று பாரதூரமானவையாகும்.

## காரணங்கள் எவை?

இவை வருவகற்கு இரண்டு முக்கிய காரணங்களைச் சொல்லலாம்.

1.காது குத்தும் செயற்பாட்டில் உள்ள தவறுகளும் திறமையின்மைகளும்.

2.தவறான பொருத்தமற்ற காதணிகள்

காது குத்துவதற்கு மருத்துவர்தான் தேவை என்றில்லை. நகைக் கடைக்காரர் முதல், வீட்டிலுள்ள பாட்டி வரை யாவரும் குத்துகிறார்கள். சுத்தம் செய்யாத காதுச் சோணையில் அழுக்குப் படிந்த கைகளாலும் குத்தப்படுவது உண்டு.

ஊசிகள், சட்டைப் பின், போன்ற கூரான எதையும் பயன்படுத்துவர்.

முனை கூராக்கிய தோட்டின் தண்டை கொண்டு நேரடியாகத் துளையிடுவதும் உண்டு.

விசையூட்டிய சுருள் கம்பி கொண்டு (spring-loaded guns) வெளிநாடுகளில் குத்துவது உண்டு.

நகைக் கடைக்காரர்கள் காது குத்துவதற்கென விசேடமான கூர்க்கம்பி வைத்திருப்பார்கள்.

கருவி எதுவானாலும் சுத்தமாக இருக்க வேண்டும். காது மடலையும் குத்துவதற்கு முன்னர் கிருமி நீக்குவதற்காக சுத்தப்படுத்த வேண்டும்.

சரியான முறையில் சுகாதாரம் பேணப்படாவிட்டால் குத்திய இடத்தில் அழற்சி ஏற்படும். அதைக் கவனிக்காது விட்டால் அழற்சி குணமாகும்போது வளரும் புதிய சருமமானது தோட்டுச் சுரையை மூடி வளர்ந்துவிடலாம். இதற்கு ஒரு சில நாள்கள் முதல் பல வாரங்கள் எடுக்கலாம்.

பொருத்தற்ற காதணிகளை அணிவதும் இந்தப் பிரச்சினைக்கு மற்றொரு காரணமாகும்.

காதணியான தோட்டுச் சுரையின் பின் முனை மிகச் சிறியதாக இருந்தால் அது காதுச் சோணைக்குள் இலகு வாகப் புதைந்துவிடக் காரணமாகலாம். முன்னைய காலங்களில் சுரைகள் பெரிய வட்டமாக இருக்கும். இப்பொழுது அவை குண்டுமணி போலச் சுருங்கிவிட்டதை அறிவீர்கள்.

தோட்டின் தண்டானது குறுகியதாக இருந்தால் சுரையானது காதுச் சோணையை அழுத்திய படி இருக்கும். இதனாலும் அங்கு அழற்சி ஏற்பட்டு சுரையானது சருமத்தினுள் அமிழ்ந்து போய்விடலாம்.

தங்கத்திலான தோடுகள் நல்லவை. மாறாக நிக்கல் போன்ற உலோகங்களால் ஆனவையும் கலப்படமான தோடுகளும் சிலருக்கு சருமத்தில் அழற்சியை ஏற்படுத்தி சுரை புதைந்து போவதற்கு காரணமாகலாம்.

சுரையானது தோட்டை விடப் பாரமானதாக இருப்பதால் காதுச் சோணையில் அழுத்தம் சமச் சீராக இருப்பதில்லை. முற்புறம் பாரம் அதிகமாக இருப்பதால் தோடு முன்புறம் சரிய முனைய சுரையானது சோணையுடன் அழுத்தப்படும். கால ஓட்டத்தில் சுரை புதைவதற்கான சாத்தியத்தை இது அதிகரிக்கும்.

ஆனால் இவளுக்கு அண்மையில் காது குத்தப்படவில்லை. சிறுவயதில்தான் குத்தப்பட்டது. அதில் கிருமித் தொற்று ஏற்படவில்லை. நல்ல தங்கத்தாலானதோடு. எனவே கலப்படத் தங்கத் தோடுகளால் அல்லது சாதாரண விலை குறைந்த தோடுகளால் ஏற்படுவது போல அழற்சி ஏற்பட்டிருக்கவில்லை.

எனவே இவளது தோடு சோணைக்குள் அமிழ்ந்து போதற்குக் காரணம் என்ன?

காதுச் சோணையை மரக்கச் செய்து அவ்விடத்தில் சத்திரசிகிச்சை கத்தியினால் வெட்டி தோட்டையும் சுரையையும் அகற்ற நேர்ந்தது. தோட்டுடன் சுரையும் சேர்ந்தே வந்தது.

சிறிய தண்டு, குறுகிய சுரை முனை ஆகியவற்றை அவதானிக்க முடிந்தது. எனவே சுரையானது சருமத்தில் அழுத்துப்பட்டு படிப்படியாக சோணைக்குள் மறைந்திருக்கலாம் என அனுமானித்தோம்.

படிப்படியாக மறைந்ததால் அது புதையுண்டு போவதை நோயாளியால் உணர முடியவில்லை. முற்றாக மறைந்து நீண்ட நாள்களின் பின்னரே அவதானித்துள்ளாள்.

## அவதானிக்க வேண்டியவை

காது குத்துவதில் நல்ல அனுபவம் உள்ளவரைக் கொண்டு சுகாதார முறைப்படி குத்த வேண்டும்.

தோட்டின் தண்டு போதிய நீளமுள்ளதாகவும், சுரையின் முனை சற்று அகலமுள்ளதாகவும் இருந்தால் அது சருமத்தில் மறைவதற்கான சாத்தியம் குறைவு.

காது குத்தியவுடன் தோடு அணிவதைத் தவிர்ப்பது நல்லது. குத்திய துவாரத்துக்குள் நைலோன் நூலைப் புகுத்தி முனைகளை வளையம் போலக் கட்டிக் காயம் ஆறும் வரை வைத்திருக்க வேண்டும். சில நாள்களின் பின்னர் தோட்டைப் போட்டால் தோட்டின் உலோகத்துக்கு எதிரான ஒவ்வாமை ஏற்படாது. அழற்சி தோன்றாது. தோடு புதைவதற்கான சாத்தியம் அருகிவிடும்.

காது குத்திய பின்னர் தோட்டை அக்கறையின்றி விட்டு விடக் கூடாது. எமது முன்னோர்கள் காதில் இருக்கும் தோட்டை துவாரத்தில் சுழலுமாறு சுற்றி சுற்றிச் அசைத்து விடுவார்கள். இதனால் துவாரம் சுருங்காமல் இருப்பதுடன் சுரை மறையாமல் காப்பாற்ற முடிந்தது. முக்கியமாக குழந்தைகளுக்கு காது குத்திய பின்னர் அவ்வாறு செய்யும் வழக்கம் இருந்தது.

சுரையுள்ள தோடுகளுக்குப் பதிலாக வளையம் போன்ற தோடுகளை உபயோகித்தால் இந்தப்பிரச்சினை ஏற்பட வாய்ப்பில்லை.

குளிக்கும்போது கழற்றி வைப்பது, இரவில் கழற்றி வைப்பது, இடையிடையே தோடுகளை மாற்றி அணிவது போன்ற செயல்கள் சுரை அமிழ்ந்து போவதற்கான சாத்தியத்தை குறைக்கும்.

தோடு மறைவது போலவே மூக்குத்தியின் சுரை சருமத்திற்குள் அமிழ்ந்து போவதையும் இடையிடையே காண்கிறோம். அவற்றிக்கான காரணங்களும், தடுப்பு முறைகளும் சிகிச்சைகளும் காதுத் தோட்டுக்கானதைப் போன்றதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படலை ஜே.ஜே

# கந்தசாமியும் கலக்ஸியும்

## அத்தியாயம் - 11

### அறிவியல் தொடர் கதை

(இந்தத் தொடரில் வரும் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே, அப்படி யாருக்கும் பொருந்தினால் அது தற்செயலானதே)

"தூ .. இதுக்கு செல்வராணி ஊத்திற தேத்தண்ணி நல்லா இருக்குமே தேயிலையை காய வைக்கோணும் பூமியில,இலங்கை என்று ஒரு நாடு .. அதில மலை நாடு.."

"இரண்டு நாடா?"

"ஐயோ .. இலங்கை எண்டது ஒரு நாடு எண்டுதான் கேட்டா சொல்லுவாங்கள் .. அதில் இருக்கிற மலைப்பகுதியை மலை நாடு எண்டுவாங்கள் .. ஆனா அதுவும் இதுவும் வேற வேற நாடு"

"அதத்தானே நானும் கேட்டேன்"

"மொக்கு கொம்பியூட்டரே .. தமிழ்நாடு என்றால் அது என்ன ஒரு நாடா?"

"இல்லையா?"

கந்தசாமிக்கு இப்போது தேநீர் என்பதை அந்த கொம்பியூட்டருக்கு எப்படி புரியவைப்பது என்று புரியவில்லை.

"உன்னுடைய டேட்டாபேசில், லிப்டன் தேயிலை என்று ஒன்றை தேடி கண்டு பிடி, அந்த தேயிலையை சுடுதண்ணியில வடிச்சு ஒரு கரண்டி சீனி போட்டு.."

சொல்ல சொல்ல, கொம்பியூட்டரில் ப்ராசசர் டர் டர் என்று சத்தம்போட தொடங்கியது.

"இதை தேடிக்கண்டுபிடிக்க சரியா ஐந்து நிமிடம், பத்து செக்கன்கள், எழுநூறு மில்லி செக்கன்கள், இருபது மைக்ரோ எனக்கு பிடிக்கும்" "அத சொல்லுற ரைம்ல தேத்தண்ணியை போய் ஊத்து"

"தாமதத்துக்கு வருந்துகிறோம் .. தேநீர் வரும்வரை சிறிது சோமபானம் அருந்த போகிறீர்களா? ஐந்து வெள்ளிக்காசு அதிகம் தந்தால் தங்கபஸ்பம் கலந்து தரு .."

"டேய் நீ என்ன கோல் சென்டரில வேலை பார்த்தியா? .. தேத்தண்ணிய ஊத்து எண்டா சோமபானம் அது இது எண்டு .."

"நன்றி திரு கந்தசாமி .. தேநீர் இதோ தயாராகிறது .. உங்கள் பொறுமைக்கு.."

"ஒண்டும் புடுங்க வேண்டாம் .. நான் உன்னட்ட வேற ஒரு கேள்வி கேக்கோணும்"

"எது வேண்டுமென்றாலும் கேளுங்கள் இருப்பதிலேயே அதிக வலுவுள்ள.."

"அடங்குடா .. ஒரு தேத்தண்ணி ஊத்த தெரியாம சீன் போடாத அது வந்து நான் .. நாங்க எப்பிடி பிரபஞ்சத்தில இருந்து இங்க வந்தோம் இது தான் சொர்க்கமா? இல்ல நரகமா? சுமந்திரன் என்னமோ டார்க் மேட்டர், கரும்பொருள் அது இது எண்டானே .. சொர்க்கம் நரகம் டார்க் மேட்டர் .. எல்லாம் ஒண்டா?"

"எஸ் .. இது மிக இலகுவான கேள்வி .. இங்கே இருப்பது எல்லாமே டார்க் மேட்டர்தான். சொல்லப்போனால் எல்லாமே மேட்டர்தான். இங்கிருந்து பிரபஞ்சத்தை பார்க்கலாம். ஆனால் இதெல்லாம் ஒரு ட்ரான்ஸ்பரன்டான விஷயம். அதாவது எமக்கூடாக ஒளியோ அல்லது எந்த மின்காந்த இயக்கமோ ஊடுருவினாலும் அதன் போக்கிலோ, வடிவத்திலோ மாற்றம் ஏதும் வராது. இங்கே பார்வைக்கு பயன்படும் ஒளியின் மீடிறன் பிரபஞ்ச உணர்வு சக்திக்கு அப்பாற்பட்டது. ஈர்ப்பு விசையும் அப்படியே .. டார்க் மேட்டர் பிரபஞ்சத்தோடு ஒப்பிடும்போது அலாதியான பெரியவிஷயம் என்பதால் அதன் ஈர்ப்பு எல்லைக்குட்பட்டே ஏனைய எல்லாமே இருக்கும். இவற்றால் தான் பிரபஞ்ச உயிரிகளால் கரும்பொருளை உணரமுடியாது?"

"என்ன மண்ணோ .. இங்க தான் செத்தாப்பிறகு வருவாங்களா?"

"பிரபஞ்ச உயிரிகளுக்கு இதை புரியவைப்பது கடினமானது திரு கந்தசாமி. ஆத்மா என்ற விஷயம் வெறும் மின் சமிக்ஞைகள்தான். அவற்றின் வெவ்வேறு சேர்மானங்கள் ஒரு கூட்டிலே சேரும்போது உடல் என்ற ஒன்று சிந்திக்கத்தொடங்குகிறது. அது தேய்ந்து அழிந்து, அதன் சமனிலை குலைந்து அந்த உடலை விட்டு பிரிவதை பிரபஞ்சத்தில் இறப்பு என்கிறார்கள்"

"அட அப்ப செத்தாபிறகு அந்த சிக்னல் எல்லாம் எங்கே போகும்?"

"போகவேண்டும் என்றில்லை. சிக்னல்கள் எல்லா இடமுமே இருக்கிறது. அவை சரியான சூழ்நிலையில் அதே சேர்மானத்தில் மீண்டும் ஒருங்கிணைவது அசாத்தியமானது. ஆனால் வேறு பல சிக்னல்கள் சேர்ந்து ஒரு புதிய சேரமானத்தை உருவாக்கி அதற்கு என்று ஒரு உடல் கிடைத்தால், புது உயிரினம் கிடைக்கலாம். ஆனால் ஒரே உயிரினம் மீண்டும் உருவாக சான்ஸ் இல்லை. ஒரேயொரு கந்தசாமிதான். ஒரேயொரு சுமந்திரன்தான். இறந்தாப்பிறகு அவர்கள் மறுபடியும் பிறக்கவோ வேறு எங்கேயும் போகவோ சந்தர்ப்பம் இல்லை. எண்ணூறு பில்லியனுக்கு ஒன்று என்ற வகையிலேயே அது சாத்தியம். இங்கே எல்லாமே தற்செயல்தான்!"

"அப்ப இந்தக் கரும்பொருள் எண்டுறது?"

"ஓ .. பிரபஞ்சம் போலவே .. இதுவும் அதற்கென்று சில குணாதிசயங்களைக் கொண்ட ஒரு விஷயம்!"

"ஓ .. அப்ப இதுவும் பூமி போல தானா?"

"பூமியை விட்டு வெளிய வா கந்தசாமி கரும்பொருள் பரந்த விஷயம் .. இப்பதானே வந்திருக்கிறாய் .. கொஞ்சம் கொஞ்சமாக புரியும் "

"தேத்தண்ணியோட ரெண்டு பனடோல் கிடைக்குமா?"

"தேநீர் தயார் .. பனடோலும் .. தான்"

"பேசும்போதே ஊற்றிவிட்டாயா?"

"ஹ ஹா ஹா .. பரலல் ப்ரோகிராமிங் .. ஸ்பெஷல் எம்பிஐ அல்கோரிதம்"

கொம்பியூட்டர் கண்ணடித்தது போல் தோன்றியது. பரலல் ப்ரோக்ராமிங். "அடச்சீ .. இததான் செல்வராணி காலம் முழுக்க செய்து கழுத்தறுத்தவள், எதை செய்யும்போதும் வாய் ஓயாதே" என்று சொல்லிக்கொண்டே கொம்பியூட்டர் நீட்டிய தட்டில் தேநீர் கோப்பையை எடுத்தபோது அதன் கீழே ஏதோ ஒரு துண்டுக்காகிதம் போல் ஒன்று ஒட்டிக்கிடக்க, கந்தசாமி துணுக்குற்றார். அதை எடுத்து வாசித்த கந்தசாமி அதிர்ச்சியில் உறைந்துபோய் தேநீர் கோப்பையை தடாலென்று கீழே போட, அது விழுந்து சளீர் என்று உடைந்தது.

கந்தசாமி மீண்டும் மூச்சை பிடித்துக்கொண்டு அந்தத் துண்டை வாசித்துப்பார்த்தார்.

"சுமந்திரனை நம்பாதே .. கழுத்தறுத்துவிடுவான்"

இதுவரை நன்றாகப் பேசிக்கொண்டிருந்த கொம்பியூட்டர் எதற்கு ரகசியமாக துண்டுச்சீட்டு அனுப்பவேண்டும்? சுமந்திரனை நம்பக்கூடாது என்றால் யாரை நம்பலாம்? என்னடா இது? வந்த இடத்தில் அடியும் நுனியும் புரியவில்லை என்றால் போதாக்குறைக்கு ஆபத்தை வேறு பக்கத்தில் வைத்திருக்கிறோமோ? சரி பூமியே அழிந்துவிட்டதாம். அதற்குமேல் என்ன தான் ஆகப்போகிறது? கந்தசாமி தனக்கு தானே தேற்றிக்கொன்டாலும் கால்கள் கட கடவென ஆடத்தொடங்கின. அப்போது தான்,

"என்ன கந்தசாமி .. பேயறைஞ்சவன் போல நிக்கிறாய்?"

என்று சொல்லிக்கொண்டே குளித்துவிட்டு தலையைத் துவாயால் துவட்டியவாறே சுமந்திரன் உள்ளே நுழைந்தார்.

(கலக்குவார் கந்தசாமி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டால், டிக்கி, டமால்

கிரிஷாந்த்



யாழ்ப்பாணத்தின் பக்கத்தில் ஒரு மினி நகரம் தான் திருநெல்வேலி. செல்லமாகவா தின்னவேலி என்று அழைப்பார்கள். இங்கே "மிடில் கிளாஸ்"தான் ஆதிக்கம் அதிகம். பெரும்பாலும் வியாபாரிகள், அரச உத்தியோகத்தர்கள்; வங்கிகளின் மற்றும் தனியார் கொம்பனிகளின் கொத்தடிமைகள் என்று நகரமே பரபரப்பாகதானிருக்கும். ஸ்பெஷலாக சொல்வதென்றால், தின்னவேலி மார்க்கெட் மிகப் பிரபலம். காலையிலேயே களை கட்டிவிடும். பொடி நடையாக நடந்துபோனால் பின்வருவனவற்றை நீங்கள் பார்க்கலாம்.

பீடியை இழுத்து பனியில் அற்புதமாக விடும் வீபூதி பூசிய வயதான முகங்கள், கொஞ்சம் தள்ளி மரக்கறி வந்து நிற்கும் வண்டிகள், மூடை தூக்கும் தொழிலாளிகள் ( அவர்கள் எப்போதும் மூடையை தூக்குவதில்லை, கைப்பற்றுவார்கள். எப்படி என்றால், ஒரு மோட்டார் சைக்கிளில் மூடை வருகிறதென்றால்,ஓடிப் போய் கொக்கியை மாட்டி விடுவார்கள், பிறகென்ன, சாவகாசமாக போய் இறக்கி வைப்பார்கள். அவ்வளவு போட்டி! இதுல கூட போட்டியா எண்டதும், ரொம்ப பீலிங் ஆகாம இருப்பீர்கள் என்றால், அவர்கள் பற்றிய சில கதைகளை உங்களுக்குச் சொல்கிறேன்)

திருநெல்வேலியைச் சுற்றியிருக்கும் இடங்களை எங்கள் வீடுகளில் கொலனி என்று குறிப்பிடுவார்கள். அவர்களில் அழகன்கள் இல்லை, அழகிகள் இல்லை, கிழவிகள் முதல் குமரிகள் வரை பெரும்பாலும் ஒரே நிறம்தான். கலைந்த தலைமுடி, நாறும் உடல், மண் ஒட்டிய தோல் இது தான் அவர்கள். தமிழ்நாட்டின் குப்பம், சேரி போன்ற இடங்களை சினிமாவில் பார்த்திருப்பதால், இவர்கள் அப்படி தானோ என்று நினைத்தேன், இருந்தும் இவர்கள் என் வயது பிள்ளைகள், (எனக்கு இப்போது வயது 20). 13 வயதில் பாரதியாரை தெரியும் வரை இவர்களை எனக்குக் கீழாகவே நினைத்திருந்தேன். பின், நான் பள்ளிக்கூடம் போனேன், அவர்கள் போகவில்லை. பள்ளிக்கூடங்களை பார்த்துப் பயந்தார்கள் அல்லது போக வசதியில்லை. கோயில் திருவிழாக்களில் அபிஷேகம் செய்த இளநீர் கோம்பைகளை நாங்கள் கொடுக்கவில்லை. ஆகவே, திருடினார்கள். நான் தங்கச் சங்கிலி போட்டிருந்தபோது, அவர்கள் சட்டை பட்டன் இல்லாமல் நின்றார்கள்.

இவை எனது கடந்தகால நினைவில் இருப்பவை. இப்பொழுது மீண்டும் அவர்களைப் பார்க்கிறேன். சைக்கிள் கடைகளில் வேலை செய்கிறார்கள். கையில் கொக்கிகளுடன் வீதியில் மூடை தூக்கிகளாக நிற்கிறார்கள். சிலர் என் முகத்தை தெரியாதது போல் திரும்பினார்கள். சிலர் எதற்கென்றே தெரியாமல் முறைத்தார்கள்.

இனி, அவர்களுடைய இன்றைய தலைமுறை பற்றிய கதை. டால் என்பவன்தான் இருப்பதிலேயே வயது கூடியவன். அநேகமாக அந்தக் கூட்டத்தின் தலைவன். அடுத்தது டிக்கி இவன்தான் இருக்கிறதிலேயே வயது குறைந்தவன். உள்ளாடை போடும் பழக்கம் அறவே இல்லையென்பதாலும், பின்புறத்தை எப்போதும் காட்டும் படி காற்சட்டை போடுவதாலும் அவனை டிக்கி என்று அழைப்போம். டமாலுக்கு, துப்பாக்கி சுடும் படங்கள்தான் மிகப் பிடிக்கும். சரி, இவர்கள் இப்போது என்னை செய்துகொண்டிருக்கிறார்கள் என்றால், யாருக்கும் தெரியாமல் கொத்து ரொட்டி சாப்பிட்டு விட்டு, எங்கள் வாசலில் கொட்டியிருக்கும் மணல் கும்பியில் ரெஸ்லிங் விளையாடுகிறார்கள்! அடி என்றால் அடி, மரண அடி, அந்த அடி எனக்கு விழுந்திருந்தால் அழுது கொண்டு அம்மாவிடம் போய் நின்றிருப்பேன். ஆனால், அவனோ, சிரித்துக் கொண்டு எழுந்து நின்றவன் தமிழ் சினிமாவின் அநேக கதாநாயகர்களில் ஒருவனாக தன்னைக் கற்பனை செய்துகொண்டு, டிக்கியை தூக்கி டமால் என்று தரையில் போட்டான். கழுத்தெலும்பு 'டிக்' என்றது, பயந்துபோன நான் பிடித்து நிறுத்தினேன், "அண்ணை பயந்துட்டார்" எண்டான் டால்.

அழுதுகொண்டு ஓடிய டிக்கியை பிடித்து சமாதானம் பண்ணினார்கள். அவனும் தினசரி பழக்கப்பட்டவன் தானே. சமாதானமாகிவிட்டான். நானும் அவன் பாவம் என்று நினைத்தேன்.

இரவில் அவன் செய்த ரவுடித்தனத்தை பார்த்தபோது, அடக் கடவுளே நானே நாலு போட்டிருப்பன். அவனது அப்பாவின் சாறத்தை பிடித்து இழுத்தான் (அவருக்கு இப்பொழுது தான் தாடி அரும்பியிருக்கிறது. ரொம்ப சின்ன வயசு. திருமணம்! அப்பா! குடும்பம்!) "அடிடா பாப்பம்" என்று அப்பாவை திட்டிக் கொண்டிருந்தான், பக்கத்து வீட்டுக்காரர்கள், "டேய், அப்பாண்ட சாறத்த கழட்றா, கழட்றா" என்று உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்தக் கண்கொள்ளாக் காட்சியைப் பார்த்து அடுத்த சில நாள்களில் டிக்கியின் அப்பா யாரையோ அடித்து விட, இறங்கிய பெண்கள் கூட்டம், பேசிய பேச்சென்ன! ஆடிய ஆட்டமென்ன. டிக்கி ,டமால் ஆகியோரின் சமவயதுக் குழந்தைகள் தெரு முழுதும் அலறினார்கள், கத்தினார்கள், ஆரவாரித்தார்கள். தடிகள், பியர் போத்தல்கள் ஆயுதமாயின. பின் கலைந்து சென்றனர். எப்போதும் நடப்பது போல். டால், நேற்று போகும்போது என்னைப் பார்த்து புன்னகைத்தான். டிக்கி ஒரு கொடுப்புச் சிரிப்பொன்று சிரித்தான் கடவுளும் சாத்தானும் வாழும் பகுதியில் ஒரு அப்பாவியாக இருக்கும் என்னை அவர்கள் ஏன் முறைக்கிறார்கள். ஏன் ஒதுங்குகிறார்கள். என் முன்னோர் சொன்ன சொற்கள் என்னிலும் ஒட்டியிருக்கும், அவர்களுக்குத் தெரிகிறதோ என்னமோ? அவர்கள் வீட்டில் என்னைப் பற்றி என்ன சொல்லியிருப்பார்கள். நான் சாத்தானா? கடவுளா?

## மாற்றமுடியுமா?

எமதர்மன் ஒரு மனிதனிடம் வந்து சொன்னான் "மனிதா! இன்றுதான் உன்னுடைய வாழ்கையின் கடைசி நாள் "

அதற்கு அந்த மனிதன் பதறிப்போய் "ஐயோ! எனக்கு நிறையக் கடமைகள் இருகின்றன. நான் உன்னுடன் வரத் தயாராக இல்லை" என்றான்.

எமதர்மன் சொன்னான் " அது முடியாதே , இன்று உன்னுடைய பெயர்தான் என்னுடைய பட்டிய லின் முதலில் உள்ளது .

உடனே மனிதன் யோசித்துவிட்டு, சரி,நீங்கள் இருக்கையில் உட்காருங்கள் ,நாம் இருவரும் புறப்படுவதற்கு முன் ஒரு கோப்பி குடித்துவிட்டு போகலாம் " என்று அன்பொழுகக் கூறினான்.

"சரி,அப்படியே செய்யலாம்" என்று கூறிய எமனும் மனிதன் கொடுத்த கோப்பியைக் குடித்த மறு நொடியே உறங்கிவிட்டான். எமனிடமிருந்து தப்பிப்பதற்காக கோப்பியில் மனிதன் தூக்க மருந்தைக் கலந்திருந்ததன் விளைவே அது.

எமன் தூங்கும் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்ட மனிதன், எமனின் பட்டியலை எடுத்து முதலில் இருந்த தன் பெயரை அழித்துவிட்டு, கடைசியாக வருமாறு எழுதிவிட்டான்.

எமதர்மன் தூக்கத்திலிருந்து எழுந்தவுடன் அந்த மனிதனிடம் நீ என்னிடம் மிகவும் நன்றாக, அன்பாக நடந்து கொண்டாய். என் மனமும் குளிர்ந்தது. அதனால் நானும் உனக்காக என்னுடைய முடிவை மாற்றி கொண்டேன்...அது என்னவென்றால் பட்டியலின் மேல் வரிசையில் இருந்து உயிரை எடுக்காமல் ,பட்டியலின் கீழ்வரிசையில் இருந்து உயிர்களை எடுக்க முடிவு செய்துள்ளேன்"என்றான்.

**கதையின் நீதி :**

நீ எவ்வளவு முயற்சி செய்தாலும் கூட .எல்லாம் விதியின்படிதான் நடக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நிஹாலே                புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டுவுடன் பிரபாகரன்

# சமரின் மறுபெயர்...

தலைவரின் பாதுகாப்புப் பொறுப்பிலிருந்து விலகிய பின்னர் சொர்ணம் முழுக்க முழுக்க ஒரு களத்தளபதி தான். களத்தில் சிறப்பாகச் செயற்பட்டால் மாத்திரமே ஜொலிக்க முடியும். ஆனால் அது சொர்ணத்தினால் முடியாமற் போனது. அவரது போர்முறை நவீன போர்முறைகளுக்குப் பொருந்தாமல் போனது. எனி ஞ் ஈழப்போர்க்களங்களில் அவரது போரியல் அணுகுமுறைக்கு இரண்டு சிறந்த உதாரணங்கள் உள்ளன. முதலாவது எற்கனவே குறிப்பிட்டபடி குடா சண்டை ன்று அழைக்கப்பட்ட கட்டைக்காடு அயுதக்களஞ்சியத் க்குதல். அந்தச் சண்டையில் அவர் ஒரு புதிய ாருத்தியை ஈழக்களங்களில் அறிமுகப்படுத்தினார். ரியின் தளத்துள் இரகசியமாக ஊடுருவிச் சென்று, ரியின் பின்னால் நிலையெடுத்துவிட்டு, எதிரியின் ியில் அடித்து அதிர்ச்சியடைய வைப்பது. ஈழக் ங்களில் அதனை நடைமுறைப்படுத்திக் காட்டி யவர் அவர்.

இன்னொன்று, பலாலி கிழக்கு காவலரண்களைத் தகர்த்தது. ஆயுதங்களை கடலுக்குள்ளால் நகர்த்திச் சென்று, எதிரியின் பிரதேசத்துக்குள் சேமித்து, அங்கிருந்தபடியே தயாராகித் தாக்குவது.

இம்ரான்-பாண்டியன் படையணியிலிருந்து விடு வித்து கொண்டதும், அவருக்கு இன்னொரு பணி காத்திருந்தது. அப்பொழுதுதான் விடுதலைப்புலிகள் கூட்டுப்படைத் தலைமையகம் என்ற ஒரு கட்டமைப்பை ஆரம்பித்தார்கள். அதன் முதலாவது தளபதியாக பால்ராஜ் நியமிக்கப்பட்டார். அவர் சிறந்த போர்த்தளபதியாக இருந்த போதும், பரந்துபட்டளவில் ஆளுமை செலுத்தும் தளபதியாக ஜொலிக்க முடியாமல் போனது. கூட்டுப்படைத் தலைமையகத்தின் தளபதியாக அவர் நியமிக்கப்பட்ட பின்னரும், அவர் முன்னர் வகித்த வன்னிமாவட்ட தளபதி அல்லது சாள்ஸ் அன்ரணி படையணி தளபதியாகவே செயற்படுகின்றார் என்ற விமர்சனம் அவர் மேல் வைக்கப்பட்டது. அவர் தனது அத்தனை நடவடிக்கைகளுக்கும் மேற்படி இரண்டு அணிகளையுமே நம்பியிருந்தார். அல்லது அவர்களை வைத்தே திட்டமிட்டு, காரியமாற்றினார்.

இந்த விமர்சனங்களையடுத்து சொர்ணம் கூட்டுப்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். அவரது காலத்தில்தான் யாழ்ப்பாணத்தின் மீது இராணுவம், சூரியக்கதிர் நடவடிக்கையை ஆரம்பித்தது. சூரியக்கதிர் போன்ற ஒரு பிரமாண்டமான நடவடிக்கையை புலிகள் அதற்கு முன்னர் எதிர்கொண்டிருக்கவில்லை. அதனைச் சமாளிக்கும் வல்லமையும் அவர்களிடம் இருக்கவில்லை. நடவடிக்கையின் சின்னச்சின்ன முனைகளில் நடந்த தவறுகளுக்கும், தோல்விகளுக்கும் சிலர் காரணமாக இருந்திருக்கலாம். அப்படி இந்த தோல்விகளின் பழியை ஏற்றவர்கள் மூவர்.

முதலாமவர் களத்திலேயே உயிர் துறந்தார். அவர் மணலாறு மாவட்டத் தளபதியாக இருந்த மேஜர் வெள்ளை. புத்தூரில் பெருமளவு போராளிகளுடன் ஊடுருவித் தாக்குதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டார். ஆயினும் அது பெருந்தோல்வியில் முடிவடைந்தது. அந்தச் சமரில் வெள்ளை வீரச்சாவடைந்தார். அந்த களத்தில் ஏராளமான போராளிகளை இழந்ததற்கு வெள்ளையின் போர்த் தந்திரங்களின் குறைபாடு காரணமாக கூறப்பட்டது. இத்தனைக்கும் அவர் தலைசிறந்த சண்டைக்காரனாக அறியப்பட்டிருக்கவில்லை. நிர்வாகத்திறன் மிக்கவராகத்தான் அறியப்பட்டிருந்தார். அவர் முக்கிய பங்காற்றிய களங்களின் சரிவிற்கு இதற்கு முன்னரும் சில உதாரணங்கள் இருந்தன. அதனால் அவருக்கு மரணத்தின் பின் மேஜர் படிநிலையே வழங்கப்பட்டது. மிகச்சாதாரணமாகவே அவருக்கு லெப்.கேணல் தர நிலை வழங்கப்படும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. இந்த அதிர்ச்சியை அவர் தளபதியாக இருந்த மணலாற்று மக்கள் வெளிப்படுத்தினார்கள்.

இன்னொருவர் ரவி. வலிகாமம் முழுமையாக விடுபட்ட பின்னர், அவர்தான் யாழ். போர்நடவடிக்கைகளை களத்தில் வழிநடத்தினார். சூரியக்கதிர் நடவடிக்கை ஆரம்பித்தபோது, அவ்வளவு பிரபல்யமில்லாதவராக இருந்தவர், சில வாரங்களிலேயே நட்சத்திரமாகி, கள முனைப் பொறுப்பையும் எடுத்துக் கொண்டார். தென்மராட்சி நோக்கி படையினர் நகர்ந்தபோது, அவர்களை எதிர்கொள்ளப் போராளிகள் இருக்கவில்லை. மிக இலகுவாக இரவுநகர்வில் படையினர் உள்நுழைந்தனர். இத்தனைக்கும், படையினர் உள்நுழைந்த பகுதிகளைப் பாதுகாக்க ரவியிடம் தாக்குதலணிகள் வழங்கப்பட்டிருந்தன. அவர் உரிய இடத்தில் அவர் களை நிறுத்தவில்லை. தனக்கு வழங்கப்பட்ட மகளிர் படையணியை மேலதிக அணியாகப் பின்தளத்தில் நிறுத்தி வைத்திருந்தார். இது படையினருக்கு வாய்ப்பாகி, மிகச் சுலபமாக சாவகச்சேரிக்குள் நுழைந்தனர். வன்னிக்கு புலிகள் பின்வாங்கிய பின்னர், இதற்கான தண்டனை ரவிக்கு வழங்கப்பட்டது. அவர் ஏழுபேர் கொண்ட அணியில் ஒருவராக இருக்க கணிக்கப்பட்டார்.

மூன்றாமவர், சொர்ணம். அவர்தான் யாழ்.களத்தை ஒட்டுமொத்தமாகக் கவனித்தவர். அவரது முதலாவது வீழ்ச்சி இங்குதான் ஆரம்பித்தது. அவர் திருகோணமலைத் தளபதியாக அனுப்பப்பட்டார். இதன் பின்னர் அவரது வாழ்வில் ஏறுமுகமே இருக்கவில்லை. ஒவ்வொரு களத்திலும், ஒவ்வொரு பருவத்திலும் அவர் வீழ்ச்சியடைந்து கொண்டேயிருந்தார். ஒரு போர்ப் பிரபுவைப் போல நடமாடிய அவரது போர் முறை களை நகைச்சுவைக்குரிய ஒன்றாகப் போராளிகள் மத்தியில் ஆக்கியது. ஒரு பக்கம் அவர் வழிநடத்திய களங்களின் தொடர் தோல்விகள்.. மறுபுறம் அவரது தலைவரில் கொண்டிருந்த அளவற்ற விசுவாசத்தின் பலாபலன்கள் என இருதுரும்புகளுக்கிடையில் அவர் தத்தளித்து கொண்டிருந்தார்.

(களங்கள் விரியும்)

பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர் அணியான இம்ரான் - பாண்டியன் படையணியின் சிறப்பு உந்துருளி அணி.....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக தரம் வாய்ந்த சுகாதார பராமரிப்பு இலங்கை மக்களுக்காக

## Joint Commission International (JCI)

GOLD SEAL OF APPROVAL™

# டேர்டன்ஸ் மருத்துவமனை அங் கரிக்கப்பட்டுள்ளது


1st JCI அங் கரிக்கப்பட்ட முதல் மருத்துவமனை

டேர்டன்ஸ் மருத்துவமனையை ஐக்கிய அமெரிக்க குடிய சில் அமைந்துள்ள சர்வதேச பொது ஆணைக்குழுவினால் Joint Commission International உலக தரம் வாய்ந்த சுகாதார பராமரிப்பு நிறுவனமென உத்தியோகபூர்வமாக அங் கரித்து சான்றுப்படுத்தப்பட்டுள்ளது.

டேர்டன்ஸ் மருத்துவமனை இலங்கையின் மருத்துவ துறை வரலாற்றில் சர்வதேச பொது ஆணைக்குழுவினால் Joint Commission International உலக தர சுகாதார பராமரிப்பு வழங்குத ல் Gold Seal of Approval™ (பொன் தர சான்றிதழை) பெற்ற முதல் மருத்துவமனையா விளங்குகின்றது. ர்வதேச பொது ஆணைக்குழுவானது (JCI) மேம்படுத்தப்பட்ட உலக தர சுகாதார பராமரிப மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பு என்பவற்றை இனம் கண்டு, அறவீடு செய்து மேம்படுத்தப்பட்ட உலக தர சுகாதார பராமரிப்பு சேவையை வழங்க அனைத்து சுகாதார பராமரிப்பு நிறுவனங்களுக்கும் தலைமைத்துவத்தையும் அறிவுறுத்தல்களையும் வழங்குகின்றது. இதன் படி நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் தரமிக்க பராமரிப்பு ஆகியவைகளின் சர்வதேச தர யுக்திகளை கையாளுகின்றமைக்காகவே சர்வதேச பொது ஆணைக்குழுவினால் (JCI) இப்பொன்முத்திரை சான்றிதழ் எமக்கு சான்றப்பட்டுள்ளது.

இலங்கை முதல் தர மருத்துவ மனையாக விளங்கும் டேர்டன்ஸ் மருத்துவமனை சர்வதேச தரம் வாய்ந்த சுகாதார பராமரிப்பு நிறுவனமாக இனம் கண்டு கொண்டமையினால் இலங்கையின் சுகாதார பராமரிப்பு சேவையை சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்ல நாம் முன்னின்றமைக்காக பெருமை அடைகின்றோம். இம்மாபெரும் சாதனை டேர்டன்ஸ் மருத்துவ மனைக்கு மட்டுமல்லாது அனைத்து இலங்கையின் சுகாதார பராமரிப்பு சேவையையும் சார்ந்ததேயாகும் என்பதையும் எமக்கு தொடர்ந்து தங்களின் ஒத்துழை வழங்கி வரும் அனைவருக்கும் எமது நிறுவனத்தின் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

DURDANS HOSPITAL
A Heritage Built On Values And Expertise



- Gym Facilities
- Swimming Pool
- Functional Hall and Barbecue Pavilion in Rooftop

3 Bed Room for Rs. 9.9 Mn.

நம்பமுடியாத விலைக்குறைப்பு

# CORAL MANSION

Luxury Apartments

No. 37, Daya Road, Wellawatta.

Coral Property Developers
No. 58, Davidson Rd, Colombo 04.

C/15576

Contact : 0777 994403 | 0777 994407 | 0777 994408

E | marketing@coral.lk
W | www.coral.lk

உங்கள் நம்பிக்கையை வென்ற Facia குடும்பத்தின் புதிய அங்கத்தவர்

Facia Applicap Gold
Night Recovery Oil




Alaris
touching aspirations

Facia Capsule உங்கள் தோல், முடி மற்றும் முடியை மெருகூட்டும்

Facia Gold Applicap கண்ணுக்கு கீழ் கருமையாதல், சருமம் வரட்சியடைதல் மற்றும் முகப்பரு மற்றும் வடுக்களை அகற்றும்.



Alaris Lanka (Pvt) Limited.
மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்
077 3540878


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெருகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் எண்டர் பிரைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஓகஸ்ட் 06 ஆம் திகதி வெளியிடப்பட்டது.